J. V. STALIN

# ECONOMIC PROBLEMS OF SOCIALISM IN THE U.S.S.R.

ஜே.வி.ஸ்டாலின்

# சோவியத் சோசலிச குடியரசு ஒன்றியத்தில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சனைகள்

ஜே.வி.ஸ்டாலின்

# சோவியத் சோசலிச குடியரசு ஒன்றியத்தில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சனைகள்

ஃபாரீன் லேங்வேஜஸ் பிரஸ்
பீகிங் 1972

முதல் பதிப்பு 1972

## பதிப்பாளர் குறிப்பு

ஜே.வி.ஸ்டாலினின் சோவியத் சோசலிச குடியரசு ஒன்றியத்தில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சனைகள் என்ற அறிக்கையின் இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு, மாஸ்கோவில் 1952ல் அதே பெயரில் வெளியிடப்பட்ட ஆங்கில அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள மூலப்பொருளின் மறுஅச்சு ஆகும். அறிக்கையின் பிற ஆங்கில மொழிபெயர்ப்புகளுக்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. புத்தகத்தின் இறுதியில் காணப்படும் குறிப்புகள், 1971 மார்ச்சில், பீகிங்கின் பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ் வெளியிட்ட சீனப் பதிப்பில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டவை.

சீன மக்கள் குடியரசில் அச்சடிக்கப்பட்டது

உள்ளடக்கம்

1951 நவம்பர் விவாதங்களில்
பொருளாதாரப் பிரச்சனைகள் தொடர்பான குறிப்புகள்

1. சோசலிசத்தில் பொருளாதார விதிகளின் இயல்பு

2. சோசலிசத்தில் பண்ட உற்பத்தி

3. சோசலிசத்தில் மதிப்பு விதி

4. நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையிலான முரண்பாட்டை ஒழிப்பது மற்றும் இவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை களைவது

5. ஒற்றை உலகச் சந்தை சிதறுண்டதும் உலக முதலாளித்துவ கட்டமைப்பின் நெருக்கடி ஆழமடைவதும்

6. முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான போர் தவிர்க்க முடியாதது

7. நவீன முதலாளித்துவத்தின் நவீன சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதிகள்

8. பிற பிரச்சனைகள்

9. அரசியல் பொருளாதாரம் குறித்த மார்க்சியப் பாடநூலின் சர்வதேச முக்கியத்துவம்

10. அரசியல் பொருளாதாரம் பற்றிய வரைவு பாடப்புத்தகத்தை மேம்படுத்துவதற்கான வழிகள்

தோழர் அலெக்சாண்டர் இலியிச் நோட்கினுக்கு பதில்

தோழர் எல்.டி.யரோஷென்கோவின் பிழைகள் தொடர்பாக

1. தோழர் யரோஷென்கோவின் முதன்மை பிழை

2. தோழர் யரோஷென்கோவின் பிற தவறுகள்

தோழர்கள் ஏ.வி.சனினா, வி.ஜி.வென்சர் ஆகியோருக்கு பதில்

1. சோசலிச பொருளாதார விதிகளின் இயல்பு

2. கூட்டுப் பண்ணை சொத்தை பொதுச் சொத்தின் நிலைக்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகள்

குறிப்புகள்

பொருளாதார விவாதத்தில்
பங்கேற்பவர்களுக்கு

## 1951 நவம்பரில் நடந்த விவாதங்களில் பொருளாதாரப் பிரச்சனைகள் தொடர்பான குறிப்புகள்

அரசியல் பொருளாதாரம் மீதான பாடப் புத்தக நகலை மதிப்பீடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்ட பொருளாதார விவாதம் தொடர்பான அனைத்து விவரங்களும் எனக்கு வந்து சேர்ந்தன. 'அரசியல் பொருளாதாரம் மீதான பாடப் புத்தக நகலை செழுமைப்படுத்துவதற்கான முன்வைப்புகள்', நகலில் உள்ள 'தவறுகளை, துல்லியமல்லாதவற்றை நீக்குவதற்கான முன்வைப்புகள்', 'சர்ச்சைக்குரிய பிரச்சனைகள் பற்றிய குறிப்புகள்' ஆகியவை பற்றிய விவரங்களும் அதில் இருந்தன.

இந்த அனைத்து விவரங்கள் பற்றியும், பாடப் புத்தக நகல் பற்றியும் பின்வரும் குறிப்புகளை முன்வைப்பது அவசியம் என்று கருதுகிறேன்.

## 1. சோசலிசத்தில் பொருளாதார விதிகளின் இயல்புகள்

விஞ்ஞான விதிகளின் புறவயப்பட்ட இயல்புகளை, மற்றும் குறிப்பாக, சோசலிசத்தில் அரசியல் பொருளாதார விதிகளை சில தோழர்கள் மறுக்கிறார்கள். மனிதனின் விருப்பங்களில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக செயல்படும் விதிகளுக்கு உட்பட்ட இயக்கப்போக்குகளையே அரசியல் பொருளாதார விதிகள் பிரதிபலிக்கின்றன என்பதை அவர்கள் மறுக்கின்றனர்.
வரலாறு சோவியத் அரசுக்குத் தந்திருக்கிற குறிப்பான பாத்திரத்தின் அடிப்படையில், சோவியம் அரசும் அதன் தலைவர்களும் நிலவுகிற அரசியல் பொருளாதார விதிகளை அழித்துவிட்டு, புதிய விதிகளை "வடிவமைக்க" முடியும், "படைக்க" முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

அவர்கள் முற்றிலும் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். இயற்கையின் அல்லது சமூகத்தின் புறநிலை இயக்கப்போக்குகளை பிரதிபலிக்கும் விஞ்ஞான விதிகளை, மனிதனின் விருப்பங்களுக்கு அப்பாற்பட்டு நிகழும் இயக்கப்போக்குகளை, அரசாங்கங்களின் உத்தரவு பிறப்பிக்கும் விதிகளுடன், மனிதர்களின் விருப்பத்தால் உருவாக்கப்பட்டு, நீதிபரிபாலன முறைப்படி மட்டும் செல்லுபடியாகும் விதிகளுடன் குழப்பிக் கொள்கிறார்கள். ஆனால், அவற்றை குழப்பிக் கொள்ளக் கூடாது.

விஞ்ஞான விதிகளை - இயற்கை விஞ்ஞான விதிகளோ, அரசியல் பொருளாதார விதிகளோ - மனிதனின் விருப்பங்களில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக இயங்கும் புறநிலை இயக்கப்போக்குகளின் பிரதிபலிப்பாகவே, மார்க்சியம் கருதுகிறது. மனிதன் இந்த விதிகளை கண்டுபிடிக்கக் கூடும்; அவற்றை அறிந்து கொள்ளக் கூடும்; அவற்றை ஆய்வுக்குட்படுத்தக் கூடும்; தனது நடவடிக்கைகளில் அவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடும்; சமூக நலன்களுக்காக அவற்றை பயன்படுத்திக் கொள்ளக் கூடும்; ஆனால் மனிதரால், அவற்றை மாற்றவோ, அழிக்கவோ முடியாது. புதிய விஞ்ஞான விதிகளை வடிவமைக்கவோ, உருவாக்கவோ முடியவே முடியாது.

இயற்கை விதி செயல்பாடுகளின் விளைவுகள், இயற்கை கொண்டுள்ள வல்லமையின் செயல்பாடுகளின் விளைவுகள் பொதுவாக தவிர்க்க முடியாதவை, இயற்கை கொண்டுள்ள

வல்லமையின் நாசகர செயல்பாடுகள் எப்போதும் எங்கேயும், மனிதனின் செல்வாக்குக்குக் கட்டுப்படாத, தனிப்பட்ட இயல்புடன் இரக்கமற்ற சக்தியுடன் முன்னேறிச் செல்பவை என்று இதற்குப் பொருளாகுமா? இல்லை. அப்படியில்லை. விண்வெளி சார்ந்த, புவிசார்ந்த மற்றும் அதுபோன்ற இயக்கப் போக்குகள், அவற்றின் வளர்ச்சிப் போக்குகளின் விதிகளை அறியப் பெற்றால் கூட, மனிதர் தாக்கம் செலுத்தும் வல்லமை பெறாத இயக்கப் போக்குகள் தவிர, இயற்கையின் வேறு பல இயக்கப்போக்குகள் மீது தாக்கம் செலுத்த முடியும் என்ற பொருளில் சக்தியற்றவராக மனிதர் இல்லை. அது போன்ற எல்லா இயக்கப்போக்குகளிலும் இயற்கையின் விதிகளை அறிந்திருப்பதால், அவற்றின் செயல்பாட்டின் பரப்பை மனிதர் கட்டுப்படுத்த முடியும்; இயற்கையின் நாசகர வல்லமையை கணக்கில் எடுத்துக் கொண்டு, அவற்றைச் சார்ந்து, அவற்றை புத்திகூர்மையுடன் பொருத்தி, பயன்படுத்தி, அவற்றின் செயல்பாட்டின் பரப்பை கட்டுப்படுத்த முடியும்; இயற்கையின் நாசகர வல்லமைக்கு வேறு ஒரு திசைவழியைத் தந்து அவற்றை சமூகத்துக்கு பயன் தருபவையாக மாற்ற முடியும்.

பல்வேறு உதாரணங்களில் ஒன்றை எடுத்துக் கொள்வோம்; பழைய நாட்களில் பெரிய ஆறுகளில் ஏற்படும் வெள்ளம், வீடுகளை விளைபொருட்களை அழித்துவிட்டுச் சென்றபோது, அது தவிர்க்க முடியாத பேராபத்து என்று கருதப்பட்டது; அதை எதிர்கொள்ள மனிதர் சக்தியற்றவர் என்று கருதப்பட்டது. ஆனால், நாட்கள் கடந்தபோது, மானுட அறிவும் வளர்ந்தபோது, அணைகளை, நீர்மின்நிலையங்களை கட்டியெழுப்ப மனிதர் கற்றுக்கொண்டபோது, தவிர்க்கவே முடியாதது என்று முன்னர் கருதப்பட்ட வெள்ளத்தின் பேராபத்தில் இருந்து சமூகத்தைப் பாதுகாப்பது சாத்தியமானது. மேலும், இயற்கையின் நாசகர சக்திகளை கட்டுப்படுத்த, அவற்றை பயன்படுத்த, அதாவது, நீரின் சக்தியை சமூகத்துக்காகப் பயன்படுத்த, வயலுக்கு பாசனத்துக்காகவும் மின்சாரம் உற்பத்தி செய்யவும் மனிதர் கற்றுக்கொண்டனர்.

இயற்கையின் விதிகளை, விஞ்ஞான விதிகளை அழித்து, புதிய இயற்கை விதிகளை, புதிய விஞ்ஞான விதிகளை மனிதர் உருவாக்கிவிட்டனர் என்று இதற்குப் பொருளாகுமா? இல்லை. அப்படிப் பொருளாகாது. இந்த செயல்முறை அனைத்துமே, விஞ்ஞான விதிகளை மீறாமல், மாற்றாமல், அழிக்காமல், அல்லது புதிய விஞ்ஞான விதிகளை உருவாக்காமல், நீரின் நாசகர வல்லமையை மடைமாற்றி, அதை சமூகத்தின் நலனுக்காகப் பயன்படுத்துவதுதான். மாறாக, இந்த செயல்முறை அனைத்துமே, இயற்கை விதிகளுக்கு, விஞ்ஞான விதிகளுக்கு கறாராக உட்பட்டு மேற்கொள்ளப்பட்டதுதான். ஏனென்றால், இயற்கை விதிகளின் எந்த சிறிய விதிமீறலும் இந்த முயற்சிகளை சீர்குலைத்து அவற்றை பயனற்றவையாக்கியிருக்கும்.

முதலாளித்துவ காலத்தினுடையது என்றாலும் சோசலிச காலத்தினுடையது என்றாலும் பொருளாதார வளர்ச்சி விதிகளும், அரசியல் பொருளாதார விதிகளும் அதேபோல்தான். இங்கும், பொருளாதார வளர்ச்சியின் விதிகள், இயற்கை விஞ்ஞான விதிகள் போலவே புறவயப்பட்டவை; மனிதரின் விருப்பங்களில் இருந்து விடுபட்டு சுதந்திரமான இயக்கப்போக்குகளை பிரதிபலிப்பவை. மனிதர் இந்த விதிகளை கண்டுபிடிக்க முடியும்; அவற்றை அறிந்துகொள்ள முடியும்; அவற்றைச் சார்ந்திருக்க முடியும்; சமூகத்தின் நலன்களுக்காக அவற்றை பயன்படுத்த முடியும்; சில விதிகளின் நாசகர செயல்பாட்டுக்கு வேறொரு திசைவழியைத் தர முடியும்; அவற்றின் செயல்பாட்டுப் பரப்பை கட்டுப்படுத்த முடியும்; உந்தித் தள்ளிக் கொண்டு முன்களத்துக்கு வருகிற விதிகளுக்கு முழுமையான வாய்ப்புகளையும் தர முடியும்; ஆனால், அவற்றை அழிப்பதோ, புதிய பொருளாதார விதிகளை உருவாக்குவதோ மனிதரால் முடியாது.

இயற்கை விஞ்ஞானத்தின் விதிகள் போல் அல்லாமல், அரசியல் பொருளாதார விதிகளின் தனித்தன்மை கொண்ட ஓர் இயல்பு என்னவென்றால், அவை நிரந்தரத்தன்மையற்றவை; அவை, அல்லது அவற்றில் பெரும்பாலானவை, ஒரு வரையறுக்கப்பட்ட வரலாற்று காலகட்டத்தில் அவை செயல்படுகின்றன; அதற்குப் பிறகு அவை புதிய விதிகளுக்கு வழிவிடுகின்றன. ஆயினும் இந்த விதிகள் அழிக்கப்படுவதில்லை. புதிய பொருளாதார நிலைமைகளால், அவை அவற்றின் பயன்மதிப்பை இழந்துவிடுகின்றன; புதிய விதிகளுக்கு இடம் தர களத்தில் இருந்து வெளியேறுகின்றன; மனிதரின் விருப்பத்தால் உருவாக்கப்பட்ட விதிகள் அல்ல அவை; அவை புதிய பொருளாதார நிலைமைகளில் இருந்து உருவானவை.

எங்கல்சின் டூரிங்குக்கு மறுப்பு நூலில், முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டி, உற்பத்தி சக்திகளை சோசலிசப்படுத்தும்போது, மனிதர் தனது உற்பத்தி சக்திகள் மீது கட்டுப்பாடு பெறுகிறார்; சமூக பொருளாதார உறவுகளின் நுகத்தடியில் இருந்து அவர் விடுவிக்கப்படுகிறார்; அவரே, அவரது சமூக வாழ்வின் "எசமானராகிறார்" என்ற எங்கல்சின் சூத்திரம் பற்றி குறிப்பிடப்படுகிறது. இந்த சுதந்திரத்தை "அவசியமானதை அங்கீகரிப்பது" (1) என்று எங்கல்ஸ் என்று அழைக்கிறார். அந்த "அவசியமானதை அங்கீகரிப்பது" என்பதன் பொருள் என்ன? ("அவசியமானதன்") புறவயப்பட்ட விதிகளை அறிந்துகொண்ட மனிதர், சமூகத்தின் நலனுக்காக அதை முழுமையான உணர்வுடன் பொருத்துகிறார் என்பதாகும். அதனால்தான் எங்கல்ஸ் அதே நூலில் இப்படிச் சொல்கிறார்:

"இயற்கையின் விதிகள் போலவே இது வரை நேருக்கு நேர் அந்நியமானவையாக, ஆதிக்கம் செலுத்துபவையாக இருந்த மனிதரின் சமூக நடவடிக்கைகளின் விதிகள், இனி முழுமையான புரிதலுடன் பயன்படுத்தப்படும்; மனிதரால் கட்டுப்படுத்தப்படும்". (2)

சோசலிசத்தில் நிலவுகிற பொருளாதார விதிகள் அழிக்கப்பட்டு, புதியவற்றை உருவாக்க முடியும் என்று கருதுபவர்களுக்கு ஆதரவாக எங்கல்சின் சூத்திரம் எதுவும் சொல்லவில்லை என்று நம்மால் காண முடிகிறது. மாறாக, பொருளாதார விதிகளை அழித்துவிடுவதல்லாமல், அவற்றை புரிந்துகொண்டு புத்திகூர்மையுடன் பொருத்த வேண்டும் என்றுதான் சொல்கிறது.

பொருளாதார விதிகள் உட்கூறுதன்மை கொண்டவை, அவற்றின் செயல்பாட்டை தவிர்க்க முடியாது, சமூகம் அவற்றுக்கெதிராக சக்தியற்றதாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இது உண்மையல்ல. இது விதிகள்பால் பக்திநிலை கொள்ள வைக்கிறது; அப்படி கருதுபவரை விதிகளின் அடிமையாக்குகிறது. இயற்கையின் வல்லமையை, அதன் விதிகளை, மேலே சொன்ன எடுத்துக்காட்டில் பெரிய ஆறுகளில் உருவாகும் வெள்ளம் தொடர்பாகச் சொன்னதுபோலவே, பொருளாதார விதிகளை தெரிந்துகொண்டு, அவற்றைச் சார்ந்து, அவற்றின் செயல்பாட்டுப் பரப்பை சமூகம் கட்டுப்படுத்த முடியும், சமூகத்தின் நலன்களுக்காக அவற்றை பயன்படுத்த முடியும், அவற்றை திறம்பட இணைக்க முடியும், இந்த விதிகளுக்கு எதிராக சமூகம் சக்தியற்றது அல்ல என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

சோசலிசத்தைக் கட்டியெழுப்புவதில், சோவியத் அரசாங்கத்தின் குறிப்பான பாத்திரம் பற்றியும், இதனால் பொருளாதார வளர்ச்சியின் நிலவுகிற விதிகளை அழித்துவிட்டு, புதிய விதிகளை "படைக்கஷ௳ முடிகிறது என்றும் சொல்லப்படுகிறது. இதுவும் உண்மையல்ல.

சோவியத் அரசாங்கத்தின் குறிப்பான பாத்திரம் இரண்டு சூழ்நிலைமைகளால் உருவானது: முதலாவதாக, முந்தைய புரட்சிகளில் நடந்ததுபோல, ஒரு வடிவத்திலான சுரண்டலின் இடத்தில் இன்னொரு வடிவத்திலான சுரண்டலை கொண்டு வருவது சோசலிச அரசாங்கத்தின் வேலையல்ல; அது சுரண்டலையே முழுமையாக ஒழிப்பதாகும்; இரண்டாவதாக, சோசலிசப் பொருளாதாரத்தின் தயார்நிலையில் இருந்த அடிப்படை கூறுகள் எதுவும் இல்லை; "சிதறிக்

கிடந்தவற்றில் இருந்து துவங்கி", புதிய, சோசலிசப் பொருளாதார வடிவங்களை, அது படைக்க வேண்டியிருந்தது.

சந்தேகத்துக்கிடமின்றி, இது ஒரு கடினமான, சிக்கலான, முன்னெப்போதும் சந்தித்திராத ஒரு கடமைதான். ஆயினும், சோவியத் அரசாங்கம் அந்தக் கடமையை திறம்பட நிறைவேற்றியது. ஆனால், நிலவுகிற பொருளாதார விதிகளை ஒழித்துவிட்டு, புதிய விதிகளை "படைப்பதன் மூலம்" அல்லாமல், உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் இயல்புடன் கட்டாயமாக பொருந்திப் போக வேண்டும் என்ற பொருளாதார விதியைச் சார்ந்திருந்து இந்தக் கடமையை நிறைவேற்றியது. நமது நாட்டின் உற்பத்தி சக்திகள், குறிப்பாக தொழில் துறையில், இயல்பில் சமூகமயமானவை; மறுபுறம் அவற்றின் உடைமை வடிவில், அவை தனியுடைமை, முதலாளித்துவ தன்மை கொண்டவை. உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் இயல்புடன் கட்டாயமாக பொருந்திப் போக வேண்டும் என்ற பொருளாதார விதியைச் சார்ந்திருந்து சோவியத் அரசாங்கம், உற்பத்தி சக்திகளை சோசலிசமயமாக்கியது; அவற்றை ஒட்டுமொத்த மக்களின் உடைமையாக்கியது; அதன் மூலம், சுரண்டல் கட்டமைப்பை ஒழித்து, சோசலிச பொருளாதாரத்தின் வடிவங்களை படைத்தது. இந்த விதி இல்லாமல் இருந்திருந்தால், சோவியத் அரசாங்கம் அந்த விதியைச் சாராமல் இருந்திருந்தால், இந்தக் கடமையை அதனால் நிறைவேற்றியிருக்க முடியாது.

முதலாளித்துவ நாடுகளில், உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் இயல்புடன் கட்டாயமாக பொருந்திப் போக வேண்டும் என்ற பொருளாதார விதி முன்களத்துக்கு வர நீண்ட காலமாக தன்னை உந்திச் செலுத்துகிறது. தன்னை உந்திச் செலுத்துவதில் இதுவரை அது தோல்வியடைந்துள்ளது என்றால், அது சமூகத்தின் வழக்கொழிந்துபோன சக்திகளின் கடுமையா எதிர்ப்பை சந்திக்கிறது என்பதால்தான். இங்கு பொருளாதார விதிகளின் மற்றுமொரு தனிச்சிறப்புமிக்க இயல்பை காண முடிகிறது. புதிய விதியை கண்டுபிடிப்பதும் பொருத்துவதும் கிட்டத்தட்ட சுமுகமாக நடந்தேறும் இயற்கை விஞ்ஞானத்தின் விதிகள் போல் அல்லாது, பொருளாதாரத் தளத்தில் புதியதொரு விதியை கண்டுபிடிப்பதும் அதைப் பொருத்துவதும், சமூகத்தின் வழக்கொழிந்துபோன சக்திகளின் நலன்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதால், அந்த சக்திகள் தரப்பில் இருந்து கடுமையான எதிர்ப்பை சந்திக்கிறது. எனவே, ஒரு சக்தி, ஒரு சமூக சக்தி, இந்த எதிர்ப்பை முறியடிக்கும் ஆற்றல் கொண்ட ஒரு சக்தி அவசியமாகிறது. நமது நாட்டில், ஏகப்பெரும்பான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர் வர்க்கமும் விவசாய சமூகமும் இணைந்த கூட்டணி அதுபோன்ற ஒரு சக்தியாகும். பிற முதலாளித்துவ நாடுகள் அது போன்ற ஒரு சக்தி இது வரை இல்லை. சோவியத் அரசாங்கம் சமூகத்தின் பழைய சக்திகளை நொறுக்கித் தள்ள எப்படி முடிந்தது, உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் இயல்புடன் கட்டாயமாக பொருந்திப் போக வேண்டும் என்ற பொருளாதார விதி நமது நாட்டில்  முழுமையான வாய்ப்புகளை ஏன் பெற்றது என்பதன் ரகசியம் இதுதான்.

நமது நாட்டில் தேசிய பொருளாதாரத்தின் சமநிலை கொண்ட (பொருந்துகிற) வளர்ச்சியின் அவசியம், நிலவுகிற பொருளாதார விதிகளை ஒழித்து புதிய விதிகளைப் படைக்க சோவியத் அரசாங்கத்துக்கு ஆற்றல் தந்தது என்று சொல்லப்படுகிறது. இது முற்றிலும் தவறாகும். நமது வருடாந்திர மற்றும் அய்ந்தாண்டு திட்டங்களை, தேசிய பொருளாதாரத்தின் சமநிலை கொண்ட, பொருந்துகிற வளர்ச்சியின் புறவயப்பட்ட பொருளாதார விதியுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது. முதலாளித்துவ உற்பத்தியில் போட்டி மற்றும் அராஜகம் என்ற விதிக்கு எதிராக, தேசிய பொருளாதாரத்தின் சமநிலை கொண்ட வளர்ச்சியின் விதி உருவானது. உற்பத்தியில் போட்டி மற்றும் அராஜகம் என்ற விதி மதிப்பிழந்து போன பின், உற்பத்தி சக்திகள் சோசலிசமயமாக்கப்பட்டதில் இருந்து அது உருவானது. தேசிய பொருளாதாரத்தின் சமநிலை கொண்ட வளர்ச்சியின் பொருளாதார விதியின் அடிப்படையில் மட்டுமே ஒரு சோசலிசப்

பொருளாதாரம் நடத்தப்பட முடியும் என்பதால் அது செயலுக்கு வந்தது. தேசிய பொருளாதாரத்தின் சமநிலை கொண்ட வளர்ச்சி, சமூக உற்பத்தியை சரியாக திட்டமிடுவதை, நமது திட்டமிடும் அமைப்புகளுக்கு சாத்தியப்படுத்தித் தந்தது. ஆனால், சாத்தியப்பாட்டை, யதார்த்தத்துடன் குழப்பிக் கொள்ளக் கூடாது. இதில் இரண்டு வேறு வேறு அம்சங்கள் உள்ளன. சாத்தியப்படுவதை யதார்த்தமாக மாற்ற, இந்த பொருளாதார விதியை ஆய்வுக்குட்படுத்துவது, அதன் மீது கட்டுப்பாடு செலுத்துவது, முழுமையான புரிதலுடன் அதை அமல்படுத்துவதற்காக அதை கற்றுக்கொள்வது, இந்த விதியின் நிபந்தனைகளை முழுவதுமாக பிரதிபலிக்கும் திட்டங்களை தொகுப்பது ஆகியவை அவசியமாகின்றன. இந்தப் பொருளாதார விதியின் நிபந்தனைகள் நமது வருடாந்திர மற்றும் அய்ந்தாண்டு திட்டங்களில் முழுமையாக பிரதிபலிக்கின்றன என்று சொல்ல முடியாது.

நமது நாட்டின் சோசலிசத்தில் செயல்படும் மதிப்பு விதி உள்ளிட்ட சில பொருளாதார விதிகள், திட்டமிட்ட பொருளாதாரத்தின் அடிப்படையில் "மாற்றியமைக்கப்பட்டுள்ளனஷெ, "புரட்சிகரமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன" என்று சொல்லப்படுகிறது. இதுவும் தவறாகும். விதிகளை மாற்ற முடியாது. அவற்றை புரட்சிகரமாக மாற்றியமைக்கவே முடியாது. அவற்றை மாற்ற முடியும் என்றால், அவற்றை "ஒழித்துவிட்டு", அவற்றின் இடத்தின் புதிய விதிகளையும் "உருவாக்க முடியும்". விதிகளை "மாற்ற முடியும்" என்ற ஆய்வுக் கருத்து, விதிகளை "மாற்றியமைக்க முடியும்", அல்லது "வடிவமைக்க முடியும்" என்ற தவறான சூத்திரத்தின் எச்சமாகும். பொருளாதார விதிகளை மாற்றியமைக்க முடியும் என்ற சூத்திரம் நமது நாட்டில் நீண்ட காலமாக செயல்பாட்டில் இருந்தாலும், சரித்தன்மைக்காக அதை கைவிட்டுவிட வேண்டும். இந்த அல்லது அந்த பொருளாதார விதியின் செயல்பரப்பை கட்டுப்படுத்தலாம்; அது அழிக்கப்பட வேண்டியது என்றால் அதன் நாசகர செயல்பாட்டை கட்டுப்படுத்தலாம்; ஆனால், அதை "மாற்றியமைப்பதோ", "ஒழித்து விடுவதோ" முடியாது.

விளைவாக, இயற்கை சக்திகளை "கீழ்ப்படுத்துவது" அல்லது பொருளாதார சக்திகள் மீது "ஆதிக்கம் செலுத்துவது" என்று நாம் பேசும்போது, மனிதர் விஞ்ஞான விதிகளை "அழித்துவிட முடியும்" அல்லது "படைத்துவிட முடியும்" என்று பொருள் அல்ல. மாறாக, மனிதர் விதிகளை கண்டுபிடிக்க முடியும், அவற்றை அறிந்து கொள்ள முடியும், அவற்றை கட்டுப்படுத்த முடியும், முழுமையான புரிதலுடன் அவற்றை பொருத்துவதற்கு கற்றுக் கொள்ள முடியும், சமூகத்தின் நலன்களுக்காக பயன்படுத்த முடியும், இப்படிச் செய்வதன் மூலம் அவற்றை கீழ்ப்படுத்தி வைக்க முடியும் அவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்த முடியும் என்பது மட்டுமே அதற்குப் பொருளாகும்.

எனவே, சோசலிசத்தில் அரசியல் பொருளாதார விதிகள் புறவயப்பட்ட விதிகள்; பொருளாதார வாழ்வின் இயக்கப்போக்குகள் விதிகளுக்கு உட்பட்டவை, அவை நமது விருப்பங்களுக்கு அப்பால் சுதந்திரமாக இயங்குபவை என்னும் உண்மையை அவை பிரதிபலிக்கின்றன. இந்த கருத்துருவை மறுப்பவர்கள், உண்மையில் விஞ்ஞானத்தை மறுக்கிறார்கள்; விஞ்ஞானத்தை மறுப்பதன் மூலம் முன்னறிந்து கூறும் எல்லா சாத்தியப்பாடுகளையும் மறுக்கிறார்கள்; விளைவாக, பொருளாதார நடவடிக்கைகளை திசைவழிப்படுத்தும் சாத்தியப்பாட்டை மறுக்கிறார்கள்.

இவை எல்லாம் சரியே, இவை எல்லாம் பொதுவாக அறியப்பட்டவையே என்று, ஆனால், இதில் புதிதாக எதுவும் இல்லை, எனவே பொதுவாக அறியப்பட்ட உண்மைகளை மீண்டும் வலியுறுத்திச் சொல்லி நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை என்று இது பற்றி சொல்லலாம். உண்மைதான் இதில் புதிதாக எதுவும் இல்லைதான். ஆனால் நமக்கு நன்றாகத் தெரிந்த சில உண்மைகளை சொல்வதற்காக நேரம் செலவழிக்க வேண்டியதில்லை என்று சொல்வது

தவறாகிவிடும். தலைமை தாங்கும் கருவாக இருக்கும் நம்முடன், ஒவ்வோர் ஆண்டும் புதியவர்களும் இளையவர்களும் ஆயிரக்கணக்கில் இணைகிறார்கள். நமக்கு உதவுவதில், தங்கள் திறமைகளை மெய்ப்பிப்பதில் அவர்கள் பேரார்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்கு போதுமான மார்க்சிய கல்வி இல்லை; நமக்கு நன்றாகத் தெரிந்த பல உண்மைகள் அவர்களுக்குத் தெரியாது; அதனால் இருளில் எதையோ தேடும் நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகிறது. சோவியத் அரசாங்கத்தின் பிரம்மாண்டமான சாதனைகளால் அவர்கள் திகைத்துப் போய் இருக்கிறார்கள்; சோவியத் அமைப்பு முறையின் அசாதாரணமான வெற்றிகள் அவர்கள் கண்களை மறைக்கின்றன; சோவியத் அரசாங்கத்தால் "எதையும் செய்ய முடியும்ஷை, "அதற்கு (சோவியத் அரசாங்கத்துக்கு) அப்பால் எதுவும் இல்லை", அதனால் (சோவியத் அரசாங்கத்தால்) இயற்கை விதிகளை அழித்துவிட்டு, புதிய விதிகளை உருவாக்க முடியும் என்று அவர்கள் கற்பனை செய்யத் துவங்கிவிடுகிறார்கள். இந்தத் தோழர்களை நாம் என்ன செய்யப் போகிறோம்? மார்க்சிய - லெனினியத்தை அவர்களுக்கு எப்படி பயிற்றுவிக்கப் போகிறோம்? "பொதுவாக அறியப்படும் உண்மைகள்" என்று சொல்லப்படுவனவற்றை முறைப்படுத்தப்பட்ட விதத்தில் மீண்டும் மீண்டும் சொல்வது, பொறுமையுடன் விளக்கிச் சொல்வது, இந்தத் தோழர்களுக்கு மார்க்சியத்தை கற்பிக்கும் ஆகச்சிறந்த வழிகளில் ஒன்று என்று நான் கருதுகிறேன்.

## 2. சோசலிசத்தில் பண்ட உற்பத்தி

கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு நாட்டில் உள்ள உற்பத்தி முறைகளை நாட்டுடைமையாக்கிய பிறகு, பண்ட உற்பத்தியை தொடர்வது தவறு என்று சில தோழர்கள் கருதுகின்றனர். அங்கேயே, அப்போதே, கட்சி பண்ட உற்பத்திக்கு முடிவு கட்டியிருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

'உற்பத்தி முறைகளை சமூகம் கைப்பற்றிய பிறகு, பண்ட உற்பத்திக்கும் முடிவு கட்டப்படுகிறது; கூடவே பண்டம் உற்பத்தியாளர் மீது கொண்டுள்ள ஆதிக்கமும் முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது' (3) என்று எங்கல்ஸ் சொன்னதை அவர்கள் மேற்கோள் காட்டுகின்றனர்.

இந்தத் தோழர்கள் மிகவும் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

எங்கல்ஸ் சொல்லும் சூத்திரத்தை ஆய்ந்து பார்ப்போம். எங்கல்ஸ் சொல்லும் சூத்திரம் முழுவதும் தெளிவானது, துல்லியமானது என்று சொல்ல முடியாது. உற்பத்தி சக்திகளை முழுமையாகக் கைப்பற்றுவதா அல்லது ஒரு பகுதியை கைப்பற்றுவதா, அதாவது, உற்பத்தி சக்திகள் அனைத்தையும் பொதுச் சொத்தாக மாற்றுவதா அல்லது அவற்றில் ஒரு பகுதியை பொதுச் சொத்தாக மாற்றுவதா என்று அதில் தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை. எனவே எங்கல்ஸ் சொல்லும் சூத்திரத்தை இரண்டு விதமாகவும் புரிந்து கொள்ளலாம்.

'உற்பத்தி சக்திகள் அனைத்தின் மீதும்' கட்டுப்பாடு கொண்டு வருவது, 'உற்பத்தி சக்திகள் அனைத்தையும்' உடைமையாக்கிக் கொள்வது பற்றி டூரிங்குக்கு மறுப்பில் எங்கல்ஸ் சொல்கிறார். எனவே, இந்த சூத்திரத்தில், உற்பத்தி சக்திகள் அனைத்தையும், பகுதியை அல்ல, நாட்டுடைமையாக்குவது, அதாவது, தொழில்களின் உற்பத்தி சக்திகள் மட்டுமின்றி, விவசாயத்தின் உற்பத்தி சக்திகளையும் பொதுச் சொத்தாக மாற்றுவது பற்றி எங்கல்ஸ் பேசுகிறார்.

தொழிலிலும் விவசாயத்திலும் உற்பத்தி சக்திகள் அனைத்தையும் கைப்பற்றக் கூடிய அளவுக்கு, அவை அனைத்தையும் பொதுச் சொத்தாக மாற்றிவிடக் கூடிய அளவுக்கு, முதலாளித்துவமும் உற்பத்தி குவிதலும் முன்னேறிவிட்ட நாடுகளை எங்கல்ஸ் மனதில் கொண்டுள்ளார் என்று இதில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இதனால், அது போன்ற நாடுகளில், உற்பத்தி சக்திகள் அனைத்தையும் சமூகமயமாக்கும் அதே நேரம், அதனோடு கூடவே, பண்ட உற்பத்திக்கு முடிவு கட்ட வேண்டும் என்று எங்கல்ஸ் கருதுகிறார். இது சரியே.

கடந்த நூற்றாண்டு நிறைவுறும் தறுவாயில் - டூரிங்குக்கு மறுப்பு வெளியிடப்பட்டபோது - ஒரே ஒரு நாடுதான் அப்படி இருந்தது - அது பிரிட்டன். அங்குதான், பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றினால் நாட்டின் உற்பத்தி சக்திகள் அனைத்தையும் பொதுச் சொத்தாக மாற்றுவதும் பண்ட உற்பத்திக்கு முடிவு கட்டுவதும் சாத்தியப்படும் ஒரு கட்டத்தை முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் தொழிலிலும் விவசாயத்திலும் உற்பத்தி குவிதலின் வளர்ச்சியும் எட்டியிருந்தன.

பிரிட்டனுக்கு அந்நிய வர்த்தகத்தின் முக்கியத்துவம், அதன் தேசிய பொருளாதாரத்தில் அது கொண்டுள்ள பரந்துவிரிந்த பாத்திரம் ஆகியவை பற்றி நான் இப்போது எடுத்துக் கொண்டுள்ள பிரச்சனையில் பேசவில்லை. இந்தப் பிரச்சனை பற்றி ஆய்ந்தறிந்த பிறகுதான், பிரிட்டனில் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, உற்பத்தி சக்திகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டப் பிறகு, பண்ட உற்பத்தியின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது பற்றிய இறுதி முடிவுக்கு வர முடியும்.

எப்படியாயினும் கடந்த நூற்றாண்டின் இறுதியில் மட்டுமின்றி, இன்றும் கூட, பிரிட்டனில் காணப்படுவது போல, வேறு எந்த நாடும் முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும் விவசாயத்தில் உற்பத்தி குவிதலின் வளர்ச்சியையும் எட்டவில்லை. மற்ற நாடுகளைப் பொறுத்தவரை, கிராமப்புறங்களில் முதலாளித்துவ வளர்ச்சி இருந்தாலும், கிராமப்புற சிறுகுறு உடைமையாளர்கள் - உற்பத்தியாளர்களின் கணிசமான பிரிவு ஒன்று இருக்கிறது; பாட்டாளி வர்க்கம் இங்கு அதிகாரத்தைக் கைப்பற்றுமேயானால், இந்தப் பிரிவினரின் எதிர்காலம் பற்றி முடிவு எடுக்க வேண்டியிருக்கும்.

ஆனால், இங்கு ஒரு கேள்வி எழுகிறது: உதாரணத்துக்கு நமது நாட்டைப் போன்ற ஒரு நாட்டில், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் முதலாளித்துவத்தை தூக்கியெறிவதற்கும் நிலைமைகள் சாதகமாகவும், தொழிலில் உற்பத்தி சக்திகளைக் கைப்பற்றி அவற்றை சமூகத்தின் சொத்தாக மாற்றும்விதம் முதலாளித்துவம் தொழிலில் உற்பத்தி சக்திகளைக் குவித்து வைத்திருக்கும்போது, ஆனால் விவசாயத்தில் முதலாளித்துவ வளர்ச்சி இருந்தாலும், இந்த உற்பத்தியாளர்களைக் கைப்பற்றுவது பற்றி நினைத்துப் பார்க்கவே சாத்தியமில்லாத அளவுக்கு எண்ணிலடங்கா உடைமையாளர்கள் - உற்பத்தியாளர்கள் மத்தியில் அது பிரிந்து கிடக்கும்போது, பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் என்ன செய்ய வேண்டியிருக்கும்?

இந்தப் பிரச்சனைக்கு எங்கல்சின் சூத்திரத்தில் பதில் இல்லை. இந்த சூத்திரம் இதற்கு பதில் தர வேண்டிய அவசியம் இல்லை; ஏனென்றால், உற்பத்தி சக்திகள் அனைத்தும் சமூகமயமாக்கப்பட்டுவிட்டால் பண்ட உற்பத்தியின் கதி என்னவாக இருக்க வேண்டும் என்ற வேறு ஒரு கேள்வியில் இருந்து இந்த சூத்திரம் உருவானது.

எனவே, முழுமையாக இல்லாமல், பகுதியளவிலான உற்பத்தி சக்திகள் சமூகமயமாக்கப்பட்டுள்ளபோது, ஆயினும், பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு நிலைமைகள் சாதகமாக இருக்கும்போது, என்ன செய்வது? பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றி, அதன் பிறகு, உடனே பண்ட உற்பத்திக்கு முடிவு கட்டிவிட வேண்டுமா?

அதுபோன்ற நிலைமைகளில், அதிகாரத்தைக் கைப்பற்றுவதை விட்டுவிட்டு, முதலாளித்துவம் பல லட்சக்கணக்கான சிறுகுறு உற்பத்தியாளர்களை நாசம் செய்து, விவசாயத்தில் உற்பத்தி சக்திகளை ஒன்றுகுவிக்கும் வரை காத்திருக்க வேண்டும், அதன் பிறகுதான் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றி அனைத்து உற்பத்தி சக்திகளையும் சமூகமயமாக்குவது பற்றி யோசிப்பது சாத்தியமாகும் என்ற அரை வேக்காட்டு மார்க்சிஸ்டுகளின் கருத்தை நாம் இதற்கு பதிலாக எடுத்துக் கொள்ள முடியாது. உண்மையில், மார்க்சிஸ்டுகள் தங்களை முழுவதுமாக இழிவுபடுத்திக் கொள்ள விரும்பவில்லை என்றால், அவர்கள் இந்தத் 'தீர்வை' ஏற்றுக்கொள்ள முடியாது.

அதிகாரத்தைக் கைப்பற்றி கிராமப்புறங்களின் சிறுகுறு உற்பத்தியாளர்களிடம் இருந்து பறித்து அவர்களது உற்பத்தி சக்திகளை சமூகமயமாக்க வேண்டும் என்று கருதும் அரை வேக்காட்டு மார்க்சிஸ்டுகளின் கருத்தையும் நாம் இதற்கு பதிலாக எடுத்துக் கொள்ள முடியாது. மார்க்சிஸ்டுகள் இந்த அறிவற்ற, குற்றமய முறையையும் கடைபிடிக்க முடியாது; ஏனென்றால், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்கான எல்லா வாய்ப்புகளையும் இது நாசமாக்கி, விவசாய சமூகத்தை பாட்டாளி வர்க்கத்தின் எதிரிகள் முகாமில் நீண்ட காலத்துக்கு தள்ளிவிடும்.

இந்தக் கேள்விக்கான பதிலை லெனின், 'பொருளாக (விவசாய உற்பத்திப் பொருள்) வரி' மற்றும் அவரது மிகவும் கொண்டாடப்பட்ட 'கூட்டுறவு திட்டம்' ஆகியவை பற்றிய தனது கட்டுரைகளில்  தந்தார்.

லெனினின் பதிலை பின்வருமாறு சுருக்கமாகச் சொல்லலாம்:

அ) அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான சாதகமான சூழலை தவற விட்டுவிடக் கூடாது - பல லட்சக்கணக்கான தனித்தனி சிறுகுறு உற்பத்தியாளர்களை அழிப்பதில் முதலாளித்துவம் வெற்றி பெறும் வரை காத்திருக்காமல், பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்;

ஆ) தொழிலின் உற்பத்தி சக்திகள் கைப்பற்றப்பட்டு பொதுச் சொத்தாக மாற்றப்பட வேண்டும்;

இ) தனித்தனி சிறுகுறு உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களைப் படிப்படியாக உற்பத்தியாளர்கள் கூட்டுறவுகளில், அதாவது, பெரிய விவசாய நிறுவனங்களில், கூட்டுப் பண்ணைகளில் ஒன்றிணைக்க வேண்டும்;

ஈ) தொழிலை அதன் உச்சத்துக்கு வளர்த்தெடுக்க வேண்டும்; கூட்டுறவுப் பண்ணைகளில் பெருவீத உற்பத்தி அடிப்படையிலான நவீன தொழில்நுட்பத்தை புகுத்த வேண்டும்; அவற்றை பறித்தெடுப்பது அல்ல, மாறாக, அவர்களுக்கு முதல் தர ட்ராக்டர்களை, பிற எந்திரங்களை தாராளமாக வழங்க வேண்டும்;

உ) நகரத்துடனான பொருளாதார இணைப்பின் வடிவமாக விவசாயிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக பண்ட உற்பத்தி மட்டுமே இருக்கிறது என்பதால், நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையில், தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையில், ஒரு பொருளாதார உறவை உறுதிப்படுத்த, குறிப்பிட்ட காலத்துக்கு பண்ட உற்பத்தி (வாங்குவது விற்பது என்ற பரிவர்த்தனை மூலம்) தக்க வைக்கப்பட வேண்டும்; சோவியத் வர்த்தகம் - அரசு, கூட்டுறவு மற்றும் கூட்டுப் பண்ணை - முழுவதுமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்; அனைத்து வகைகளிலான, அனைத்து விவரணைகளிலான முதலாளிகள் வர்த்தக நடவடிக்கைகளில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

நமது நாட்டில் சோசலிசத்தை கட்டியெழுப்பிய வரலாறு, லெனின் விவரித்த இந்த வளர்ச்சிப் பாதை, சரி என்பதைக் காட்டுகிறது.

கூடுதலாகவோ, குறைவாகவோ, சிறுகுறு உற்பத்தியாளர்கள் இருக்கிற எல்லா முதலாளித்துவ நாடுகளிலும், இந்த வளர்ச்சிப் பாதைதான், சோசலிசத்தின் வெற்றிக்கான ஒரே சாத்தியமான, சாதகமான பாதை என்பதில் அய்யம் இருக்க முடியாது.

எல்லா நிலைமைகளிலும் பண்ட உற்பத்தி ஒரே விதத்தில், முதலாளித்துவத்தை நோக்கி இட்டுச்செல்லும், இட்டுச்சென்றே தீரும் என்று சொல்லப்படுகிறது. இது உண்மையல்ல. எப்போதுமே அப்படி நடப்பதில்லை; எல்லா நிலைமைகளிலுமே அப்படி நடப்பதில்லை. பண்ட உற்பத்தியை முதலாளித்துவ உற்பத்தியுடன் அடையாளப்படுத்தக் கூடாது. அவை இரண்டும் வேறு வேறு விசயங்கள். முதலாளித்துவ உற்பத்தி பண்ட உற்பத்தியின் உச்சபட்ச வடிவம். உற்பத்தி சக்திகள் தனியுடைமை தன்மை கொண்டதாக இருந்தால் மட்டுமே, உழைப்புச் சக்தி, சந்தையில் முதலாளிகள் வாங்கக் கூடிய ஒரு பண்டமாக, உற்பத்தி இயக்கப்போக்கில் சுரண்டப்படக் கூடியதாக இருந்தால் மட்டுமே, விளைவாக, முதலாளிகள் கூலித் தொழிலாளர்களைச் சுரண்டும் அமைப்பு முறை நாட்டில் இருந்தால் மட்டுமே, பண்ட உற்பத்தி முதலாளித்துவத்துக்கு இட்டுச் செல்லும். உற்பத்தி சக்திகள் தனியார்வசம் குவிந்திருக்கும்போது, தொழிலாளர்களிடம் இருந்து உற்பத்தி சக்திகள் பறித்தெடுக்கப்பட்டிருக்கும்போது, தங்கள் உழைப்புச் சக்தியை பண்டமாக விற்க தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்கப்படும்போது, முதலாளித்துவ உற்பத்தி துவங்குகிறது. இது இல்லாமல் முதலாளித்துவ உற்பத்தி என்று எதுவும் இல்லை.

நல்லது, அப்படியானால், பண்ட உற்பத்தியை முதலாளித்துவ உற்பத்தியாக மாற்றும் நிலைமைகள் இல்லாமல் இருந்தால், உற்பத்தி சக்திகள் தனியாருடையதாக இல்லாமல் சமூகத்தின்  சொத்தாக இருந்தால், கூலியுழைப்பு முறை இனி இல்லை என்றால், உழைப்புச் சக்தி ஒரு பண்டமாக இனி இருக்காது என்றால், சுரண்டுகிற அமைப்பு முறை எப்போதோ ஒழிக்கப்பட்டுவிட்டது என்றால் என்ன செய்ய வேண்டும்? - அப்போதும் பண்ட உற்பத்தி அதேபோல் முதலாளித்துவத்துக்கு இட்டுச் செல்லுமா? இல்லை. அப்படி இட்டுச் செல்லாது. ஆயினும், நமது சமூகம், மிகச் சரியாக, அது போன்ற ஒரு சமூகம்தான்; உற்பத்தி சக்திகளின் தனியுடைமை, கூலியுழைப்பு முறை, சுரண்டும் அமைப்பு முறை ஆகியவை நீண்ட காலமாக இங்கு இல்லை.

பண்ட உற்பத்தியை, தன்னளவிலேயே நிறைவானது, சுற்றியுள்ள பொருளாதார நிலைமைகளில் இருந்து சுதந்திரமானது என்று கருதக் கூடாது. பண்ட உற்பத்தி முதலாளித்துவ உற்பத்தியை விட பழைமையானது. அது அடிமைச் சமூகத்தில் இருந்தது - அதற்கு சேவையாற்றியது - ஆனால், முதலாளித்துவத்துக்கு இட்டுச் செல்லவில்லை. அது நிலவுடைமை சமூகத்தில் இருந்தது; அதற்கு சேவையாற்றியது; முதலாளித்துவ உற்பத்திக்கான சில நிலைமைகளை அது உருவாக்கியிருந்தாலும் அது முதலாளித்துவத்துக்கு இட்டுச் செல்லவில்லை. அப்படியானால், அதேபோல், உற்பத்தி சக்திகளின் சமூகஉடைமை, கூலியுழைப்பு முறை ஒழிப்பு, சுரண்டல் முறை ஒழிப்பு போன்ற தீர்மானகரமான பொருளாதார நிலைமைகளால் கறாரான கட்டுப்பாடுகளுக்குள் இருக்கும் நமது நாட்டு பண்ட உற்பத்தி, முதலாளித்துவ சமூகத்தின் நிலைமைகளில் இருப்பதுபோல, கட்டற்றதாகவும் அனைத்தும் தழுவியதாகவும் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டு, பண்ட உற்பத்தி முதலாளித்துவத்துக்கு இட்டுச் செல்லாமல், சோசலிச சமூகத்துக்கும் சேவையாற்ற முடியாதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

நமது நாட்டில், உற்பத்தி சக்திகளின் சமூக உடைமையின் மேலாதிக்கம் நிறுவப்பட்ட பிறகு, கூலியுழைப்பு முறையும் சுரண்டல் முறையும் ஒழிக்கப்பட்ட பிறகு, பண்ட உற்பத்தி எல்லா அர்த்தத்தையும் இழந்துவிட்டது, எனவே அதை ஒழித்துவிட வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

இதுவும் உண்மையல்ல. இன்று நமது நாட்டில் இரண்டு அடிப்படை வடிவங்களிலான சமூக உற்பத்தி நடக்கிறது: அரசுக்கு அல்லது சமூகத்துக்குச் சொந்தமான உற்பத்தி மற்றும் கூட்டுப் பண்ணை உற்பத்தி - இதை சமூக உடைமை என்று சொல்ல முடியாது. அரசு நிறுவனங்களில் உற்பத்தி சக்திகளும் உற்பத்தியாகும் பொருட்களும் தேசத்தின் உடைமைகள். கூட்டுப் பண்ணைகளில் உற்பத்தி சக்திகள் (நிலம், எந்திரங்கள்) அரசுடைமை என்றாலும் உற்பத்திப் பொருட்கள் பல்வேறு கூட்டுப் பண்ணைகளுக்குச் சொந்தமானவை; ஏனென்றால், விதைகளும் உழைப்பும் அவர்களுடையது; நிரந்தரமான குத்தகையில் உள்ள கூட்டுப் பண்ணைகளாக மாற்றப்பட்ட நிலமும், அதை அவர்கள் விற்கவோ, வாங்கவோ, குத்தகைக்கு விடவோ, அடகு வைக்கவோ முடியாது என்றாலும், உண்மையில் அவர்களது சொந்த நிலம் போலவே அவர்களால் பயன்படுத்தப்படுகிறது.

இதன் விளைவு என்னவென்றால், அரசு நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக மட்டும் அரசு முடிவுகள் எடுக்கிறது; கூட்டுப் பண்ணைகளின் உற்பத்திப் பொருட்கள், அவர்களுடைய உடைமை என்பதால், அவர்கள்தான் அது பற்றி முடிவு எடுக்கிறார்கள். ஆனால், கூட்டுப் பண்ணைகள் தங்கள் உற்பத்திப் பொருட்களை, பண்டங்கள் என்ற வடிவத்தில் அல்லாது, வேறு விதத்தில் அந்நியப்படுத்துவதற்கு தயாராக இல்லை. அந்தப் பண்டங்களுக்கு பரிவர்த்தனையாக அவர்களுக்குத் தேவையான பண்டங்களை பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். தற்போதைக்கு, நகரத்துடன் பண்ட உறவு - வாங்குவது, விற்பது என்ற பரிவர்த்தனை - தவிர வேறு எந்த உறவையும் கூட்டுப் பண்ணைகள் அங்கீகரிக்கத் தயாராக இல்லை. இதனால், வர்த்தகத்தை அதன் உச்சத்துக்கு வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் பற்றி லெனின் பேசிய முப்பது ஆண்டுகளுக்கு முன், பண்ட உற்பத்தியும் வர்த்தகமும் எந்த அளவுக்கு அவசியமானவையாக இருந்தனவோ, அதே அளவுக்கு இன்றும் அவசியமானவை.

அடிப்படையில், அரசுத் துறை, கூட்டுப் பண்ணை துறை என்ற இரண்டு உற்பத்தித் துறைகளுக்குப் பதிலாக, நாட்டில் உற்பத்தியாகும் அனைத்து நுகர்பொருட்கள் பற்றியும் முடிவுகள் எடுக்கும் உரிமை கொண்ட அனைத்தும் தழுவிய ஒரே ஒரு உற்பத்தித் துறை இருக்குமேயானால், பண்டச் சுழற்சி, அதனுடன், தேசிய பொருளாதாரத்தில் அவசியமற்ற கூறாக இருக்கும் 'நாணய பொருளாதாரமும்' மறைந்து போகும். ஆனால், இப்படி நடக்காத வரை, இரண்டு அடிப்படை உற்பத்தித் துறைகள் இருக்கும் வரை, பண்ட உற்பத்தியும், பண்ட சுழற்சியும், நமது தேசிய பொருளாதார முறையின் ஓர் அவசியமான, பயனுள்ள கூறாக, பயன்பாட்டில் இருந்தாக வேண்டும். ஓர் ஒற்றை மற்றும் ஒன்றிணைந்த துறையின் உருவாக்கம் எப்படி வரும்? அரசுத் துறை, கூட்டுப் பண்ணைத் துறையை அப்படியே விழுங்கிவிடுவதாலா? - அப்படி நடப்பது கடினம். (ஏனென்றால், அது கூட்டுப் பண்ணைத் துறையை அபகரிப்பது என்று பார்க்கப்படும்). அல்லது, முதலில் நாட்டில் உள்ள அனைத்து நுகர்பொருட்கள் பற்றிய கணக்கு வைத்துக் கொண்டு, பிறகு பண்ட பரிவர்த்தனை மூலம் அவற்றை விநியோகிக்கவும் செய்யும் உரிமை கொண்ட, ஓர் ஒற்றை தேசிய பொருளாதார நிறுவனத்தை உருவாக்குவது மூலமா? - இது தனி ஒரு விவாதம் தேவைப்படும் ஒரு முக்கியமான பிரச்சனையாகும்.

விளைவாக, நமது பண்ட உற்பத்தி சாதாரண பண்ட உற்பத்தி வகைப்பட்டது அல்ல; அது ஒரு சிறப்பு வகை பண்ட உற்பத்தி; அது முதலாளிகள் இல்லாத பண்ட உற்பத்தி; முதன்மையாக

ஒன்றிணைந்த சமூக உற்பத்தியாளர்களின் (அரசு, கூட்டுப் பண்ணைகள், கூட்டுறவு அமைப்புகள்) உற்பத்திப் பொருட்கள் தொடர்பானது; தனிமனித நுகர்வுக்கான பொருட்களுடன் அதன் இயங்குதளம் சுருங்கி நிற்கிறது; அது முதலாளித்துவ உற்பத்தியாக வளர்ந்துவிடக் கூடிய சாத்தியமற்றது என்பது தெளிவானது; அது அதன் 'நாணய பொருளாதாரத்துடன்' சேர்ந்து சோசலிச உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் வலுப்படுத்துதலுக்கு சேவையாற்ற வடிவமைக்கப்பட்டது.

சோசலிச சமூகம், உற்பத்தியின் பண்ட வடிவங்களை அழிக்காததால், பண்டமாக உழைப்புச் சக்தி, உபரி மதிப்பு, மூலதனம், முதலாளித்துவ லாபம், லாப சராசரி விகிதம் போன்ற முதலாளித்துவ குணாம்சங்கள் கொண்ட அனைத்து பொருளாதார வகையினங்களும் மீண்டும் தோன்றியே தீரும் என்று சொல்லும் தோழர்கள் முழுவதும் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் தோழர்கள் பண்ட உற்பத்தியை முதலாளித்துவ உற்பத்தி என்று கருதி குழம்பிப் போகிறார்கள்; பண்ட உற்பத்தி இருந்துவிட்டால், முதலாளித்துவ உற்பத்தியும் இருந்தே தீரும் என்று நம்புகிறார்கள். நமது பண்ட உற்பத்தி, முதலாளித்துவத்தில் நடக்கும் பண்ட உற்பத்தியில் இருந்து அடிப்படையில் மாறுபட்டது என்று அவர்கள் உணரவில்லை.

மேலும், முதலாளித்துவம் பற்றிய மார்க்சின் ஆய்வு தொடர்பான மூலதனம் நூலில் இருந்து சில கருத்துருக்களை எடுத்துக் கொண்டு, அவற்றை செயற்கையாக நமது சோசலிச உறவுகளுக்குப் பொருத்துவதையும் நாம் நிராகரிக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். 'அவசியமான' மற்றும் 'உபரி' உழைப்பு, 'அவசியமான' மற்றும் 'உபரி' பண்டம், 'அவசியமான' மற்றும் 'உபரி' நேரம் ஆகிய கருத்துருக்கள் பற்றி நான் குறிப்பிடுகிறேன். உற்பத்தி சக்திகள் பறிக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கம் சுரண்டப்படுவதற்கு ஆதாரமான உபரி மதிப்பை விவரிக்க, உற்பத்தி சக்திகள் பறிக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவத்தை தூக்கியெறிய அதற்கு அறிவாயுதம் வழங்க, மார்க்ஸ் முதலாளித்துவத்தை ஆய்ந்தறிந்தார். மார்க்ஸ் முதலாளித்துவ உறவுகளுடன் முற்றிலும் இயைந்த கருத்துருக்களை (வகையினங்களை) பயன்படுத்தியது இயல்பானதே. ஆனால், தொழிலாளர் வர்க்கம் அதிகாரத்தையும், உற்பத்தி சக்திகளையும் பறிகொடுக்காமல் இருப்பதோடு, அதிகாரத்தில் இருக்கும்போது, உற்பத்தி சக்திகள் மீது கட்டுப்பாடு கொண்டிருக்கும்போது அந்த கருத்துருக்களை பயன்படுத்துவது விந்தையாக இருக்கிறது. உற்பத்தி சக்தி ஒரு பண்டம், தொழிலாளர்களை வேலைக்கு எடுப்பது ஆகியவை பற்றிய பேச்சுகள், உற்பத்தி சக்திகளை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற தொழிலாளர் வர்க்கம் தன்னைத் தானே வேலைக்கு 'அமர்த்திக் கொள்வது' போலவும் தனது உழைப்புச் சக்தியை தனக்குத் தானே விற்றுக் கொள்வது போலவும் பேசுவது நமது சமூகத்தில் இப்போது அபத்தமானவை. தற்போதைய நமது நிலைமைகளில், உற்பத்தியை அதிகரிக்க, கல்வியை, பொது சுகாதாரத்தை முன்னேற்ற, ராணுவத்தை கட்டமைக்க, இன்ன பிற நடக்க, இப்போது அதிகாரத்தில் இருக்கும் தொழிலாளர் வர்க்கம் சமூகத்துக்கு தரும் உழைப்பு, தொழிலாளியின், அவரது குடும்பத்தின் தனிப்பட்ட தேவைகளுக்காக அவர் உழைப்பை செலுத்துவது போலவே அவசியமற்றது என்பதுபோல், 'அவசியமான' மற்றும் 'உபரி உழைப்பு' பற்றி இப்போது பேசுவதும் விந்தையாக இருக்கிறது.

கோதா திட்டம் பற்றிய விமர்சனத்தில், முதலாளித்துவத்தைப் பற்றி அல்லாமல், வேறு பல்வேறு அம்சங்களுடன், கம்யூனிச சமூகத்தின் முதல் கட்டம் பற்றி ஆய்வு செய்த மார்க்ஸ், உற்பத்தியை அதிகரிக்க, கல்விக்காக, பொது சுகாதாரத்துக்காக, நிர்வாக செலவினங்களுக்காக, இருப்பு வைத்துக் கொள்வதற்காக சமூகத்துக்கு தரப்படும் உழைப்பு, தொழிலாளர் வர்க்கத்தின் நுகர்வுத் தேவைகளைப் பெற செலுத்தப்படும் உழைப்பு போல் அவசியமானது என்று அங்கீகரிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பழைய கருத்துகளுக்குப் பதிலாக, புதிய சூழலுக்கேற்ற புதிய கருத்துகளை உருவாக்கி பழைய கருத்துகளுக்கும் நமது சோசலிச நாட்டில் உள்ள புதிய நிலைமைகளுக்கும் இடையில் உள்ள இந்த பொருத்தமின்மைக்கு நமது பொருளாதார அறிஞர்கள் ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

இந்த பொருத்தமின்மையை நாம் சில காலத்துக்கு சகித்துக் கொள்ளலாம்; ஆனால் அதற்கு முடிவு கட்டும் நேரம் வந்துவிட்டது.

## 3. சோசலிசத்தில் மதிப்பு விதி

நமது நாட்டின் சோசலிச அமைப்பு முறையில் மதிப்பு விதி நிலவுகிறதா, செயல்படுகிறதா என்று கேட்கப்படுகிறது.

ஆம். அது நிலவுகிறது; செயல்படுகிறது. பண்டங்களும் பண்ட உற்பத்தியும் எங்கெல்லாம் நிலவுகிறதோ, அங்கெல்லாம் மதிப்பு விதியும் நிலவ வேண்டும்.

நமது நாட்டில் மதிப்பு விதியின் செயல்பாட்டுத் தளம், முதலாவதாக, பண்ட சுழற்சி, வாங்குவது விற்பது மூலம், பண்ட மாற்று, முதன்மையாக, தனிநபர் நுகர்வுப் பொருட்களின் பண்ட மாற்று என்பதாக இருக்கிறது. இங்கு, இந்தத் தளத்தில், மதிப்பு விதி, சில எல்லைகளுக்கு உட்பட்டு, ஒழுங்கமைக்கும் பாத்திரத்தை தக்க வைக்கிறது.

ஆனால் மதிப்பு விதியின் செயல்பாட்டுத் தளம் பண்ட சுழற்சியுடன் நின்றுவிடுவதில்லை. அது உற்பத்தியிலும் செயல்படுகிறது. நமது சோசலிச உற்பத்தியில் மதிப்பு விதிக்கு ஒழுங்கமைக்கும் பாத்திரம் இல்லை என்பது உண்மைதான்; ஆயினும் அது உற்பத்தி மீது தாக்கம் செலுத்துகிறது; உற்பத்தியை திசைவழிப்படுத்தும்போது இந்த உண்மையை நிராகரித்துவிட முடியாது. உற்பத்தி இயக்கப்போக்கில் செலவிடப்பட்ட உழைப்புச் சக்தியை ஈடு செய்ய அவசியமான நுகர்வுப் பொருட்கள், மதிப்பு விதியின் செயல்பாட்டுக்குள் இருக்கிற பண்டங்களாக நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன; கையளிக்கப்படுகின்றன. மிகத்துல்லியமாக இங்குதான், மதிப்பு விதி உற்பத்தி மீது தனது தாக்கத்தை செலுத்துகிறது. இந்த விசயத்தில், கணக்கு வைப்பு முறை, லாபம், உற்பத்தி செலவு, விலை ஆகிய அனைத்தும் நமது தொழிலில் உண்மையான முக்கியத்துவம் கொண்டவை. விளைவாக, மதிப்பு விதியை கணக்கில் கொள்ளாமல் நமது தொழில் இயங்க முடியாது; இயங்கக் கூடாது.

இது நல்ல விசயமா? இது கெட்ட விசயம் இல்லை. இன்றைய நிலைமைகளில், அது மோசமான விசயம் இல்லை. ஏனென்றால், உற்பத்தியை நியாயமான நிலைகளில், வழிகளில் நடத்த நமது தொழில் அதிகாரிகளை, அது பயிற்றுவிக்கிறது; அவர்களை ஒழுங்குபடுத்துகிறது. உற்பத்தி அளவுகளை கணக்கிட, துல்லியமாக கணக்கிட, உற்பத்தியில் நிஜமாக உள்ள அம்சங்களை துல்லியமாகக் கணக்கிட, கற்பனையில் தோன்றிய 'தோராயமான எண்ணிக்கை' என்று பொருளற்ற விசயங்களை பேசாமல் இருக்க நமது நிர்வாகிகளையும் பயிற்றுவிப்பதால் அது மோசமானது அல்ல. உற்பத்தியில் உள்ளார்ந்து மறைந்து கிடக்கிற பொருட்களுக்காக தேடி, அவற்றை கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்த, அவற்றை காலில் போட்டு மிதிக்காமல் இருக்க நமது நிர்வாகிகளை பயிற்றுவிப்பதால் அது மோசமானது அல்ல. உற்பத்தி செய்முறைகளை திட்டமிட்ட விதத்தில் மேம்படுத்த, உற்பத்தி செலவுகளை குறைக்க, கணக்கீடுகளை நடைமுறைப்படுத்த, நமது தொழில் விளைவு உருவாக்குவதை உறுதி செய்ய, நமது நிர்வாகிகளை பயிற்றுவிப்பதால் அது மோசமானது அல்ல. நமது நிர்வாகப் பணியாளர்களின்

வளர்ச்சியை துரிதப்படுத்துவதால் சோசலிச உற்பத்தியின் தற்போதைய வளர்ச்சிக் கட்டத்தின் உண்மையான தலைவர்களாக அவர்கள் வளர்ந்தெழுவதை துரிதப்படுத்துவதால் அது ஒரு நல்ல நடைமுறைப் பள்ளி.

நமது நாட்டின் உற்பத்தி மீது மதிப்பு விதி தாக்கம் செலுத்துகிறது என்பதல்ல பிரச்சனை. நமது தொழில் நிர்வாகிகள், திட்டமிடுபவர்கள், ஒரு சில விதிவிலக்குகள் தவிர, மதிப்பு விதியின் செயல்பாடுகள் பற்றி அறிந்திருக்கவில்லை. அவை பற்றி படிப்பதில்லை. தமது திட்டமிடலில் அவற்றை கணக்கில் கொள்ள அவர்களால் முடியவில்லை. உண்மையில், விலை நிர்ணய கொள்கை தளத்தில் இன்னமும் நிலவும் குழப்பத்தை இது விளக்கிவிடுகிறது. ஓர் உதாரணம் பார்க்கலாம். சில நாட்களுக்கு முன், பருத்தி விளைச்சலை மேம்படுத்துவதற்காக, அரசுக்கு தரப்படும் பருத்தியின் விலையை உயர்த்தவும் பருத்தி விவசாயிகளுக்கு விற்கப்படும் தானியங்களின் விலையை மேலும் துல்லியமாக நிர்ணயிக்கவும் பருத்தி மற்றும் தானியங்களின் விலையை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டது. நமது தொழில் நிர்வாகிகளும் திட்டமிடுவோரும் இது தொடர்பாக ஒரு முன்வைப்பு தந்தனர். அந்த முன்வைப்பு மத்திய கமிட்டி உறுப்பினர்களை திகைப்புக்குள்ளாக்கியது. ஒரு டன் தானியத்தின் விலையை கிட்டத்தட்ட ஒரு டன் பருத்தியின் விலைக்கு சமமாக நிர்ணயிக்க வேண்டும் என்று அந்த முன்வைப்பு சொன்னது; அத்துடன் ஒரு டன் தானியத்தின் விலையை ஒரு டன் ரொட்டியின் விலைக்குச் சமமாக காட்டியிருந்தது. அரவை, அடுமனை பதப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளுக்கு கூடுதல் செலவாகும் என்பதால் ஒரு டன் தானியத்தின் விலையை விட ஒரு டன் ரொட்டியின் விலை கூடுதலாக இருக்க வேண்டும்; மட்டுமின்றி, பொதுவாக பருத்தியின் விலை தானியத்தின் விலையை விட கூடுதலானது; உலகச் சந்தையில் பருத்தியின் விலையும் இதற்குக் காரணமாகிறது; மத்திய கமிட்டி இது போன்ற கேள்விகளை எழுப்பியபோது, விலையை நிர்ணயித்தவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. எனவே, தானிய விலையை குறைத்து, பருத்தியின் விலையை அதிகரித்து நிர்ணயிக்க மத்திய கமிட்டி பிரச்சனையை தானே கையிலெடுக்க நேர்ந்தது. இந்தத் தோழர்களின் முன்வைப்புக்கு சட்டரீதியான அதிகாரம் கிடைத்திருந்தால் என்னவாகியிருக்கும்? நாம் பருத்தி உற்பத்தியாளர்களை நாசமாக்கியிருப்போம்; நமக்கு பருத்தியே கிடைக்காமல் போயிருக்கும்.

ஆனால், முதலாளித்துவத்தில் இருப்பது போலவே, நமது நாட்டிலும் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதில் மதிப்பு விதியின் செயல்பாட்டுக்கு பெரிய அளவில் வாய்ப்பு உள்ளது என்று இதற்குப் பொருளாகுமா? இல்லை. அப்படி இல்லை. உண்மையில் நமது பொருளாதாரக் கட்டமைப்பில் மதிப்பு விதியின் செயல்பாட்டுத் தளம் கறாராக வரையறுக்கப்பட்டது; வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் நிறுத்தப்பட்டது. பண்ட உற்பத்தியின் செயல்பாட்டுத் தளம், நமது கட்டமைப்பால் கட்டுப்படுத்தப்பட்டது, வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் நிறுத்தப்பட்டது என்று ஏற்கெனவே சொல்லியுள்ளோம். மதிப்பு விதியின் செயல்பாட்டுத் தளம் பற்றியும் அப்படியே சொல்லியாக வேண்டும். சந்தேகத்துக்கிடமின்றி, உற்பத்தி சக்திகளின் தனியுடைமை இப்போது இல்லை; நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் உற்பத்தி சக்திகள் சமூகமயமாக்கப்பட்டுள்ளன; அதனால், மதிப்பு விதியின் செயல்பாட்டுத் தளமும் உற்பத்தி மீது அதன் தாக்கமும் கட்டுக்குள் வைக்கப்படும்.

போட்டி மற்றும் உற்பத்தியில் அராஜகம் பற்றிய விதியை மாற்றியமைத்துவிட்ட, தேசிய பொருளாதாரத்தின் சமச்சீரான (அளவுக்கேற்ற) வளர்ச்சி விதியின் செயல்பாடும் இதே திசையில்தான் செயல்படுகிறது.

தேசிய பொருளாதாரத்தின் ஏற்றத்தாழ்வற்ற (அளவுக்கேற்ற) வளர்ச்சி விதியின் தேவைகளுக்கு அடிப்படையிலான நமது வருடாந்திர மற்றும் அய்ந்தாண்டு திட்டங்களும், பொதுவாக நமது பொருளாதாரக் கொள்கையும் இதே திசையில்தான் செயல்படுகின்றன.

இவையனைத்தின் ஒட்டுமொத்தமான விளைவுகளால், நமது நாட்டில் மதிப்பு விதியின் செயல்பாட்டுத் தளம் கறாராக வரையறுக்கப்பட்டுள்ளது; நமது கட்டமைப்பில் மதிப்பு விதி உற்பத்தியை ஒழுங்குபடுத்தும் விதியாக செயல்பட முடியாது.

நமது சோசலிச உற்பத்தி விடாப்பிடியாகவும் விரைவாகவும் விரிவடையும்போதும், முதலாளித்துவ நாடுகளில் மதிப்பின் விதி அதீத உற்பத்தி நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்வதுபோல், நமது நாட்டில், அது, அதீத உற்பத்தி நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்வதில்லை; முதலாளித்துவத்தில் மதிப்பு விதியின் செயல்பாட்டுத் தளம் மிகவும் பரந்ததாக இருப்பதால், உற்பத்தி விரிவாக்கம் குறைவான விகிதத்தில் இருந்தாலும், அது அவ்வப்போது, அதீத உற்பத்தி நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்கிறது.

மதிப்பின் விதி, வரலாற்று வளர்ச்சியின் அனைத்து கால கட்டங்களையும் கட்டி இணைக்கிற ஒரு நிரந்தரமான விதி என்று சொல்லப்படுகிறது; கம்யூனிச சமூகத்தின் இரண்டாவது கட்டத்தில் பரிவர்த்தனை உறவுகளை ஒழுங்குபடுத்தும் செயல்பாட்டை அது இழந்துவிட்டால், இந்த கட்டத்தில் உற்பத்தியின் பல்வேறு துறைகளுக்கு இடையிலான உறவை முறைப்படுத்தும் செயல்பாட்டை, அந்தத் துறைகள் மத்தியில் உழைப்பு விநியோகத்தை முறைப்படுத்தும் செயல்பாட்டை தக்கவைத்துக் கொள்கிறது என்று சொல்லப்படுகிறது.

இது உண்மையல்ல. மதிப்பு, மதிப்பு விதியைப் போல, பண்ட உற்பத்தியின் இருத்தலோடு தொடர்புடைய ஒரு வரலாற்றுரீதியான வகையினமாகும். பண்ட உற்பத்தி மறைந்துவிடும்போது, மதிப்பும் அதன் வடிவங்களும் மதிப்பு விதியும் மறைந்துவிடுகின்றன.

கம்யூனிச சமூகத்தின் இரண்டாவது கட்டத்தில், பொருட்களை உற்பத்தி செய்ய செலவிடப்பட்ட உழைப்பின் அளவு, சுற்றிவளைத்து கணக்கிடப்படாது; பண்ட உற்பத்தியில் நடப்பது போல், மதிப்பின் அடிப்படையிலோ, அதன் வடிவங்கள் அடிப்படையிலோ கணக்கிடப்படாது; ஆனால், நேரடியாக, உடனடியாக, பொருட்களை உற்பத்தி செய்ய செலவிடப்பட்ட நேரத்தின் அளவு, எத்தனை மணி நேரம் என்று கணக்கிடப்படும். உழைப்பு விநியோகிக்கப்படுவது பொறுத்தவரையில், உற்பத்தியின் வேறுவேறு துறைகள் மத்தியில் உழைப்பு விநியோகிக்கப்படுவது மதிப்பு விதியின் அடிப்படையில் முறைப்படுத்தப்படுவதில்லை; அந்த கட்டத்தில் அந்த விதி செயல்படுவதில்லை; சமூகத்தில் பொருட்களுக்கான தேவை அதிகரிப்பதன் அடிப்படையில் உற்பத்தியின் வேறுவேறு துறைகள் மத்தியில் உழைப்பு விநியோகிக்கப்படுவது முறைப்படுத்தப்படுகிறது. சமூகத்தின் தேவைகளால் உற்பத்தி முறைப்படுத்தப்படும் ஒரு சமூகமாக அது இருக்கும்; சமூகத்தின் தேவைகளை கணக்கிடுவது திட்டமிடும் அமைப்புகளுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

நமது தற்போதைய பொருளாதார கட்டமைப்பில், கம்யூனிச சமூகத்தின் வளர்ச்சியின் முதல் கட்டத்தில், உற்பத்தியின் பல்வேறு துறைகள் மத்தியில் விநியோகிக்கப்படும் உழைப்பின் 'அளவை' மதிப்பு விதி முறைப்படுத்துகிறது என்பதும் உண்மையல்ல.

இது உண்மையானால், அதிகம் லாபமீட்டக் கூடிய நமது இலகுரக ஆலைகள் அவற்றின் உச்சத்துக்கு ஏன் வளர்க்கப்படுவதில்லை, பல நேரங்களில் குறைவான லாபமீட்டக் கூடிய, சில நேரங்களில் லாபமே இல்லாத கனரக ஆலைகளுக்கு ஏன் முன்னுரிமை தரப்படுகிறது என்பதை புரிந்து கொள்ள முடியாது.

இது உண்மையானால், இன்னும் லாபம் தராத நமது பல கனரக ஆலைகள், தொழிலாளியின் உழைப்புக்கு 'முறையாக திரும்பக் கிடைக்க வேண்டியது' கிடைக்காத அந்த ஆலைகள் ஏன் மூடப்படவில்லை, நிச்சயமாக லாபமீட்டக் கூடிய, தொழிலாளியின் உழைப்புக்கு ஈடாக 'பெரிய அளவில் திரும்பக் கிடைக்கும்' புதிய இலகுரக ஆலைகள் ஏன் திறக்கப்படுவதில்லை என்பதை புரிந்து கொள்ள முடியாது.

இது உண்மையானால், குறைவான லாபமீட்டக் கூடிய, ஆனால் நமது தேசப் பொருளாதாரத்துக்கு மிகவும் அவசியமான ஆலைகளில் இருக்கும் தொழிலாளர்கள், உற்பத்தியின் பல்வேறு துறைகளுக்கு உழைப்பை 'அளவுக்கேற்ப' விநியோகம் செய்வதை முறைப்படுத்துவதாக சொல்லப்படும் மதிப்பு விதியின்படி, கூடுதல் லாபமீட்டும் ஆலைகளுக்கு ஏன் மாற்றப்படுவதில்லை என்பதை புரிந்து கொள்ள முடியாது.

ஆக, இந்தத் தோழர்களின் முன்வைப்பை நாம் பின்பற்றினால், நுகர்வுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தி சக்திகளின் உற்பத்திக்கு முன்னுரிமை தருவதை நாம் நிறுத்திவிட வேண்டும். உற்பத்தி சக்திகளின் உற்பத்திக்கு முன்னுரிமை தருவதை நாம் நிறுத்திவிடுவதன் விளைவு என்ன? நமது தேசப் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான விரிவாக்கத்துக்கான சாத்தியப்பாட்டை அழித்துவிடுவதே இதன் விளைவாக இருக்கும்; ஏனென்றால் உற்பத்தி சக்திகளின் உற்பத்திக்கு முன்னுரிமை தராமல், தேசப் பொருளாதாரத்தை தொடர்ச்சியாக விரிவாக்க முடியாது.

உற்பத்தி சக்திகளின் தனியுடைமை, போட்டி, உற்பத்தியில் அராஜகம், அதீத உற்பத்தியின் நெருக்கடிகள் ஆகியவற்றைக் கொண்ட முதலாளித்துவத்தில்தான், மதிப்பு விதி உற்பத்தியை முறைப்படுத்துவதாக இருக்கும் என்பதை இந்தத் தோழர்கள் மறந்து விடுகிறார்கள். நமது நாட்டில் உற்பத்தி சக்திகள் சமூக உடைமையாக்கப்பட்டிருப்பதனால், தேசப் பொருளாதாரத்தின் சமச்சீரான வளர்ச்சி விதி இருப்பதனால், இவற்றைத் தொடர்ந்த, மதிப்பு விதிக்கான தேவையின் தோராயமான பிரதிபலிப்பான வருடாந்திர மற்றும் அய்ந்தாண்டு திட்டங்கள் இருப்பதனால், மதிப்பு விதியின் செயல்பாட்டுத் தளம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தேசப் பொருளாதாரத்தின் சமச்சீரான வளர்ச்சி விதியும் பொருளாதாரத் திட்டமிடலும் உற்பத்தியின் லாபமீட்டும் தன்மையை போக்கிவிடுகிறது என்று சில தோழர்கள் இதில் இருந்து முடிவுக்கு வருகின்றனர். இது உண்மையல்ல. உண்மையில் இது தலைகீழானது. லாபமீட்டும் தன்மையை, தனிப்பட்ட ஆலைகள் அல்லது தொழில்களின் நோக்குநிலையில் இருந்து அல்லாமல், ஒரு வருட காலத்தில் கிடைக்கும் லாபம் என்றல்லாமல், ஒரு பத்து அல்லது பதினைந்து ஆண்டு காலத்துக்கான ஒட்டுமொத்த தேசப் பொருளாதாரத்தின் நோக்குநிலையில் இருந்து பார்த்தால், -இதுவே இந்தப் பிரச்சனை தொடர்பான ஒரே சரியான அணுகுமுறையாக இருக்கும் - தேசத்தின் பொருளாதாரத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடிய அவ்வப்போதைய பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நம்மை பாதுகாக்கும், நமது தேசப் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான, உயர்ந்த விகிதத்திலான விரிவாக்கத்தை உறுதி செய்யும், தேசப் பொருளாதாரத்தின் சமச்சீரான வளர்ச்சி மற்றும் பொருளாதார திட்டமிடலில் இருந்து நமக்குக் கிடைக்கும் நிலையான மற்றும் நிரந்தரமான லாபமீட்டும் தன்மையின் உயர்ந்த வடிவத்துடன் ஒப்பிடுகையில், சில ஆலைகளின் அல்லது தொழில்களின் தற்காலிக மற்றும் ஊசலாடுகிற லாபமீட்டும் தன்மை கீழானதாக இருக்கும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், நமது உற்பத்தியின் தற்போதைய சோசலிச நிலைமைகளில், உற்பத்தியின் பல்வேறு துறைகளுக்கு உழைப்பை விநியோகிக்கும் 'அளவின் முறைப்படுத்தும் அம்சமாக' மதிப்பு விதி இருக்காது என்பதில் சந்தேகமில்லை.

## 4. நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையிலான முரண்பாட்டை ஒழிப்பது மற்றும்  இவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை களைவது

சாரத்தில் ஒன்றில் இருந்து ஒன்று மாறுபட்ட பல்வேறு பிரச்சனைகளை இந்தத் தலைப்பு உள்ளடக்கியிருக்கிறது. இவற்றை ஒன்றாகக் கலந்துவிடுவது என்றல்லாமல், இவற்றை சுருக்கமாக விளக்குவதற்கு ஏதுவாக, அவற்றை ஒரே பிரிவில் சேர்த்துள்ளேன்.

நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான, தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையிலான முரண்பாட்டை ஒழிப்பது என்பது, மார்க்சும் எங்கல்சும் நீண்ட காலத்துக்கு முன்னரே விவாதித்த நன்கறியப்பட்ட பிரச்சனையாகும். முதலாளித்துவத்தில் கிராமம் நகரத்தால் சுரண்டப்படுவது, தொழில், வர்த்தகம், கடன் என்கிற ஒட்டுமொத்த மாற்றங்களால் விவசாயம் அபகரிக்கப்படுவது, கிராமப்புற மக்களின் பெரும்பான்மையினர் நாசமாக்கப்படுவது என்பதே இந்த முரண்பாட்டின் பொருளாதார அடிப்படையாகும். எனவே, முதலாளித்துவத்தில் நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான முரண்பாடு என்பது நலன்களுக்கு இடையிலான முரண்பாடாக கருதப்பட வேண்டும். இதுதான், நகரத்துக்கு எதிராக, பொதுவாக நகரவாசிகளுக்கு எதிராக கிராமத்துக்கு பகையுணர்வு உருவாக்கியது.

நமது நாட்டில் முதலாளித்துவத்தையும் சுரண்டல் முறையையும் ஒழித்துவிட்ட பிறகு, சோசலிச முறை உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான முரண்பாடு, தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையிலான முரண்பாடு சந்தேகத்துக்கிடமின்றி மறைந்து போயிருக்க வேண்டும். அப்படித்தான் நடந்தது. நிலப்பிரபுக்களை, குலக்குகளை, விவசாய சமூகம் அழித்தொழிக்க, சோசலிச நகரங்களும் நமது தொழிலா ர் வர்க்கமும் ஆற்றிய மிகப்பெரிய உதவி, தொழிலாளர் வர்க்கத்துக்கும் விவசாய சமூகத்துக்கும் இடையிலான கூட்டணியின் அடித்தளத்தை வலுப்படுத்தியது; விவசாய சமூகத்துக்கும் அதன் கூட்டுப் பண்ணைகளுக்கும் முதல் தர ட்ராக்டர்களும் பிற எந்திரங்களும் கட்டமைக்கப்பட்ட விதத்தில் வழங்கப்படுவது, தொழிலாளர் வர்க்கத்துக்கும் விவசாய சமூகத்துக்கும் இடையிலான கூட்டணியை அவர்களுக்கு இடையிலான நட்பாக மாற்றியது. தொழிலாளர் வர்க்கமும் விவசாய சமூக நிலைமைகளின் அடிப்படையில் ஒன்றில் இருந்து ஒன்று மாறுபட்ட இரண்டு வெவ்வேறு வர்க்கங்களை பிரதிநிதித்துவப்படுத்துவது உண்மைதான். ஆனால், இந்த வேறுபாடு அவர்களுக்கிடையிலான நட்பை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. மாறாக, சோசலிச கட்டமைப்பை வலுப்படுத்துவது கம்யூனிசத்தின் வெற்றியை எட்டுவது என்ற ஒரே கோட்டில்தான் அவர்களது நலன்கள் இருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் என்ன பொருள் என்றால், நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான, தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையிலான முரண்பாட்டின் அடித்தளம், நமது தற்போதைய சோசலிச கட்டமைப்பால் ஏற்கனவே ஒழிக்கப்பட்டுவிட்டது.

ஆனால், நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான முரண்பாடு ஒழிக்கப்பட்டதன் விளைவாய் "பெரிய நகரங்கள் அழிந்துபோய்விடும்" (4) என்று இதற்குப் பொருளல்ல. பெரிய நகரங்கள் அழிந்துவிடாமல் இருப்பது மட்டுமின்றி, உச்சபட்ச கலாச்சார வளர்ச்சியின் மய்யங்களாக, பெருவீத ஆலைகள் மட்டுமின்றி, விவசாய உற்பத்திப் பொருட்களை பதப்படுத்தும் மய்யங்களாக, உணவுத் தொழிலின் அனைத்து கிளைகளும் சக்திவாய்ந்த விதத்தில் வளர்ச்சியடைந்த, புதிய பெரிய நகரங்கள் உருவாகும்.

மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான முரண்பாட்டை அழிப்பது தொடர்பான பிரச்சனையிலும் இதே போன்ற நிலைமைதான் உள்ளது. இதுவும், மார்க்சும் எங்கல்சும் நீண்ட காலத்துக்கு முன்பே விவாதித்த நன்கறியப்பட்ட பிரச்சனைதான். உடலுழைப்பு தொழிலாளர்களை மூளை உழைப்பு தொழிலாளர்கள் சுரண்டுவதுதான், மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான முரண்பாட்டின் பொருளாதார அடிப்படை. முதலாளித்துவத்தில் நிறுவனங்களின் உடலுழைப்பு தொழிலாளர்களையும் நிர்வாக ஊழியர்களையும் பிளவுபடுத்தும் இடைவெளி பற்றி அனைவருக்கும் தெரியும். இந்த இடைவெளியால், மேலாளர்கள், கண்காணிப்பாளர்கள், பொறியாளர்கள் மற்றும் பிற தொழில்நுட்ப ஊழியர்கள்பால், தொழிலாளர் மத்தியில் ஒரு பகை உணர்வு உருவாகி, அவர்களை தொழிலாளர்கள் எதிரிகளாகக் கருதுவது நமக்குத் தெரியும். முதலாளித்துவத்தை, சுரண்டுகிற கட்டமைப்பை ஒழிக்கும்போது, உடலுழைப்பு மற்றும் மூளையுழைப்பு நலன்களுக்கு இடையில் இருந்த முரண்பாடும் இயல்பாக மறைந்தாக வேண்டும். நமது தற்போதைய சோசலிசக் கட்டமைப்பில் அது உண்மையில் மறைந்தும்விட்டது. இன்று உடலுழைப்பு தொழிலாளர்களும் நிர்வாக ஊழியர்களும் ஒருவருக்கொருவர் எதிரிகள் அல்ல. உற்பத்தியை முன்னகர்த்துவதில், முன்னுயர்த்துவதில் ஆர்வம் காட்டும் ஒரே கூட்டமைப்பின் உறுப்பினர்களான அவர்கள் நண்பர்கள்; தோழர்கள். முந்தைய பகைமையின் எந்தச் சுவடும் அவர்கள் மத்தியில் இப்போது இல்லை.

நகரத்துக்கும் (தொழிலுக்கும்) கிராமத்துக்கும் (விவசாயத்துக்கும்) இடையிலான வேறுபாடுகளும் உடலுழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையிலான வேறுபாடுகளும் மறைவது என்ற பிரச்சனையின் இயல்பு வேறொன்றாகும். மார்க்சிய மூலநூல்களில் இந்தப் பிரச்சனை பற்றி விவாதிக்கப்படவில்லை. இது ஒரு புதிய பிரச்சனை. நமது சோசலிச கட்டுமானம் நடைமுறைரீதியான எழுப்பியுள்ள பிரச்சனை இது.

இந்தப் பிரச்சனை கற்பனையானதா? இந்தப் பிரச்சனை நமக்கு நடைமுறைரீதியாகவோ, தத்துவரீதியாகவோ முக்கியத்துவம் கொண்டதா? இல்லை, இந்தப் பிரச்சனை கற்பனையானதில்லை. மாறாக, இந்தப் பிரச்சனை நமக்கு மிகப்பெரிய அளவில் காத்திரத்தன்மை கொண்ட பிரச்சனையாகும்.

உதாரணத்துக்கு, விவசாயத்துக்கும் தொழிலுக்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக் கொள்வோம். விவசாயத்தில் உழைப்பின் நிலைமைகள், தொழிலில் உள்ள உழைப்பின் நிலைமைகளில் இருந்து மாறுபட்டது; முக்கியமாக, பிரதானமாக, தொழிலில் உற்பத்தி சக்திகளும், உற்பத்திப் பொருட்களும் அரசுடை மையாக்கப்பட்டுள்ளன; விவசாயத்தில், அரசுடைமை அல்லாமல், குழுக்களின் உடைமை, கூட்டுப்பண்ணைகளின் உடைமை என்ற நிலை உள்ளது. இது பண்ட சுழற்சிக்கு இட்டுச் செல்கிறது, தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் மறையும்போதுதான், பண்ட உற்பத்தியும் அதன் அனைத்து உடன்விளைவுகளோடும் மறையும் என்று ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது. எனவே, விவசாயத்துக்கும் தொழிலுக்கும் இடையிலான இந்த சாரமான வேறுபாடு மறைவது நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை என்பதை மறுக்க முடியாது.

உடலுழைப்புக்கும் மூளையுழைப்புக்கும் இடையிலான சாரமான வேறுபாட்டை ஒழிப்பது என்ற பிரச்சனையிலும் இதையேதான் சொல்ல வேண்டியுள்ளது. இதுவும் நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை ஆகும். சோசலிச முன்மாதிரி இயக்கம் வெகுமக்கள் பரிமாணங்களை எட்டுவதற்கு முன்பு, நமது தொழில்துறையின் வளர்ச்சி தடைபட்டு தடைபட்டுத்தான் முன்னகர்ந்தது; தொழில் வளர்ச்சியின் அளவு கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று கூட சில தோழர்கள் சொன்னார்கள். தொழிலாளர்களின் கலாச்சார மற்றும் தொழில்நுட்ப

மட்டம் தொழில்நுட்ப ஊழியர்களின் கலாச்சாரம் மற்றும் தொழில்நுட்ப மட்டத்தை விட கீழானதாகவும் மிகவும் பின்தங்கியும் இருந்தது இதற்கு முக்கிய காரணமாகும். ஆனால் சோசலிச முன்மாதிரி இயக்கம் வெகுமக்கள் பரிமாணத்தை எட்டியபோது, இந்த நிலைமையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டது. அந்த கணத்தில் இருந்து, தொழில் விசையேற்றப்பட்ட வேகத்துடன் முன்னேறத் துவங்கியது. சோசலிச முன்மாதிரி இயக்கம் வெகுமக்கள் இயக்கத்தின் இயல்பை ஏன் அடைந்தது? ஏனென்றால், தொழிலாளர்கள் மத்தியில் இருந்து எழுந்த தோழர்கள், தொழில்நுட்ப அறிவுக்கான குறைந்தபட்ச தகுதிகளை வளர்த்துக் கொண்டதுடன் தொழில்நுட்ப ஊழியர்களாகவும் வளர்ந்தெழுந்தனர்; அவர்கள், நிலவுகிற விதிகள் வழக்கொழிந்தவை என்பதால் அவற்றை உடைத்து மீற, புதிய, மேலும் இற்றைப்படுத்தப்பட்ட விதிகளை அறிமுகப்படுத்த, இன்ன பிறவற்றைச் செய்ய தொழில்நுட்ப ஊழியர்களையும் பொறியாளர்களையும் சரிசெய்யத் துவங்கினர். பொறியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப ஊழியர்கள் மட்டத்துக்கு, தனிப்பட்ட குழுக்கள் மட்டுமின்றி, பெரும்பான்மை தொழி லாளர்கள், தங்கள் கலாச்சார மற்றும் தொழில் நுட்ப மட்டத்தை உயர்த்திக் கொண்டதால், நம்மிடம் என்ன இருக்க வேண்டும்? பிற நாடுகளில் எட்ட முடியாத அளவுக்கு நமது தொழில் துறை வளர்ந்திருக்கும். எனவே, தொழில்நுட்ப ஊழியர் மட்டத்துக்கு தொழிலாளர்களின் கலாச்சார, தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்துவதன் மூலம், உடலுழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையிலான சாரமான வேறு பாட்டை ஒழிக்க முடியும் என்பதை மறுக்க முடியாது.

தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையிலான, உடலுழைப்புக்கும் மூளையுழைப்புக்கும் இடையிலான சாரமான வேறுபாடுகள் மட்டுமின்றி, நாளடைவில், அவற்றுக்கிடையிலான அனைத்து வேறுபாடுகளும் மறைந்துவிடும் என்று சில தோழர்கள் அறுதியிட்டுச் சொல்கின்றனர். இது உண்மையல்ல. தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையிலான சாரமான வேறுபாடுகளை ஒழித்துக்கட்டுவது, அவற்றுக் கிடையிலான அனைத்து வேறுபாடுகளையும் ஒழித்துக்கட்டுவதற்கு இட்டுச் செல்ல முடியாது. தொழில்துறையில் உள்ள வேலை நிலைமைகளுக்கும் விவசாயத்தில் உள்ள வேலை நிலைமைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் நிலவுவதால், சில வேறுபாடுகள், அவை சாரமானவை இல்லையென்றாலும் நிச்சயம் தொடரும். தொழில்துறையிலும் எல்லா கிளைகளிலும் ஒரே மாதிரியான வேலை நிலைமைகள் இல்லை. உதாரணமாக, நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிலைமைகள் எந்திரமயமாக்கப்பட்ட காலணி ஆலை வேலை நிலைமைகளில் இருந்து மாறுபட்டவை; தாதுச் சுரங்கத் தொழிலாளர் வேலை நிலைமைகள் பொறியியல் துறை தொழிலாளர் வேலை நிலைமைகளில் இருந்து மாறுபட்டவை. இப்படியிருக்க, தொழில் துறைக்கும் விவசாயத்துக்கும் இடையில் ஒரு நிச்சயமான வேறுபாடு இருந்தே தீரும்.

உடலுழைப்புக்கும் மூளையுழைப்புக்கும் இடையிலான வேறுபாடுகள் விசயத்திலும் இதையேதான் சொல்ல வேண்டும். அவற்றுக்கு இடையிலான சாரமான வேறுபாடு, கலாச்சார மற்றும் தொழில்நுட்ப மட்டங்களில் உள்ள வேறுபாடு நிச்சயம் மறைந்துவிடும். ஆனால், சில வேறுபாடுகள், அவை சாரமானவையல்ல என்றபோதும், நீடிக்கும்; ஏனென்றால், நிர்வாக ஊழியர்களின் வேலை நிலைமைகளும் தொழிலாளர் வேலை நிலைமைகளும் ஒத்தவையல்ல.

இதற்கு மாறான கருத்தைச் சொல்லும் தோழர்கள், தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையிலான, உடலுழைப்புக்கும் மூளையுழைப்புக்கும் இடையிலான வேறுபாட்டை ஒழிப்பது பற்றிய எனது சில அறிக்கைகளில் சொல்லப்பட்டுள்ள முன்வைப்புகள் அடிப்படையில், எல்லா வேறுபாடுகளையும் ஒழிப்பது அல்ல, சாரமான வேறுபாடுகளை ஒழிப்பது என்பதன் பொருள் பற்றிய கருத்து எதுவும் இல்லாமல் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். எனது முன்வைப்பு, அனைத்து வேறுபாடுகளையும் ஒழிப்பது பற்றி பேசுகிறது என்ற அனுமானத்தின்

அடிப்படையில், தோழர்கள் இப்படித்தான் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த முன்வைப்பு, துல்லியமானது அல்ல, திருப்திகரமானது அல்ல என்பதையே இது காட்டுகிறது. அந்த முன்வைப்பை ஒதுக்கிவிட்டு, தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையிலான, உடலுழைப்புக்கும் மூளையுழைப்புக்கும் இடையிலான சாரமான வேறுபாடுகளை ஒழிப்பது, சாரமானவையல்லாத வேறுபாடுகள் நீடிப்பது பற்றி பேசும் மற்றொரு முன்வைப்பை அதற்குப் பதிலாக உருவாக்க வேண்டும்.

## 5. ஒற்றை உலகச் சந்தை சிதறுண்டதும் உலக முதலாளித்துவ கட்டமைப்பின் நெருக்கடி ஆழமடைவதும்

ஒற்றை, அனைத்தும் தழுவிய உலகச் சந்தை சிதறுண்டு போவதை, இரண்டாம் உலகப் போரின், அதன் பொருளாதார விளைவுகளின் மிக முக்கியமான பொருளாதார தொடர் விளைவாகவே கருத வேண்டும்.

உலக முதலாளித்துவ கட்டமைப்பின் பொதுவான நெருக்கடியை மேலும் ஆழமாக்கும் விளைவை அது கொண்டிருந்தது.

இரண்டாம் உலகப் போரே இந்த நெருக்கடியின் விளைபொருள்தான். போரில் மோதிக் கொண்ட இந்த இரண்டு முதலாளித்துவ கூட்டணிகளும், எதிரியை வீழ்த்துவதற்கான, உலகத்தின் மீதான மேலாதிக்கத்தைப் பெறுவதற்கான கணக்கு போட்டன. இதன் மூலம் நெருக்கடியில் இருந்து வெளியே வர முற்பட்டன. அய்க்கிய அமெரிக்கா, தனது மிக ஆபத்தான போட்டியாளர்களான, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளை, பின்னுக்குத் தள்ளி, அந்நியச் சந்தைகளையும் உலகெங்கும் உள்ள கச்சாப் பொருட்களின் மூலாதாரத்தையும் கைப்பற்றி, உலகத்தின் மீது மேலாதிக்கத்தை நிறுவி விடலாம் என எதிர்ப்பார்த்தது.

ஆனால், போர் இந்த எதிர்ப்பார்ப்புகளை நியாயப்படுத்தவில்லை. அய்க்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய மூன்று முக்கிய முதலாளித்துவ நாடுகளின் போட்டியாளர்கள் என்ற விதத்தில் ஜெர்மனியும் ஜப்பானும் செயலிழக்கச் செய்யப்பட்டன என்பது உண்மையே. ஆனால், அதே நேரம், சீனம் மற்றும் பிற அய்ரோப்பிய, மக்கள் ஜனநாயக நாடுகள், முதலாளித்துவ கட்டமைப்பு முறையில் இருந்து வெளியேறி, சோவியத் ஒன்றியத்துடன் இணைந்து, முதலாளித்துவ முகாமை எதிர்கொண்ட ஓர் ஒன்றுபட்ட, சக்தி வாய்ந்த சோசலிச முகாமை உருவாக்கின. இரண்டு எதிரெதிர் முகாம்கள் இருந்ததன் பொருளாதார விளைவாக, ஒற்றை, அனைத்தும் தழுவிய உலகச் சந்தை சிதறுண்டு, இப்போது ஒன்றோடு ஒன்று போட்டியிடும், இரண்டு இணை உலகச் சந்தைகள் உள்ளன.

அய்க்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளே, அவை விரும்பாத போதும், ஒரு புதிய இணைச் சந்தை உருவாகி உறுதிப்பட பங்களித்தன என்பதை கண்ணுற வேண்டும். மார்ஷல் திட்டத்தில் இணையாத சோவியத் யூனியன், சீனம் மற்றும் அய்ரோப்பிய மக்கள் ஜனநாயக நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதித்து அதன் மூலம் அந்த நாடுகளின் குரல்வளையை நெறித்துவிடலாம் என நினைத்தன. ஆனால், விளைவு குரல்வளையை நெறித்துவிடுவதாக அல்லாமல், புதிய உலகச் சந்தையை வலுப்படுத்துவதாக அமைந்துவிட்டது.

அடிப்படையான விஷயம் பொருளாதாரத் தடை அல்ல ; போர் துவங்கியதில் இருந்து இந்த நாடுகள் பொருளாதாரரீதியாக இணைந்து பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி என்பதை நிறுவின என்பதுதான் அடிப்படையான விஷயம். மக்கள் ஜனநாயக நாடுகளுக்கு

சோவியத் ஒன்றியம் தரும் திறன்மிக்க, தொழில்நுட்பரீதியாக தகுதிவாய்ந்த உதவி போல், எந்த ஒரு முதலாளித்துவ நாடும் தர முடியாது என்பதை இந்த ஒத்துழைப்பு அனுபவம் காட்டுகிறது. இந்த உதவி மலிவானது, தொழில்நுட்பரீதியாக மிகவும் மேம்பட்டது என்பது மட்டுமல்ல விசயம்; ஒருவருக்கொருவர் உதவி செய்து, அனைவரின் பொருளாதார முன்னேற்றத்தையும் முன்நகர்த்தும் உண்மையான விருப்பம், இந்த ஒத்துழைப்பின் அடியாழத்தில் உள்ளது என்பது முதன்மையான அம்சம். இதன் விளைவாக இந்த நாடுகளில் தொழில் வளர்ச்சி வெகுவேகமாக நடந்தது. இந்த வேகத்திலான தொழில் வளர்ச்சி தொடர்ந்தால், இந்த நாடுகள் முதலாளித்துவ நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் போகும் என்பதுடன், இந்த நாடுகள், தங்களது உபரி உற்பத்திப் பொருட்களுக்கு வெளிச் சந்தையை தேடும் அவசியத்தை உணர நேரும் என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

இதனால், பெரிய முதலாளித்துவ நாடுகள் (அய்க்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ்) உலகின் வளங்களைச் சுரண்டுவதன் பரப்பு விரிவடையாது; மாறாக, சுருங்கும்; உலகச் சந்தையில் விற்பதற்கான அவற்றின் வாய்ப்புகள் சிதைந்துபோகும்; அவர்களது தொழில்கள், அவற்றின் ஆற்றலை விட மிகமிகக் குறைவாக செயல்படும். உலகச் சந்தை சிதறிப் போவதை ஒட்டி, உலக முதலாளித்துவ கட்டமைப்பின் பொதுவான நெருக்கடி ஆழமடைவது என்பது இதுதான்.

இதை முதலாளித்துவத்தாரே உணர்கிறார்கள்; ஏனென்றால், சோவியத் ஒன்றியம் மற்றும் சீனம் போன்ற சந்தைகளின் இழப்பை உணராமல் இருப்பது முதலாளித்துவத்தாருக்கு சிரமமானது. மார்ஷல் திட்டம், கொரியாவில் போர், வெறித்தனமான மறுஆயுதமயமாக்கம், தொழில் ராணுவமயமாக்கம் ஆகியவற்றின் மூலம் இந்த சிரமத்தை ஈடு செய்யப் பார்க்கிறார்கள். ஆனால், இது, மூழ்கிக் கொண்டிருக்கிற ஒருவர் ஒரு புல்லைப் பற்றிக் கொள்வது போன்றதாகும்.

பொருளாதார வல்லுநர்கள் முன் இந்த நிலைமைகள் இரண்டு கேள்விகளை முன்வைக்கின்றன:

அ) முதலாளித்துவத்தின் நெருக்கடி கால கட்டங்களில் சந்தைகள் ஒப்பீட்டுரீதியில் நிலையான தன்மை கொண்டவை என்று இரண்டாம் உலகப் போருக்கு முன்பு ஸ்டாலின் முன்வைத்த ஆய்வு, இன்னமும் பொருத்தமானது என்று சொல்ல முடியுமா?

ஆ) முதலாளித்துவம் அழுகிப் போகும் நிலையில் இருந்தாலும், "ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது முன்பை விட வேகமாக வளர்கிறது" (5) என்று 1916ல் லெனின் முன்வைத்த ஆய்வு, இன்னமும் பொருத்தமானது என்று சொல்ல முடியுமா?

அது முடியாது என்று நான் கருதுகிறேன். இரண்டாவது உலகப் போர் உருவாக்கியுள்ள புதிய நிலைமைகளில் இருந்து பார்க்கும்போது, இந்த இரண்டு கருதுகோள்களும் அவற்றின் பொருத்தப்பாட்டை இழந்துவிட்டன என்றே கொள்ள வேண்டும்.

## 6. முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான போர் தவிர்க்க முடியாதது

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு உருவாகியுள்ள புதிய சர்வதேச நிலைமைகளில், முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான போர் தவிர்க்க முடியாதது என்ற நிலைமை முடிவுக்கு வந்துவிட்டது என்று சில தோழர்கள் கருதுகின்றனர்.

முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான முரண்பாட்டை விட சோசலிச முகாமுக்கும் முதலாளித்துவ முகாமுக்கும் இடையிலான முரண்பாடு கூடுதல் தீவிரத் தன்மை கொண்டது என்று அவர்கள் கருதுகிறார்கள்; தங்களுக்கிடையே போரிட்டு ஒன்றையொன்று பலவீனப்படுத்திவிடாமல் தடுத்துவிடும் அளவுக்கு, பிற முதலாளித்துவ நாடுகளை, அய்க்கிய அமெரிக்கா, போதுமான அளவுக்கு தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது என்றும் இரண்டு உலகப் போர்களால், அந்தப் போர்களால் ஒட்டுமொத்த முதலாளித்துவ உலகுக்கும் ஏற்பட்ட கடுமையான பாதிப்புகளால், முதலாளித்துவ நாடுகள் மீண்டும் ஒன்றுடன் ஒன்று போரிட துணிவதில்லை என்று பிரதானமான முதலாளித்துவ நாடுகள் போதுமான பாடங்கள் பெற்றுவிட்டன என்றும் - எனவே, முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் போர் இனி தவிர்க்க முடியாதது அல்ல என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

இந்தத் தோழர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். மேலோட்டமாக வெளியே வந்து போகும் நிகழ்வுப் போக்குகளை அவர்கள் பார்க்கிறார்கள்; ஆனால், கண்ணுக்குத் தெரியாமல் செயலில் இருந்தாலும், நிகழ்வுகளின் போக்குகளை தீர்மானிக்கும், ஆழ்ந்து கிடக்கும் சக்திகளை அவர்கள் பார்ப்பதில்லை.

எல்லாம் சரியாக நடப்பதைப் போலவே வெளியில் தெரியும்: மேற்கு அய்ரோப்பா, ஜப்பான் மற்றும் பிற முதலாளித்துவ நாடுகளை அய்க்கிய அமெரிக்கா படியளந்து தருகிறது; ஜெர்மனி (மேற்கு), பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அய்க்கிய அமெரிக்காவின் பிடிகளுக்குள் சிக்கி அதன் கட்டளைகளுக்கு பவ்யமாக அடிபணிகின்றன. ஆனால், எல்லாம் தொடர்ந்து காலமெல்லாம் சரியாக நடக்கும், இந்த நாடுகள் அய்க்கிய அமெரிக்காவின் மேலாதிக்கத்தை, ஒடுக்குமுறையை முடிவின்றி சகித்துக் கொள்ளும், அய்க்கிய அமெரிக்காவிடம் கட்டுண்டு கிடப்பதில் இருந்து விடுபட்டு சுதந்திரமான வளர்ச்சிப் பாதையில் செல்ல முயற்சி செய்யாது என்று கருதுவது தவறாகிவிடும்.

முதலில் பிரிட்டனையும் பிரான்சையும் எடுத்துக் கொள்வோம். சந்தேகத்துக்கிடமின்றி, அவை ஏகாதிபத்திய நாடுகள். மலிவான மூலப்பொருட்களும் பாதுகாப்பான சந்தையும் அவற்றுக்கு மிகவும் முக்கியம் என்பதிலும் சந்தேகத்துக்கிடமில்லை. மார்ஷல் திட்ட உதவி என்ற பெயரில் அமெரிக்கர்கள் பிரிட்டன் மற்றும் பிரான்சின் பொருளாதாரத்துக்குள் புகுந்து அவற்றை இணைப்புப் பொருளாதாரமாக மாற்றுகிற, பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் காலனி நாடுகளின் மூலப்பொருட்களை அமெரிக்க மூலதனம் கைப்பற்றுகிற, அதன் மூலம் பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் முதலாளிகளின் உயர்லாபத்துக்கு வேட்டு வைக்கிற, தற்போதைய நிலைமைகளை, அந்த நாடுகள் முடிவில்லாமல் சகித்துக் கொண்டே இருப்பார்கள் என்று அனுமானிக்க முடியுமா? முதலாளித்துவ பிரிட்டன், மற்றும், பிரிட்டனுக்குப் பிறகு, முதலாளித்துவ பிரான்ஸ், சுதந்திர நிலையை, அதாவது, கூடுதல் லாபத்தை அடைய, அய்க்கிய அமெரிக்காவின் தழுவலில் இருந்து விடுபட்டு, அதனுடன் மோதலில் ஈடுபட கடைசியில் நிர்ப்பந்திக்கப்படும் என்று சொல்வது மேலும் உண்மையானதாக இருக்காதா?

ஜெர்மனி (மேற்கு), ஜப்பான் ஆகிய வெற்றி கொள்ளப்பட்ட முக்கியமான நாடுகளைப் பார்ப்போம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காலடியில் இந்த நாடுகள் இப்போது துன்பத்தில் நலிவுற்றுள்ளன. அந்த நாடுகளின் தொழிலும் விவசாயமும், அவர்களது வணிகமும், அவர்களது அயல் மற்றும் உள்நாட்டு கொள்கைகளும், மேலும் அவர்களது மொத்த வாழ்வும் அமெரிக்க ஆக்கிரமிப்பு ஆட்சியால் தளையிடப்பட்டுள்ளன. ஆயினும், பெரிய ஏகாதிபத்திய நாடுகளாக இருந்த இந்த நாடுகள், அய்ரோப்பாவிலும் ஆசியாவிலும் நேற்று, பிரிட்டன், அய்க்கிய அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தின் அடிப்படையை ஆட்டம் காணச் செய்தன. இந்த நாடுகள் மீண்டும் தங்கள் காலில் நிற்க முயற்சி செய்யாது, அய்க்கிய அமெரிக்க ஆட்சியை நொறுக்கித் தள்ள முயற்சி செய்யாது, தங்களது சுதந்திரமான வளர்ச்சிக்காக முன்னேறிச் செல்லாது என்று கருதுவது, அதிசயங்களில் நம்பிக்கை கொள்வதாகும்.

முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான முரண்பாட்டை விட முதலாளித்துவத்துக்கும் சோசலிசத்துக்கும் இடையிலான முரண்பாடு வலிமையானது என்று சொல்லப்படுகிறது. தத்துவரீதியாக, இது உண்மையே. இது இப்போது, இன்று மட்டும் உண்மையாக இல்லை; இரண்டாம் உலகப் போருக்கு முன்பும் இது உண்மைதான். இதை முதலாளித்துவ நாடுகளின் தலைவர்கள் ஓரளவு புரிந்துகொண்டனர். ஆயினும் இரண்டாம் உலகப் போர் சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்துக்கு எதிராக நடக்கவில்லை; அது முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான போராக இருந்தது. ஏன்? முதலாவதாக, முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான போரை விட, ஒரு சோசலிச பூமியான சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்துக்கு எதிரான போர், முதலாளித்துவ நாடுகளுக்கு கூடுதல் ஆபத்து விளைவிக்கும்; ஏனென்றால், முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான போர், சில முதலாளித்துவ நாடுகளின் மீதான வேறு சில முதலாளித்துவ நாடுகளின் மேலாதிக்கத்தை மட்டும் கேள்விக்குள்ளாக்குகிறது; ஆனால், சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்துக்கு எதிரான போர் என்றால், முதலாளித்துவத்தின் இருத்தல் என்பதையே நிச்சயம் கேள்விக்குள்ளாக்க வேண்டும். இரண்டாவதாக, முதலாளித்துவ நாடுகள், சோவியத் ஒன்றியத்தின் மூர்க்கம் பற்றி பிரச்சார நோக்கங்களுக்காக கூக்குரலிட்டாலும், அது மூர்க்கமானது என்று அவர்களே நம்புவதில்லை; ஏனெனில் சோவியத் ஒன்றியத்தின் அமைதி கொள்கை பற்றி அவர்களுக்குத் தெரியும்; அது தானாக முதலாளித்துவ நாடுகள் மீது தாக்குதல் தொடுக்காது என்று அவர்களுக்குத் தெரியும்.

ஜெர்மனியையும் ஜப்பானையும் நிச்சயமாக செயலிழக்கச் செய்தாகிவிட்டது என்று இப்போது சில தோழர்கள் நம்புவதுபோல்தான், முதல் உலகப் போருக்குப் பிறகு ஜெர்மனியை செயலிழக்கச் செய்தாகிவிட்டது என்றும் நம்பப்பட்டது. அய்க்கிய அமெரிக்கா அய்ரோப்பாவை அதற்குரிய இடத்தில் நிறுத்திவிட்டது, ஜெர்மனி மீண்டெழவே முடியாது, முதலாளித்துவ நாடுகளுக்கு இடையில் இனி போரே மூளாது என்று அப்போதும் பத்திரிகைகளில் பேசப்பட்டது; கூக்குரல் எழுப்பப்பட்டது. ஆயினும், ஜெர்மனி அடிமைத் தளையில் இருந்துவிடுபட்டு தனது சுதந்திரமான வளர்ச்சிப் பாதையில் செல்லத் துவங்கி, அது தோற்கடிக்கப்பட்ட பதினைந்து, இருபது ஆண்டுகளில் ஒரு மிகப் பெரிய சக்தியாக மீண்டும் எழுந்தது. ஜெர்மனி பொருளாதாரரீதியாக மீண்டு, அதன் பொருளாதார போர் உள்ளாற்றலை உயர்த்திக் கொள்ள, பிரிட்டனும் அய்க்கிய அமெரிக்காவும்தான் ஜெர்மனிக்கு உதவி செய்தன என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. அய்க்கிய அமெரிக்காவும் பிரிட்டனும் ஜெர்மனியின் பொருளாதார மீட்சிக்கு உதவி செய்தபோது, மீண்டு எழும் ஜெர்மனியை சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக நிறுத்துவது, சோசலிச பூமிக்கு எதிராக ஜெர்மனியை பயன்படுத்திக் கொள்வது என்ற நோக்கம் கொண்டிருந்தன. ஆனால், ஜெர்மனி முதலில் ஆங்கிலேய - பிரெஞ்சு - அமெரிக்க முகாமுக்கு எதிராகத்தான் தனது வல்லமையை செலுத்தியது. ஹிட்லரின் ஜெர்மனி சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக போர் அறிவித்தபோது, ஆங்கிலேய - பிரெஞ்சு - அமெரிக்க முகாம்,

ஹிட்லரின் ஜெர்மனியுடன் நிற்பதற்குப் பதிலாக, ஹிட்லரின் ஜெர்மனிக்கு எதிராக சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியதுடனான கூட்டணியில் இணையவே நிர்ப்பந்திக்கப்பட்டது.

விளைவாக, முதலாளித்துவ முகாமுக்கும் சோசலிச முகாமுக்கும் இடையிலான முரண்பாடுகளை விட, சந்தைக்கான முதலாளித்துவ நாடுகளின் போர்தான், தங்கள் போட்டியாளர்களை முறியடிக்கும் விருப்பம்தான் வலிமையானது என்று நடைமுறையில் நிரூபணமானது.

ஆக, ஜெர்மனியும் ஜப்பானும் மீண்டும் தங்கள் கால்களில் நிற்க எழமாட்டார்கள், அய்க்கிய அமெரிக்காவின் அடிமைகளாய் இருப்பதில் இருந்து விடுபட்டு தங்கள் சொந்த சுதந்திரமான வாழ்க்கை வாழ முயற்சி செய்ய மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அப்படி உத்தரவாதம் எதுவும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

ஆனால், முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் போர் தவிர்க்க முடியாதது என்பது உறுதியானது என்று இதில் இருந்து தெரிகிறது.

சக்திவாய்ந்த, செல்வாக்கு பெற்ற நாடுகள் அமைதியின் பக்கமும் மற்றுமோர் உலகப் போருக்கு எதிராகவும் இன்று முன்வந்துள்ளன என்பதால், ஏகாதிபத்தியம் தவிர்க்க முடியாமல் போரை உருவாக்குகிறது என்ற லெனினின் தத்துவ கூற்று வழக்கொழிந்ததாக கருதப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இது உண்மையல்ல.

அமைதியை பாதுகாக்கவும் மற்றுமோர் உலகப் போர் மூளாமல் தடுக்கவும் மக்களை தட்டியெழுப்புவதே இன்றைய அமைதி இயக்கத்தின் நோக்கமாகும். விளைவாக, இந்த இயக்கத்தின் இலக்கு, முதலாளித்துவத்தை தூக்கியெறிந்து சோசலிசத்தை உருவாக்குவது அல்ல; அமைதியை பாதுகாப்பது என்ற ஜனநாயக நோக்கத்துடன் அது நின்று விடுகிறது. இந்த விசயத்தில், உள்நாட்டுப் போர் மேலும் தொலைதூரத்துக்குச் சென்று சோசலிச நோக்கங்களை எட்ட முயற்சிப்பதால், ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றுவது என்ற முதல் உலகப் போர் காலத்திய இயக்கத்தில் இருந்து, இன்றைய அமைதி இயக்கம் மாறுபடுகிறது.

சூழ்நிலைமைகளின் ஒரு நிச்சயமான இணைவில், இங்கேயோ, அங்கேயோ, அமைதிக்காக நடக்கும் ஒரு போராட்டம் சோசலிசத்துக்கான போராட்டமாக மாறுவது சாத்தியமே. ஆனால், அமைதிக்கான இன்றைய இயக்கமாக அது இருக்காது; அது முதலாளித்துவத்தை தூக்கியெறிவதற்கான ஓர் இயக்கமாக இருக்கும்.

அமைதிக்கான இன்றைய இயக்கம், அமைதியை பாதுகாப்பதற்கான இயக்கமாக, அது வெற்றி பெற்றால், ஒரு குறிப்பிட்ட போரை தடுத்து நிறுத்தும்; அதை தற்காலிகமாக தள்ளிப் போடும்; ஒரு குறிப்பிட்ட அமைதியை தற்காலிகமாக பாதுகாக்கும்; போரை விரும்பும் ஓர் அரசாங்கத்தை பதவி விலகச் செய்து, அந்த இடத்தில், தற்காலிகமாக அமைதியை பாதுகாக்க தயாராக இருக்கும் இன்னுமோர் அரசாங்கத்தை அமர்த்தும். இது நல்லதுதான். மிகவும் நல்லது கூடத்தான். ஆனால், முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான போர் தவிர்க்க முடியாதது என்பதற்கு பொதுவாக முடிவு கட்ட போதுமானதாக இருக்காது. அமைதி இயக்கத்தின் எல்லா வெற்றிகளுக்குப் பிறகும் ஏகாதிபத்தியம் இருக்கும், தொடர்ந்து செயலில் இருக்கும், விளைவாக, போர்கள் தவிர்க்க முடியாதவை என்பதும் தொடரும் என்பதாலும், அது மட்டும் போதாது.

போர் தவிர்க்க முடியாதது என்பதை முடிவுக்குக் கொண்டு வர, ஏகாதிபத்தியத்தை அழித்தொழிப்பது அவசியம்.

## 7. நவீன முதலாளித்துவத்தின் நவீன சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதிகள்

முதலாளித்துவம் மற்றும் சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதிகள் பற்றிய கேள்வி, விவாதத்தின் போக்கில் பல முறை எழுந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

இந்த விசயம் பற்றி பல்வேறு கருத்துகள், மிக அருமையானவை கூட, வெளிப்படுத்தப்பட்டன. விவாதத்தில் பங்கேற்றவர்களில் பெரும்பாலோர் இந்த விஷயத்திற்கு பலவீனமாக பதிலளித்தனர், இந்த விசயத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்பதும் உண்மை. இருப்பினும், அத்தகைய விதிகள் இருப்பதை பங்கேற்பாளர்கள் யாரும் மறுக்கவில்லை.

முதலாளித்துவத்தின் அடிப்படை பொருளாதார விதி என்று ஒன்று உள்ளதா? ஆம், இருக்கிறது. இந்த விதி என்ன, அதன் சிறப்பியல்பு அம்சங்கள் என்ன? முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதி முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சியின் சில குறிப்பிட்ட அம்சங்களையோ அல்லது குறிப்பிட்ட செயல்முறைகளையோ தீர்மானிக்கவில்லை, மாறாக, அதன் வளர்ச்சியின் அனைத்து பிரதானமான அம்சங்களையும் அனைத்து பிரதானமான இயக்கப்போக்குகளையும் தீர்மானிக்கிறது - விளைவாக, இது முதலாளித்துவ உற்பத்தியின் சாரத்தை, அதன் சாரமான இயல்பை தீர்மானிக்கிறது.

மதிப்பு விதி, முதலாளித்துவத்தின் அடிப்படை பொருளாதார விதியா? இல்லை. மதிப்பு விதி முதன்மையாக பண்ட உற்பத்திக்கான விதியாகும். பண்ட உற்பத்தியைப் போலவே மதிப்பு விதியும் முதலாளித்துவத்திற்கு முன்பே இருந்தது; முதலாளித்துவம் தூக்கியெறியப்பட்ட பிறகும் தொடர்ந்து இருக்கும்; இது உண்மைதான் என்றாலும், உதாரணமாக, நம் நாட்டில், ஒரு கட்டுப்படுத்தப்பட்ட செயல்பாட்டுத் தளத்தில் மதிப்பு விதி நிலவுகிறது; முதலாளித்துவ நிலைமைகளில் ஒரு பரந்த செயல்பாட்டுத் தளத்தைக் கொண்டிருப்பதால், மதிப்பு விதி, முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. ஆனால் அது முதலாளித்துவ உற்பத்தியின் சாரத்தையும் முதலாளித்துவ இலாபத்தின் கோட்பாடுகளையும் தீர்மானிக்கவில்லை என்பது மட்டுமல்ல; இது இந்த பிரச்சனைகளை எழுப்புவது கூட இல்லை. எனவே, அது நவீன முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியாக இருக்க முடியாது.

அதே காரணங்களுக்காக, போட்டி விதியோ, உற்பத்தியில் அராஜகத்தின் விதியோ அல்லது பல்வேறு நாடுகளில் முதலாளித்துவத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியின் விதியோ, முதலாளித்துவத்தின் அடிப்படை பொருளாதார விதியாக இருக்க முடியாது.

சராசரி இலாப விகிதத்தின் விதி, நவீன முதலாளித்துவத்தின் அடிப்படை பொருளாதார விதி என்று கூறப்படுகிறது. அது உண்மை அல்ல. நவீன முதலாளித்துவம், ஏகபோக முதலாளித்துவம், மூலதனத்தின் உயிரார்ந்த சேர்க்கை அதிகரிக்கும்போது, சரியக் கூடிய போக்கு கொண்ட சராசரி லாபத்தில் திருப்தியடையாது. நவீன ஏகபோக முதலாளித்துவம், சராசரி லாபம் அல்ல, அதிகபட்ச லாபம்பால் விழைவு கொண்டது; கிட்டத்தட்ட தொடர்ச்சியான நீட்டிக்கப்பட்ட மறுஉற்பத்திக்கு அது அவசியமானது.

முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதி என்ற கருத்துக்கு மிகவும் பொருத்தமானது உபரி மதிப்பு விதி மற்றும் முதலாளித்துவ இலாபத்தின் தோற்றம் மற்றும்

வளர்ச்சியின் விதி. உண்மையில் முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படை அம்சங்களை அதுதான் தீர்மானிக்கிறது. ஆனால் உபரி மதிப்பு விதி மிகவும் பொதுவான விதி; ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கான நிபந்தனையான அதிக இலாப விகிதம் பெறுவது என்ற பிரச்சனையை இது எதிர்கொள்வதில்லை. இந்த இடைவெளியை இட்டுநிரப்ப, உபரி மதிப்பு விதி இன்னும் ஸ்தூலமானதாக, ஏகபோக முதலாளித்துவத்தின் நிலைமைகளுக்கு ஏற்றதாக மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்; அப்படிச் செய்யும்போது, ஏகபோக முதலாளித்துவத்துக்கு ஏதோ லாபம் அல்ல, மாறாக, மிகச்சரியாக, அதிகபட்ச லாபம் வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதுவே நவீன முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியாக இருக்கும்.

நவீன முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியின் முக்கிய அம்சங்கள் மற்றும் நிபந்தனைகள், சற்றேறக்குறைய இப்படி உருவாக்கப்படலாம்: ஒரு நாட்டின் பெரும்பான்மையான மக்களை ஒட்டச்சுரண்டி, அழித்து, ஏதிலிகளாக்குவதன் மூலம் அதிகபட்ச முதலாளித்துவ லாபத்தைப் பெறுதல். பிற நாடுகளின், குறிப்பாக பின்தங்கிய நாடுகளின் மக்களை அடிமைப்படுத்துவது, திட்டமிட்டு கொள்ளையடிப்பதன் மூலம், கடைசியாக, அதிக லாபத்தைப் பெறப் பயன்படுத்தப்படும், போர்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்தை இராணுவமயமாக்கல் மூலம், அதிகபட்ச முதலாளித்துவ லாபத்தைப் பெறுவது.

இருப்பினும் நவீன நிலைமைகளின் கீழ் சராசரி லாபம் முதலாளித்துவ வளர்ச்சிக்கு போதுமானதாகக் கருதப்படலாம் என்று சொல்லப்படுகிறது. அது உண்மை அல்ல. சராசரி லாபம் என்பது லாபத்தின் மிகக் குறைந்த அளவாகும்; லாபம் அதற்குக் கீழே இறங்கினால் முதலாளித்துவ உற்பத்தி சாத்தியமற்றதாகிவிடும். ஆனால், காலனிகளைக் கைப்பற்றுவதிலும், மக்களை அடிபணியச் செய்வதிலும், போர்களை கட்டமைப்பதிலும் நவீன ஏகபோக முதலாளித்துவத்தின் அதிபதிகள் சராசரி லாபத்தை மட்டுமே பெற முயற்சி செய்கிறார்கள் என்று நினைப்பது அபத்தமானது. சராசரி லாபம் அல்ல, ஒரு விதியாக, சராசரி லாபத்துடன் சிறிது கூடுதலாக மட்டுமே அதிகரிப்பதை பிரதிபலிக்கும் அதிஉயர் லாபமும் அல்ல - ஆனால் துல்லியமாக, அதிகபட்ச லாபம் என்பதே ஏகபோக முதலாளித்துவத்தின் உந்துசக்தி ஆகும். அதிகபட்ச லாபத்தைப் பெறும் இந்த அவசியம்தான், காலனிகள் மற்றும் பிற பின்தங்கிய நாடுகளை அடிமைப்படுத்துதல், திட்டமிட்ட கொள்ளை, பல சுதந்திர நாடுகளை சார்பு நாடுகளாக மாற்றுதல், புதிய போர்களை கட்டமைப்பது போன்ற அபாயகரமான முயற்சிகளுக்கு ஏகபோக முதலாளித்துவத்தை செலுத்துகிறது. நவீன முதலாளித்துவத்தின் அதிபதிகளைப் பொறுத்தவரை, இவை, அதிகபட்ச லாபத்தைப் பெற, இறுதியாக, உலகப் பொருளாதார மேலாதிக்கத்தை வெல்ல கையாளப்படும் ஆகச்சிறந்த வணிக முயற்சிகளாகும்.

முதலாளித்துவத்தின் அடிப்படை பொருளாதார விதி, முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சியில் உள்ள அனைத்து முக்கிய நிகழ்வுப்போக்குகளையும், அதன் ஏற்றங்கள் மற்றும் நெருக்கடிகள், அதன் வெற்றிகள் மற்றும் தோல்விகள், அதன் தகுதிகள் மற்றும் குறைபாடுகள் என, அதன் முரண்பாடான வளர்ச்சியின் ஒட்டுமொத்த இயக்கப்போக்கையும் அது தீர்மானிப்பதால்,  அவற்றைப் புரிந்துகொள்ளவும் விளக்கவும், அது நமக்கு உதவுகிறது என்பதில்தான் அதன் முக்கியத்துவம் உள்ளது.

'பளிச்சென' தெரிகிற ஓர் எடுத்துக்காட்டைப் பார்க்கலாம்.

உற்பத்தி தொழில் நுட்பத்தின் வளர்ச்சியில் புரட்சியாளர்கள் வல்லுநர்களாக இருப்பதுபோல், மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்தில் முதலாளித்துவத்தார் வல்லுநர்களாக இருக்கும்போது, முதலாளித்துவத்தில் தொழில்நுட்பத்தின் விரைவான வளர்ச்சியை விளக்குவதாக இருக்கும், முதலாளித்துவத்தின் வரலாறு மற்றும் நடைமுறையில் இருந்து வெளிப்படும் விவரங்கள்

பற்றி நாம் நன்கு அறிந்திருக்கிறோம். ஆனால், முதலாளிகள் புதிய தொழில்நுட்பத்தை வளர்த்தெடுப்பதில் முதலாளித்துவத்தார் பிற்போக்குவாதிகளாக அடிக்கடி உடலுழைப்புக்குத் திரும்பும்போது, முதலாளித்துவத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியை தடுத்து நிறுத்தும் வேறு ஒரு நடைமுறையை விளக்கும் விவரங்கள் பற்றியும் நாம் அறிந்திருக்கிறோம்.

இந்தத் துயரமான முரண்பாட்டை எப்படி விளக்குவது? நவீன முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதி மூலம் மட்டுமே, அதாவது, அதிகபட்ச லாபத்தைப் பெற வேண்டியதன் அவசியம் மூலம் மட்டுமே இதை விளக்க முடியும். புதிய தொழில்நுட்பம் அதிகபட்ச லாபத்தைத் தரும்போது, முதலாளித்துவம் அதற்கு ஆதரவாகச் செயல்படும். புதிய தொழில்நுட்பம் அதிகபட்ச லாபத்தை அளிக்காதபோது, முதலாளித்துவம் புதிய தொழில்நுட்பத்துக்கு எதிராக, உடலுழைப்பை பயன்படுத்துவதற்கு ஆதரவாகச் செயல்படும்.

நவீன முதலாளித்துவத்தின் அடிப்படை பொருளாதார விதிப்படி விஷயங்கள் இப்படித்தான் இருக்கின்றன.

சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதி என்று ஒன்று உள்ளதா? ஆம், இருக்கிறது. இந்த விதியின் சாரமான அம்சங்கள், நிபந்தனைகள் என்ன? சோசலிசத்தின் அடிப்படை விதியின் சாரமான அம்சங்களை, நிபந்தனைகளை, சற்றேறக்குறைய இப்படி முன்வைக்கலாம்: உயர் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் சோசலிச உற்பத்தியை தொடர்ந்து விரிவாக்கி, கச்சிதமானதாக்குவதன் மூலம், ஒட்டுமொத்த சமூகத்தின், எப்போதும் உயர்ந்துவரும் பொருளாயத மற்றும் பண்பாட்டு தேவைகளை அதிகபட்சமாக நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவது.

இதன் விளைவாக: அதிகபட்ச லாபத்திற்கு பதிலாக, சமூகத்தின் பொருளாயத மற்றும் பண்பாட்டு தேவைகளை அதிகபட்சமாக நிறைவேற்றுவது; உற்பத்தியின் வளர்ச்சிக்குப் பதிலாக, ஏற்றத்திலிருந்து நெருக்கடிக்கும், நெருக்கடியிலிருந்து ஏற்றத்துக்குமாக தொடர்ச்சியில் தடைகளை சந்திக்கிற உற்பத்தியின் வளர்ச்சி என்றல்லாமல், உற்பத்தியின் தடைபடாத விரிவாக்கம்; தொழில்நுட்ப வளர்ச்சியில் அவ்வப்போது ஏற்படும் இடைவெளிகள், சமூகத்தின் உற்பத்தி சக்திகளை அழிப்பதும் அதனுடன் சேர்ந்து கொள்வது என்பதற்குப் பதிலாக, உயர் தொழில்நுட்பங்களின் அடிப்படையில் உற்பத்தியை முழுமையாக்கும் ஒரு தடையற்ற இயக்கப்போக்கு.

தேசிய பொருளாதாரத்தின் சமச்சீரான, விகிதாசார அடிப்படையிலான வளர்ச்சியின் விதி, சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதியாகும் என்று சொல்லப்படுகிறது. அது உண்மை அல்ல. தேசியப் பொருளாதாரத்தின் சமச்சீரான வளர்ச்சி, அதனால், இந்த விதியின் கிட்டத்தட்ட உண்மையான பிரதிபலிப்பான பொருளாதாரத் திட்டமிடல் ஆகியவை மட்டுமே, பொருளாதார வளர்ச்சியை திட்டமிடுவதன் நோக்கம் என்ன என்று தெரியாமல் போனாலோ, அல்லது அந்த நோக்கம் தெளிவாக இல்லை என்றாலோ, தம்மளவில் எந்த விளைவையும் உருவாக்க முடியாது. பொருளாதார வளர்ச்சிக்கு திட்டமிடப்படுவதற்கு ஒரு நோக்கம் இருந்தால் மட்டுமே, தேசிய பொருளாதாரத்தின் சமச்சீரான வளர்ச்சி விதி, விரும்பிய விளைவுகளை உருவாக்க முடியும். இந்த நோக்கத்தை, தேசிய பொருளாதாரத்தின் சமச்சீரான வளர்ச்சி விதியே தந்துவிட முடியாது. பொருளாதார திட்டமிடலும் தந்துவிட முடியாது. சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதியில், மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி, அதன் தேவைகளின் வடிவத்தில், இந்த நோக்கம் உள்ளார்ந்ததாக உள்ளது. விளைவாக, தேசியப் பொருளாதாரத்தின் சமச்சீரான வளர்ச்சி விதியில் செயல்பாடு, சோசலிசத்தின் அடிப்படைப் பொருளாதார விதியில் ஊன்றியிருந்தால் மட்டுமே, அது அதன் முழுமையான வாய்ப்புகளுக்கும் செயல்பட முடியும்.

பொருளாதாரத் திட்டமிடலைப் பொறுத்தவரை, இரண்டு நிபந்தனைகளைக் கடைப்பிடித்தால் மட்டுமே அது சாதகமான விளைவுகளை அடைய முடியும்: அ) அது தேசியப் பொருளாதாரத்தின் சமச்சீரான வளர்ச்சியின் விதியின் தேவைகளை சரியாக பிரதிபலிக்க வேண்டும் ஆ) சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதியின் நிபந்தனைகளுக்கு எல்லா வகையிலும் இணங்கிப் போவதாக இருக்க வேண்டும்.

## 8. பிற பிரச்சனைகள்

1) நிலப்பிரபுத்துவத்தில் பொருளாதாரத்துக்கு அப்பாற்பட்ட நிர்ப்பந்தம்

நிலப்பிரபுத்துவ நிலவுடைமையாளர்களின் பொருளாதார வலிமையை வலுப்படுத்துவதில் பொருளாதாரத்துக்கு அப்பாற்பட்ட நிர்ப்பந்தம் ஒரு பாத்திரம் ஆற்றியது உண்மைதான்; ஆயினும், நிலம் நிலப்பிரபுக்களின் உடைமையாக இருந்ததுதான் நிலப்பிரபுத்துவத்தின் அடிப்படையாகும்.

2) கூட்டுப் பண்ணை வீடுகளின் தனிப்பட்ட சொத்து

கூட்டுப் பண்ணையில் இருக்கிற ஒவ்வொரு வீட்டிலும் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக ஒரு பசு, கொஞ்சம் கால்நடைகள், கோழிகள் உள்ளன என்று பாடப்புத்தகம் சொல்வதுபோல் சொல்வது தவறு. உண்மையில், அது தனிப்பட்ட பயன்பாட்டில் இல்லை, தனிப்பட்ட சொத்தாக இருக்கிறது என்று நமக்குத் தெரியும். தனிப்பட்ட பயன்பாட்டுக்காக என்ற சொற்கள் விவசாயத் திட்டத்தின் மாதிரி விதிகளில் இருந்து எடுக்கப்பட்டவை. ஆனால், விவசாயத் திட்டத்தின் மாதிரி விதிகளில் ஒரு தவறு நடந்துவிட்டது. இன்னும் கவனமாக எழுதப்பட்ட சோவியத் யூனியனின் அரசியல் சாசனத்தில் இது வேறு விதமாக சொல்லப்பட்டுள்ளது:

கூட்டுப் பண்ணையில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் அதன் தனிப்பட்ட சொத்தாக அந்த மனையில் ஒரு துணை உழுநிலம், வாழ்வதற்கு ஒரு வீடு, கால்நடைகள், கோழி மற்றும் சாதாரண விவசாய கருவிகள் உள்ளன.

இது சரிதான்.

கூடுதலாக, கூட்டுப்பண்ணையின் ஒவ்வொரு விவசாயியும் தனது தனிப்பட்ட சொத்தாக, ஒன்று முதல் பல மாடுகள், உள்ளூர் நிலைமைகளைப் பொறுத்து, பல செம்மறி ஆடுகள், பன்றிகள் (எண்ணிக்கையும் உள்ளூர் நிலைமைகளைப் பொறுத்து அமையும்) மற்றும் கணக்கற்ற வளர்ப்புப் பறவைகள் (வாத்துகள், கோழிகள், வான்கோழிகள்) வைத்திருப்பதையும் இன்னும் குறிப்பாகக் கூறுவது நல்லது.

நம் நாட்டில் விவசாயம் கூட்டாக செய்யப்படுவதாக மாற்றப்பட்டுவிட்டதால், கூட்டுப் பண்ணை குடும்பத்தின் தனிப்பட்ட சொத்தாக என்ன இருக்கிறது என்பதை அறிய விரும்பும் வெளிநாடுகளில் உள்ள நமது தோழர்களுக்கு இதுபோன்ற விரிவான விவரங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

3) நில உரிமையாளர்களுக்கு விவசாயிகள் செலுத்தும் மொத்த வாடகை; மேலும் நிலம் வாங்குவதற்கான மொத்த செலவு.

நிலத்தை தேசியமயமாக்கியதால், 'ஆண்டுதோறும் சுமார் 500 மில்லியன் ரூபிள் வரை நில உரிமையாளர்களுக்கு வாடகை செலுத்துவதில் இருந்து விவசாயிகள் விடுவிக்கப்பட்டனர்' (இது 'தங்கம்' ரூபிள் என்று இருக்க வேண்டும்) என்று வரைவு பாடநூல் கூறுகிறது. இந்த எண்ணிக்கை சரிபார்க்கப்பட வேண்டும்; ஏனென்றால் பெரும்பான்மை ரஷ்ய கியுபரினியாக்களில் (ஜார் ஆட்சியில் உருவாக்கப்பட்ட ஆளுநர் கட்டுப்பாட்டில் இருக்கும் கிராமப்புற பகுதிகளில்) மட்டுமே செலுத்தப்பட்ட வாடகையை இது குறிக்கிறது, ரஷ்யா முழுவதிலும் செலுத்தப்பட்ட வாடகை இதில் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ரஷ்யாவின் சில எல்லைப் பகுதிகளில் வாடகை, பொருட்களாக செலுத்தப்பட்டது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்; வரைவு உரை புத்தகத்தின் ஆசிரியர்கள் இந்த விவரத்தை கவனிக்கவில்லை என்று தெரிகிறது. மேலும், விவசாயிகள் வாடகை செலுத்துவதில் இருந்து மட்டுமல்லாமல், நிலம் வாங்குவதற்கான வருடாந்திர செலவினங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். வரைவு பாடப்புத்தகத்தில் இது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதா? அது இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது; ஆனால் அது இருந்திருக்க வேண்டும்.

4) அரசு இயந்திரத்துடன் ஏகபோகங்களின் ஒன்றுகலத்தல்

'ஒன்றுகலத்தல்' என்ற சொல் பொருத்தமானதல்ல. இது மேலோட்டமாகவும் விளக்கமாகவும் அரசுடன் ஏகபோகங்களை இணைக்கும் இயக்கப்போக்கைக் குறிப்பிடுகிறது; ஆனால் இந்த இயக்கப்போக்கின் பொருளாதார தாக்கத்தை அது வெளிப்படுத்தவில்லை. உண்மை என்னவென்றால், இணைப்பு இயக்கப்போக்கு வெறுமனே ஒன்றுகலக்கும் இயக்கப்போக்கு மட்டும் அல்ல; மாறாக அது அரசு இயந்திரத்தை ஏகபோகங்களுக்கு அடிபணியச் செய்வதாகும். எனவே 'ஒன்றுகலத்தல்' என்ற சொல் தவிர்க்கப்பட்டு, 'அரசு இயந்திரத்தை ஏகபோகங்களுக்கு அடிபணியச் செய்வது' என்ற சொற்கள் வர வேண்டும்.

5) சோவியத் ஒன்றியத்தில் எந்திரங்கள் பயன்படுத்துதல்

'சோவியத் ஒன்றியத்தில் சமூகத்தின் உழைப்பை சிக்கனப்படுத்தும் எல்லா வாய்ப்புகளிலும் எந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன' என்று வரைவு பாடநூல் சொல்கிறது. அப்படி சொல்லவே கூடாது. முதலாவதாக, சோவியத் ஒன்றியத்தில் எந்திரங்கள் எப்போதும் சமூகத்தின் உழைப்பை சிக்கனப்படுத்துகின்றன; எனவே, சோவியத் ஒன்றியத்தில் எந்திரங்கள் சமூகத்தின் உழைப்பை சிக்கனப்படுத்தாத எந்த நிகழ்வும் நமக்குத் தெரியாது. இரண்டாவதாக, எந்திரங்கள் உழைப்பை சிக்கனமாக்குவதுடன் தொழிலாளியின் உழைப்பையும் இலகுவாக்குகின்றன; எனவே, நமது நிலைமைகளில், முதலாளித்துவ நிலைமைகளில் காணப்படுவது போல் அல்லாமல், தொழிலாளர்கள் எந்திரங்களை உழைப்பு இயக்கப்போக்குகளில் மிகுந்த ஆர்வத்துடன் பயன்படுத்துகின்றனர்.

எனவே, எந்திரங்கள் சமூகத்தின் உழைப்பை சிக்கனப்படுத்தி, தொழிலாளியின் உழைப்பை இலகுவாக்குவதால், சோவியத் ஒன்றியத்தில் நடப்பது போல வேறு எங்கும் எந்திரங்கள் விருப்ப ஆர்வத்துடன் பயன்படுத்தப்படுவதில்லை என்று சொல்ல வேண்டும்; மேலும் சோவியத் ஒன்றியத்தில் வேலைவாய்ப்பின்மை இல்லாததால், தொழிலாளர்கள் தேசிய பொருளாதாரத்தில் மிகுந்த ஆர்வத்துடன் எந்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

6) முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம்.

பொதுவாக, தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம் பற்றிப் பேசும்போது, வேலையில் இருக்கும் தொழிலாளர்களின் தரம் மட்டுமே பேசப்படுகிறது; வேலையில்லா சேமப் பட்டாளம்

என்று அறியப்படுபவர்களின் வாழ்க்கைத் தரம் பற்றி பேசப்படுவதில்லை. தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம் பற்றிய பிரச்சனையில் இத்தகைய அணுகுமுறை சரியானதா? இல்லை என்று கருதுகிறேன். தனது உழைப்பை விற்று மட்டுமே வாழக் கூடிய வேலையில்லா சேமப் பட்டாளம் இருக்கிறதென்றால், வேலை வாய்ப்பில்லாதவர்களும் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியாக இருந்தாக வேண்டும்; வேலை வாய்ப்பில்லாதவர்கள் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதி என்றால், அவர்களது ஏழ்மை நிலை, உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தின் மீது நிச்சயம் தாக்கம் செலுத்தும். எனவே, முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம் பற்றி விவரிக்கும்போது, வேலையில்லா சேமப் பட்டாளத்தின் நிலைமைகளையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

7) தேசிய வருமானம். வரைவுப் பாடப்புத்தகத்தில் தேசிய வருமானம் பற்றி ஓர் அத்தியாயம் சேர்ப்பது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன்.

8) சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரத்தின் நிறுவனர்கள் என்ற விதத்தில் லெனின் மற்றும் ஸ்டாலினைப் பற்றி பாடப்புத்தகத்தில் ஒரு சிறப்பு அத்தியாயம் இருக்க வேண்டுமா?

'சோசலிசத்தின் மார்க்சிய தத்துவம். வி.அய்.லெனின் மற்றும் ஜே.வி.ஸ்டாலின் ஆகியோரால் சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரம் நிறுவப்படுதல்' என்ற அத்தியாயத்தை பாடப்புத்தகத்திலிருந்து விலக்கிவிடலாம் என்று நான் கருதுகிறேன். இது முற்றிலும் தேவையற்றது; ஏனெனில் இது கூடுதலாக எதையும் சேர்க்காது; பாடப்புத்தகத்தின் முந்தைய அத்தியாயங்களில் ஏற்கனவே விரிவாக சொல்லப்பட்டதை மட்டுமே மீண்டும் சொல்கிறது.

மற்ற கேள்விகளைப் பொறுத்தவரை, தோழர்கள் ஆஸ்ட்ரோவிடியனோவ், லியோன்டியேவ், ஷெபிலோவ், கடோவ்ஸ்கி ஆகியோரின் 'முன்மொழிவுகள்' பற்றி சொல்ல எனக்கு எதுவுமில்லை.

## 9. அரசியல் பொருளாதாரம் மீதான மார்க்சியப் பாடநூலின் சர்வதேச முக்கியத்துவம்

அரசியல் பொருளாதாரம் மீதான மார்க்சியப் பாடப்புத்தகத்தின் முக்கியத்துவத்துக்கு தோழர்கள் மதிப்பளிக்க வேண்டிய அளவுக்கு முழுமையாக மதிப்பளிப்பதில்லை என்று நான் கருதுகிறேன்.

நமது சோவியத் இளைஞர்களுக்கு மட்டுமின்றி, எல்லா நாடுகளிலும் உள்ள கம்யூனிஸ்டுகளுக்கும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களுக்கும் இது தேவைப்படுகிறது. முதலாளித்துவ அடிமைத்தனத்திலிருந்து நாம் எப்படி வெளியேறினோம், சோசலிச வழியில் நமது நாட்டின் பொருளாதாரத்தை எப்படி மீண்டும் கட்டியெழுப்பினோம், விவசாயிகளின் நட்பை எப்படிப் பெற்றோம், மிகவும் சமீபகாலம் வரை ஏழ்மையிலும் பலவீனமாகவும் இருந்த ஒரு நாட்டை பணக்கார நாடாக வல்லமைமிக்க நாடாக எப்படி மாற்ற முடிந்தது, கூட்டு பண்ணைகள் என்பவை என்ன, உற்பத்திச் சக்திகள் சமூகமயமாக்கப்பட்டிருந்தாலும், பண்ட உற்பத்தி, பணம், வர்த்தகம் போன்றவற்றை நாம் ஏன் ஒழிக்கவில்லை என்பவற்றை வெளிநாட்டுகளில் உள்ள நமது தோழர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். இவையனைத்தையும் பற்றியும், இன்னும் பிறவற்றைப் பற்றியும், வெறும் ஆர்வத்தில் இருந்து அல்ல, நம்மிடம் இருந்து கற்றுக்கொண்டு, அவர்களது நாடுகளில் நமது அனுபவங்களை பயன்படுத்துவதற்காக அவர்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். எனவே, அரசியல் பொருளாதாரம் பற்றிய ஒரு நல்ல மார்க்சியப் பாடநூல் உருவாவது நமது நாட்டில் அரசியல்

முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்ல, மிகப்பெரிய சர்வதேச முக்கியத்துவமும் கொண்டதாகும்.

எனவே, நமது நாட்டில் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் இருக்கிற புரட்சிகர இளைஞர்களுக்கு ஒரு குறிப்பு புத்தகமாக செயல்படக்கூடிய ஒரு பாடநூல்தான் தேவை. இது மிகவும் பருமனாக இருக்கக்கூடாது, ஏனென்றால் அதிக பருமனான பாடப்புத்தகம் ஒரு குறிப்பு புத்தகமாக இருக்க முடியாது; அதை உள்வாங்கிக் கொள்வதும் கற்றறிந்து கொள்வதும் சிரமமாக இருக்கும். ஆனால் நமது நாட்டின் பொருளாதாரம், முதலாளித்துவ மற்றும் காலனிய பொருளாதாரம் ஆகியவை தொடர்பான அடிப்படைகள் அனைத்தையும் அது கொண்டிருக்க வேண்டும்.

வரலாறு பற்றி வரலாற்று ஆசியர்களும், அரசியல் பற்றி அரசியல் விஞ்ஞானிகளும், சித்தாந்தம் பற்றி சித்தாந்த அறிஞர்களும், பொருளாதாரம் பற்றி பொருளாதார அறிஞர்களும் பல கூடுதல் அத்தியாயங்களை பாடப்புத்தகத்தில் சேர்க்க வேண்டும் என்று கலந்துரையாடலின் போது முன்மொழிந்தனர். ஆனால் இதன் விளைவு பாடப்புத்தகத்தை அசாத்திய பரிமாணங்களுக்கு கொண்டு செல்லும். நிச்சயமாக, அதை செய்யக் கூடாது. அரசியல் பொருளாதாரத்தின் சிக்கல்களை விளக்குவதற்கு பாடநூல் வரலாற்று முறையைப் பயன்படுத்துகிறது; ஆனால் அதற்காக அரசியல் பொருளாதாரம் பற்றிய பாடப்புத்தகத்தை பொருளாதார உறவுகளின் வரலாறாக மாற்ற வேண்டும் என்று அர்த்தமல்ல.

500 பக்கங்கள் கொண்ட பாடப்புத்தகம், அதிகபட்சம் 600 பக்கங்கள் கொண்ட பாடப் புத்தகம் நமக்கு வேண்டும். இனி இல்லை. மார்க்சிய அரசியல் பொருளாதாரம் பற்றிய குறிப்பு புத்தகமாக அது இருக்கும்; அது எல்லா நாடுகளிலும் உள்ள இளம் கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு சிறந்த பரிசாக இருக்கும்.

வெளிநாடுகளில் உள்ள பெரும்பாலான கம்யூனிஸ்ட் கட்சிகள் போதுமான அளவு மார்க்சியரீதியாக வளராமல் இருப்பதை கருத்தில் கொண்டால், வெளிநாடுகளில் இது போன்ற பாடநூல் இளமையை கடந்துவிட்ட கம்யூனிஸ்ட்டுகளுக்கும் பெரிதும் பயன்படும்.

## 10. அரசியல் பொருளாதாரம் பற்றிய வரைவு பாடப்புத்தகத்தை மேம்படுத்துவதற்கான வழிகள்

விவாதத்தின் போது சில தோழர்கள் வரைவு பாடப்புத்தகத்தை மிகவும் சிரத்தையுடன் வாசித்து முடித்த சில தோழர்கள், அதில் பிழைகள் இருப்பதாகவும் பல அம்சங்கள் விடுபட்டிருப்பதாகவும் அதன் ஆசிரியர்களை கடிந்து கொண்டனர்; வரைவுப் பாடநூல் ஒரு தோல்வி என்றனர். அது நியாயமற்றது. பாடப்புத்தகத்தில் சில பிழைகள் உள்ளன, சில அம்சங்கள் விடுபட்டிருக்கின்றன என்பது உண்மையே. ஒவ்வொரு பெரிய முயற்சியிலும் நடைமுறைரீதியாக இப்படி நடப்பதுண்டு. இருப்பினும், விவாதத்தில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானோர், வரைவு பாடநூல், வருங்கால பாடப்புத்தகத்திற்கு ஓர் அடிப்படையாக அமையும் என்றும் சில திருத்தங்களும் சேர்க்கைகளும் மட்டுமே தேவை என்றும் கருதினர். உண்மையில், அரசியல் பொருளாதாரம் பற்றி ஏற்கனவே சுற்றில் உள்ள பாடப் புத்தகங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வரைவு மேம்பட்டதாகவே இருக்கிறது. அதற்காக வரைவு பாடநூலை எழுதியவர்கள் பெரும் பாராட்டுக்கு உரியவர்கள்.

வரைவுப் பாடப்புத்தகத்தை மேம்படுத்த, பாடப்புத்தகத்தை எழுதியவர்கள், அதை ஆதரிப்பவர்கள் மட்டுமல்லாது, விவாதத்தில் எதிர்ப்பு நிலை எடுத்தவர்கள் மற்றும் வரைவு

பாடநூலை முற்றிலுமாக விமர்சித்தவர்களும் அடங்கிய ஒரு சிறிய குழுவை அமைப்பது நல்லது என்று கருதுகிறேன்.

வரைவில் தரப்பட்டுள்ள புள்ளிவிவரங்களை சரிபார்க்கவும் வரைவுக்கான கூடுதல் புள்ளிவிவரங்களை வழங்கவும் ஒரு திறமையான புள்ளியியல் வல்லுநரையும், முன்வைப்புகளின் துல்லியத்தை சரிபார்க்க ஒரு திறமையான நீதிபதியையும் குழுவில் சேர்ப்பது நல்லது.

குழுவின் உறுப்பினர்கள் பிற எல்லா வேலைகளிலிருந்தும் தற்காலிகமாக விடுவிக்கப்பட வேண்டும்; மேலும் அவர்கள் பாடப்புத்தகப் பணிகளுக்கு தங்களை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு தேவையானவை வழங்கப்பட வேண்டும்.

மேலும், பாடப்புத்தகத்தின் இறுதித் திருத்தத்தைக் கவனிக்க மூன்று பேர் கொண்ட ஆசிரியர் குழுவை நியமிப்பது நல்லது. எழுதப்பட்ட முறையில் ஓர் ஒருமையை எட்ட இது அவசியமானது; துரதிர்ஷ்டவசமாக, வரைவு பாடப் புத்தகத்தில் அது இல்லை.

நிறைவு செய்யப்பட்ட பாடப்புத்தகத்தை மத்திய குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கான கால வரம்பு, ஒரு வருடம்.

ஜே.ஸ்டாலின்

பிப்ரவரி 1, 1952

## தோழர் அலெக்சாண்டர் இலியிச் நோட்கினுக்கு பதில்

*தோழர் நோட்கின்,*

நீங்கள் எழுப்பிய கேள்விகளில் எந்த அவசரமும் இல்லாததால் நான் பதில் சொல்ல அவசரப்படவில்லை. மேலும், அவசரமான பிற கேள்விகள் இருப்பதால், உங்கள் கடிதத்திலிருந்து இயல்பாகவே கவனத்தை அவை திசை திருப்பிவிட்டன.

நான் ஒவ்வொரு கேள்வியாக பதில் சொல்கிறேன்.

***முதல் கேள்வி***

அறிவியலின் விதிகளுக்கு எதிராக சமூகம் சக்தியற்றது அல்ல, பொருளாதார விதிகளை அறிந்த மனிதன், சமூகத்தின் நலன்களுக்காக அவற்றைப் பயன்படுத்த முடியும் என்று பொருள்படும்விதம் "குறிப்புகளில்ஷெ ஒரு கூற்று உள்ளது. இந்த அனுமானத்தை மற்ற சமூக அமைப்புகளுக்கு விரிவுபடுத்த முடியாது என்றும், அது சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தில் மட்டுமே பொருந்தும் என்றும், எடுத்துக்காட்டாக, முதலாளித்துவத்தில் பொருளாதார இயக்கப்போக்குகளின் அடிப்படை இயல்பு, சமூகத்தின் நலன்களுக்காக பொருளாதார விதிகளைப் பயன்படுத்துவதை சாத்தியமற்றதாக்குகிறது என்றும் சொல்கிறீர்கள்.

அது உண்மை அல்ல. உதாரணமாக, பிரான்சில் முதலாளித்துவப் புரட்சியின் போது, உற்பத்தி உறவுகள் உற்பத்தி சக்திகளின் இயல்புக்கு அவசியம் பொருந்திப் போக வேண்டும் என்ற விதியை, முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக பயன்படுத்தியது; நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளை தூக்கி எறிந்து, புதிய, முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை உருவாக்கி, நிலப்பிரபுத்துவத்துக்குள்ளிருந்தே உருவான உற்பத்தி சக்திகளின் இயல்புக்கு ஏற்ப அவற்றை மாற்றியமைத்தது. முதலாளித்துவம் தன்னிடம் சில குறிப்பிட்ட திறன்கள் இருந்ததால் இப்படிச் செய்யவில்லை; மாறாக அப்படிச் செய்வதில் அதன் நலன் இருந்தது. நிலப்பிரபுக்கள் தங்கள் முட்டாள்தனத்தால் இதை எதிர்க்கவில்லை; மாறாக இந்த விதி செயல்படுவதைத் தடுப்பதில் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர்.

நம் நாட்டில் நடந்த சோசலிசப் புரட்சியைப் பற்றியும் இப்படித்தான் சொல்ல வேண்டும். உற்பத்தி உறவுகள் உற்பத்தி சக்திகளின் இயல்புக்கு அவசியம் பொருந்திப் போக வேண்டும் என்ற விதியை பயன்படுத்தி, தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை தூக்கி எறிந்து, புதிய, சோசலிச உற்பத்தி உறவுகளை உருவாக்கி, அவற்றை உற்பத்தி சக்திகளின் இயல்புக்கு ஏற்ப மாற்றியமைத்தது. தொழிலாளர் வர்க்கம் தன்னிடம் சில குறிப்பிட்ட திறன்கள் இருந்ததால் இப்படிச் செய்யவில்லை; மாறாக அப்படிச் செய்வதில் அதன் நலன் இருந்தது. முதலாளித்துவ புரட்சியின் துவக்கத்தில் ஒரு முன்னேறிய சக்தியாக இருந்த முதலாளித்துவம், எதிர்ப் புரட்சி சக்தியாக மாறியிருப்பதால், இந்த விதியை செயல்படுத்துவதற்கு எல்லாவிதமான எதிர்ப்புகளையும் தெரிவித்தது; அதற்கு அமைப்பு இல்லாததால் இப்படிச் செய்யவில்லை; பொருளாதார இயக்கப்போக்கின் துவக்க நிலையும் அதை அப்படிச் செய்ய உந்திச் செலுத்தவில்லை; மாறாக, மிக முக்கியமாக, இந்த விதி செயல்படக் கூடாது என்பது அதன் முக்கியமான நலன் ஆகும்.

இதன் விளைவாக:

1. பொருளாதார இயக்கப்போக்குகளும் பொருளாதார விதிகளும் சோசலிசத்திலும் கம்யூனிசத்திலும் மட்டுமன்றி, பிற சமூக அமைப்புகளிலும் சமூகத்தின் நலன்களுக்காக ஏதோ ஓர் அளவில் பயன்படுத்தப்படுகின்றன;

2. வர்க்க சமுதாயத்தில் பொருளாதார விதிகளின் பயன்பாடு எப்போதும் எங்கேயும் ஒரு வர்க்கப் பின்னணியைக் கொண்டுள்ளது, மேலும், எப்போதும் எங்கேயும் சமூகத்தின் நலன்களுக்காக பொருளாதார விதிகளைமுன்னேறிய வர்க்கம் பயன்படுத்துகிறது; வழக்கொழிந்துபோன வர்க்கங்கள் அதை எதிர்க்கின்றன.

இந்த விசயத்தில், வரலாற்றின் போக்கின் எந்த ஒரு நேரத்திலும், உற்பத்தி உறவுகளை புரட்சிகரமாக மாற்றியமைப்பதில், பாட்டாளி வர்க்கத்திற்கும் பிற வர்க்கங்களுக்கும் இடையிலான வேறுபாடு, பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்கள், சமூகத்தின் ஏகப்பெரும்பான்மையோரின் நலன்களோடு ஒன்றிணைந்து இருப்பதில் உள்ளது; ஏனென்றால், ஏதோ ஒரு வடிவத்திலான சுரண்டலுக்கு முடிவு கட்டுவது என்பதாக பாட்டாளி வர்க்கப் புரட்சி இருப்பதில்லை; மாறாக, அனைத்து விதமான சுரண்டலுக்கும் முடிவு கட்டுவது என்பதாக இருக்கிறது; அதே நேரத்தில் மற்ற வர்க்கங்களின் புரட்சிகள், ஏதோ ஒரு வடிவத்திலான சுரண்டலை ஒழித்த பிறகு, சமூகத்தின் பெரும்பான்மையோரின் நலன்களுக்கு எதிராக, தங்கள் சொந்தமகுறுகிய வர்க்க நலன்களுக்குள் சுருங்கிநின்று விடுகின்றன.

சமூகத்தின் நலன்களுக்காக பொருளாதார விதிகளைப் பயன்படுத்துவதன் வர்க்கப் பின்னணி பற்றி "குறிப்புகள்" பேசுகின்றன. "இயற்கை அறிவியலின் விதிகளைப் போலல்லாமல், ஒரு புதிய விதியை கண்டுபிடிப்பதும் பொருத்துவதும் கிட்டத்தட்ட சுமுகமாக முன்னகர்வது போல் அல்லாமல், பொருளாதாரத் தளத்தில் ஒரு புதிய விதியை கண்டுபிடிப்பதும் பொருத்துவதும், சமூகத்தின் காலாவதியான சக்திகளின் நலன்களை பாதிக்கிறது; எனவே, அவர்களது மிகவும் சக்திவாய்ந்த எதிர்ப்பைச் சந்திக்கிறது" (6) இந்த விசயத்தை நீங்கள் கவனிக்கவில்லை.

### *இரண்டாவது கேள்வி*

உற்பத்தி சக்திகளின் இயல்புகளுடன் உற்பத்தி உறவுகள் முழுமையாக பொருந்திப் போவதை சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தின் கீழ் மட்டுமே அடைய முடியும் என்றும், மற்ற அமைப்புகளின் கீழ் இந்த இணக்கம் பகுதியள வினதாக மட்டுமே இருக்க முடியும் என்றும் நீங்கள் வலியுறுத்துகிறீர்கள்.

இது உண்மையல்ல. முதலாளித்துவப் புரட்சிக்குப் பிந்தைய சகாப்தத்தில், முதலாளித் துவம் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளைத் தகர்த்து முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை நிறுவியபோது, சந்தேகத்திற்கு இடமின்றி, முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் உற்பத்தி சக்திகளின் இயல்புகளுடன் முழுமையாக ஒத்துப்போன காலகட்டங்கள் இருந்தன. இல்லையெனில், முதலாளித்துவப் புரட்சிக்குப் பின் முதலாளித்துவம் அவ்வளவு வேகமாக வளர்ந்திருக்க முடியாது.

மேலும், 'முழுமையாக பொருந்திப் போவது' என்ற வார்த்தைகளை அவற்றின் முழுமுற்றூடான அர்த்தத்தில் புரிந்துகொள்ளக் கூடாது. சோசலிசத்தின் கீழ் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குப் பின்னால் உற்பத்தி உறவுகளில் எந்த இடைவெளியும் இல்லை என்பதாக அதை புரிந்து கொள்ளக் கூடாது. உற்பத்தி சக்திகள் மிகவும் இயங்காற்றல் கொண்டவை; அவை உற்பத்தியின் மிகவும் புரட்சிகரமான சக்திகள். சோசலிசத்திலும் கூட உற்பத்தி உறவுகளை விட அவை, மறுக்க முடியாமல், முன்னேறிச் செல்கின்றன. ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு தான் உற்பத்தி சக்திகளின் தன்மைக்கு ஏற்ப உற்பத்தி உறவுகள் மாறுகின்றன.

அப்படியானால், 'முழுமையாக பொருந்திப் போவது' என்ற வார்த்தைகளை எவ்வாறு புரிந்துகொள்வது? சோசலிசத்தில், பின்தங்கி நிற்கிற உற்பத்தி உறவுகளை உற்பத்தி சக்திகளுக்கு இணக்கமாக கொண்டு வர, சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கக் கூடிய நிலையில் சமூகம் இருப்பதால், உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான மோதல் நீடிப்பதில்லை என்று அதை புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் எதிர்ப்பை கட்டமைக்கக் கூடிய காலாவதி யான வர்க்கங்களை தன்னுடன் இணைத்துக் கொள்வதில்லை என்பதால், சோசலிச சமூகம் அவ்வாறு செய்யக்கூடிய நிலையில் உள்ளது. சோசலிசத்திலும், உற்பத்தி உறவுகளை மாற்றியமைப்பதன் அவசியத்தை உணராத பின்தங்கிய, செயலற்ற சக்திகள் இருக்கும்; ஆனால் பிரச்சினைகள் ஒரு மோதலுக்கு செல்லாமல் தடுத்துவிடுவது கடினம் அல்ல.

*மூன்றாவது கேள்வி*

உற்பத்திச் சாதனங்களையும், முதலாவ தாக, தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திக் கருவிகளை யும் நீங்கள் பண்டங்களாகக் கருதுகிறீர்கள் என்பது உங்கள் வாதத்திலிருந்து தெரிகிறது.

நமது சோசலிச கட்டமைப்பில் உற்பத்திச் சாதனங்களை பண்டங்களாகக் கருத முடியுமா? என் கருத்துப்படி நிச்சயமாக முடியாது.

ஒரு பண்டம் என்பது வாங்க விரும்பும் எந்த ஒருவருக்கும் விற்கப்படக்கூடிய ஒரு பொருளாகும், பண்டத்தின் உரிமையாளர் அதை விற்கும்போது, அவர் அதன் மீதான உரிமையை இழக்கிறார்; வாங்குபவர் அந்தப் பண்டத்தின் உரிமையாளராகிவிடுவார்; அதை அவர் மறுவிற்பனை செய்யலாம், அடகு வைக் கலாம் அல்லது அழுகிப் போகவும் விட்டு விடலாம். உற்பத்தி சாதனங்கள் இந்த வகையி னத்துக்குள் வருமா? நிச்சயமாக இல்லை. முதலாவதாக, உற்பத்தி சாதனங்கள் யாருக்கும் 'விற்கப்படுவதில்லை', அவை கூட்டுப் பண்ணை களுக்கு கூட 'விற்கப்படுவதில்லை'; அவை அரசால் அந்தத் தொழிலுக்கு ஒதுக்கப்படுகின் றன. இரண்டாவதாக, எந்தவொரு தொழில் நிறுவனத்துக்கும் உற்பத்தி சக்திகளை மாற்றும் போது, அவற்றின் உரிமையாளரான அரசு, அவற்றின் மீதான உரிமையை இழக்காது; மாறாக, அதை முழுமையாகத் தக்க வைத்துக் கொள்கிறது. மூன்றாவதாக, சோவியத் அரசிட மிருந்து உற்பத்தி சாதனங்களைப் பெறும் தொழில் நிறுவனங்களின் இயக்குநர்கள், அவற்றின் உரிமையாளர்களாக மாறுவதில்லை; மாறாக, அரசால் முன்வைக்கப்பட்ட திட்டங்க ளுக்கு ஏற்ப உற்பத்தி சாதனங்களைப் பயன்படுத்துவதில் அரசின் முகவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஆக, நமது கட்டமைப்பில் உற்பத்திச் சாதனங்களை நிச்சயமாகப் பண்டங்கள் என்ற வகையினத்தில் வகைப்படுத்த முடியாது.

அப்படியானால், உற்பத்தி சாதனங்களின் மதிப்பு, அவற்றின் உற்பத்திச் செலவு, அவற்றின் விலை போன்றவற்றைப் பற்றி ஏன் பேசுகிறோம்?

இரண்டு காரணங்களுக்காக.

முதலாவதாக, கணக்கு வழக்கு பார்க்க, நிறுவனங்கள் பயனுள்ளவையா அல்லது நஷ்டத்தில் இயங்குகின்றனவா என்பதைத் தீர்மானிக்க, நிறுவனங்களைச் சரிபார்த்து கட்டுப்படுத்த இது தேவைப்படுகிறது. ஆனால் இது இந்த விஷயத்தின் சம்பிரதாய அம்சம் மட்டுமே.

இரண்டாவதாக, நமது வெளிநாட்டு வர்த் தகத்தின் நலன்களுக்காக, வெளிநாடுகளுக்கு உற்பத்திச் சக்திகளை விற்பனை செய்வதற்கு இது தேவைப்படுகிறது. வெளிநாட்டு வர்த் தகத்

தளத்தில்,  இந்தத் தளத்தில் மட்டுமே, நமது உற்பத்தி சக்திகள் உண்மையில் பண்டாங் கள்; அவை உண்மையில் விற்கப்படுகின்றன (அதன் நேரடி அர்த்தத்தில்).

எனவே, வெளிநாட்டு வர்த்தகத் தளத்தில், நமது நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி சக்திகள் சாரமாகவும் சம்பிரதாயமாக வும் பண்டங்களின் பண்புகளை தக்கவைத்துக் கொள்கின்றன; ஆனால் உள்நாட்டுப் பொருளா தாரச் சுழற்சியில், உற்பத்தி சக்திகள் பண்டங் களின் பண்புகளை இழந்துவிடுகின்றன; அவை பண்டங்களாக இருப்பதில்லை;  மதிப்பு விதியின் செயல்பாட்டுத் தளத்தில் இருந்து வெளியேறிவிடுகின்றன; கணக்கு வழக்கு போன்ற பண்டங்களின் புறவயதன்மையை மட்டுமே தக்கவைத்துக்கொள்கின்றன.

இந்தத் தனித்தன்மையை எவ்வாறு விளக்குவது?

உண்மை என்னவென்றால், நமது சோசலிச நிலைமைகளில் பொருளாதார வளர்ச்சியானது எழுச்சிகளால் அல்லாமல், படிப்படியான மாற்றங்களின் மூலம், முன்செல்கிறது; பழையது அழிக்கப்பட்டுவிடுவது மட்டுமன்றி, புதியதற்கு ஏற்ப இயல்பை மாற்றிக்கொண்டு, வடிவத்தை மட்டும் தக்கவைத்துக்கொள்கிறது; புதியது பழையதை வெறுமனே அழிப்பதில்லை; மாறாக, அதனுள் ஊடுருவி, அதன் இயல்பையும் அதன் செயல்பாடுகளையும் மாற்றுகிறது, அதன் வடி வத்தை அழிக்காமல், புதியவற்றின் வளர்ச்சிக் காக அதைப் பயன்படுத்துகிறது. நமது பொரு ளாதார சுழற்சியில், இது, பண்டங்களுக்கு மட்டுமன்றி, பணத்திற்கும், வங்கிகளுக்கும் பொருந்தும்; அவை பழைய செயல்பாடுகளை இழந்து புதியவற்றைப் பெறும்போது, அவற்றின் பழைய வடிவத்தை தக்கவைத்துக் கொள்கின் றன; சோசலிச கட்டமைப்பு அதை பயன் படுத்திக் கொள்கிறது.

இந்த விஷயத்தை சம்பிரதாயமான கோணத் தில் அணுகினால், நிகழ்வுப்போக்குகளில் மேலோட்டமாக நடக்கும் இயக்கப்போக்கு களின் கோணத்தில் அணுகினால், முதலாளித்து வத்தின் வகையினங்கள், நமது பொருளாதாரத் தில் தங்கள் பொருத்தப்பாட்டை தக்க வைத்துக் கொள்கின்றன என்ற தவறான முடி வுக்கு வரக் கூடும். ஆனால், ஒரு பொரு ளாதார இயக்கப்போக்கின் உள்ளடக்கத்தை யும் வடிவத்தையும் கறாராக வேறுபடுத்திப் பார்க்கும், வளர்ச்சியின் ஆழமாக இயக்கப் போக்குகளையும் மேலோட்டமான நிகழ்வுப் போக்குகளையும் கறாராக வேறுபடுத்திப் பார்க் கும், மார்க்சிய பகுப்பாய்வின் நிலைப்பாட் டில் இருந்து இந்த விஷயத்தை அணுகினால், ஒருவர் ஒரே ஒரு சரியான முடிவுக்குத்தான் வர முடியும்; அதாவது, பிரதானமாக முதலா ளித்துவத்தின் பழைய வகையினங்களின் வடிவம், புறத்தோற்றம்தான், நம் நாட்டில் எஞ்சியுள்ளன; ஆனால், சோசலிசப் பொருளா தாரத்தின் வளர்ச்சியின் தேவைகளுக்கு ஏற்ப பொருத்தியதில் அவற்றின் சாராம்சம் அடிப்ப டையில் மாறிவிட்டது.

***நான்காவது கேள்வி***

விவசாயத்தில் உற்பத்தி செய்யப்பட்டு கொள்முதல் விலையில் அரசிடம் வழங்கப்படும் 'உற்பத்திச் சக்திகளின்' விலை மீது, மதிப்பு விதி, முறைப்படுத்தும் தாக்கம் செலுத்துகிறது என்று நீங்கள் வலியுறுத்துகிறீர்கள். பருத்தி போன்ற மூலப்பொருட்களை உற்பத்தி சக்திகள் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். ஆளி, கம்பளி மற்றும் பிற விவசாய மூலப்பொருட்களையும் நீங்கள் சேர்த்திருக்கலாம்.

இந்த விஷயத்தில் விவசாயம் 'உற்பத்தி சக்திகளை' உற்பத்தி செய்வதில்லை, மாறாக, ஒரே ஒரு உற்பத்தி பொருளை, அதாவது கச்சாப் பொருளை உற்பத்தி செய்கிறது என்பதை கவனிக்க வேண்டும். 'உற்பத்தி சக்திகள்' என்ற சொற்களை திரித்துச் சொல்லக்கூடாது. உற்பத்திச் சக்திகளின் உற்பத்தி பற்றி மார்க்சிஸ்டுகள் பேசும்போது, அவர்கள் முதன்மையாக மனதில்

வைத்திருப்பது உற்பத்திக் கருவிகளின் உற்பத்தியைத்தான். 'இயந்திர இயல்பு கொண்ட', ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், உற்பத்தியின் எலும்பும் சதையும் போன்ற, 'உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தின் சிறப்பியல்புகளின்' (7) உள்ளடக்கமாக இருக்கிற உழைப்பு கருவிகள், என்று மார்க்ஸ் சொல்வதைத்தான். உற்பத்திச் சாதனங்களின் ஒரு பகுதியை (மூலப் பொருள்கள்) உற்பத்திக் கருவிகளையும் உள்ளடக்கிய உற்பத்திச் சாதனங்களுடன் சமப்படுத்துவது மார்க்சியத்திற்கு எதிரானப் பாவச் செயலாகும், ஏனென்றால் மற்ற எல்லா உற்பத்தி சாதனங்களோடும் ஒப்பிடும்போது உற்பத்திக் கருவிகள் ஒரு தீர்க்கமான பாத்திரம் வகிக்கின்றன என்று மார்க்சியம் கருதுகிறது. உற்பத்தி வழிமுறைகள். சில வகையான மூலப்பொருட்கள் உற்பத்திக் கருவிகளின் உற்பத்திக்குத் தேவையென்றாலும், மூலப்பொருட்களால் தாமாகவே உற்பத்தி கருவிகளை உற்பத்தி செய்ய முடியாது என்பதும், அதே நேரம் உற்பத்திக் கருவிகள் இல்லாமல் எந்த மூலப்பொருளையும் உற்பத்தி செய்ய முடியாது என்பதும், அனைவருக்கும் தெரியும்.

மேலும்: தோழர் நோட்கின் நீங்கள் கூறுவது போல், விவசாயத்தில் உற்பத்தி செய்யப்படும் மூலப்பொருட்களின் விலை மீது மதிப்பு விதியின் செல்வாக்கு ஒரு ஒழுங்குபடுத்தும் செல்வாக்குதானா? நம் நாட்டில் விவசாய மூலப்பொருட்களின் விலை 'சுதந்திரமாக' இருந்திருந்தால், உற்பத்தியில் போட்டி மற்றும் அராஜகத்தின் விதி நிலவியிருந்தால், நம்மிடம் திட்டமிட்ட பொருளாதாரம் இல்லாதிருந்தால், மதிப்பு விதியின் தாக்கம் இருந்திருக்கும். ஆனால் நமது பொருளாதார அமைப்பில் இந்த 'இருந்திருந்தால்' அனைத்தும் இல்லாததால், விவசாய மூலப்பொருட்களின் விலை மீது மதிப்பு விதியின் தாக்கம் ஒழுங்குபடுத்தும் ஒன்றாக இருக்க முடியாது. முதலாவதாக, நம் நாட்டில் விவசாய மூலப்பொருட்களின் விலைகள் திட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டு, நிறுவப்படுகின்றன; அது 'சுதந்திரமானது' அல்ல. இரண்டாவதாக, உற்பத்தி செய்யப்படும் விவசாய மூலப்பொருட்களின் அளவு தன்னிச்சையாக அல்லது தற்செயலான கூறுகளால் தீர்மானிக்கப்படுவதில்லை; மாறாக, திட்டத்தால் தீர்மானிக்கப்படுகிறது. மூன்றாவதாக, விவசாய மூலப்பொருட்களின் உற்பத்திக்குத் தேவையான உற்பத்திக் கருவிகள் தனிநபர் வசமோ, அல்லது தனிநபர்களின் குழுக்களின் வசமோ இல்லை; அவை அரசின் கைகளில் குவிந்துள்ளன. இதற்குப் பிறகு, மதிப்பு விதியின் ஒழுங்குபடுத்தும் செயல்பாட்டுக்கு என்ன மிஞ்சியிருக்கிறது? சோசலிச உற்பத்தியின் சிறப்பியல்புகள் கொண்ட, மேலே குறிப்பிடப்பட்ட காரணிகளால், மதிப்பு விதியே ஒழுங்குபடுத்தப்படுவதாகத் தெரிகிறது.

விளைவாக, விவசாய மூலப்பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பதில் மதிப்பு விதி தாக்கம் செலுத்துகிறது என்பதை, இது இந்த இயக்கப்போக்கின் காரணிகளில் ஒன்று என்பதை மறுக்க முடியாது. ஆனால் அதன் தாக்கம் ஒழுங்குமுறைப்படுத்துவதாக இருக்காது என்பதையும் மறுக்க முடியாது.

*அய்ந்தாவது கேள்வி*

சோசலிச தேசியப் பொருளாதாரத்தின் லாபமீட்டும் திறன் தொடர்பாக எனது "குறிப்புகளில்ஷை நான் பேசும்போது, லாபகரமான நிறுவனங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுக்காமல், அவற்றுக்கு அக்கம்பக்கமாக லாபமீட்டாத நிறுவனங்களின் இருப்பை சகித்துக்கொள்வதன் மூலம், நமது திட்டமிட்ட பொருளாதாரம், பொருளாதார நிறுவனங்களின் லாபமீட்டும் திறன் என்ற கொள்கையையே அழித்து வருகிறது என்று குற்றம்சாட்டும் சில தோழர்களின் கருத்துகளுக்கு எதிராகப் பேசினேன்.

தனித்தனி ஆலைகள் அல்லது தொழில்களின் நிலைப்பாட்டில் இருந்து லாபமீட்டும் திறன் என்பது, அதீத உற்பத்தி நெருக்கடியில் இருந்து நம்மை பாதுகாத்து, உற்பத்தியின்

தொடர்ச்சியான விரிவாக்கத்தை உறுதி செய்யும், நமது சோசலிச உற்பத்தி முறையிலிருந்து நமக்குக் கிடைக்கும் லாபத்தின் உயர்ந்த வடிவத்துடன் ஒப்பிடும் போது, குறைவானதே என்று "குறிப்புகள்" சொல்கின்றன.

ஆனால் தனிப்பட்ட ஆலைகள் மற்றும் தொழில்களின் லாபமீட்டும் திறன் எந்த குறிப்பான மதிப்பையும் கொண்டிருக்கவில்லை, அது காத்திரமான கவனத்திற்கு உரியதல்ல என்று இதிலிருந்து முடிவு செய்வது தவறாகும். அது, உண்மையல்ல. தனிப்பட்ட ஆலைகள் மற்றும் தொழில்களின் லாபமீட்டும் திறன் நமது தொழில்துறையின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய மதிப்பு தருகிறது. கட்டுமானத்தைத் திட்டமிடும்போதும் உற்பத்தியைத் திட்டமிடும்போதும் இது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். வளர்ச்சியின் தற்போதைய கட்டத்தில் இது நமது பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படைத் தேவையாகும்.

*ஆறாவது கேள்வி*

முதலாளித்துவம் பற்றி குறிப்பிடும்போது, "வலுவாக சிதைக்கப்பட்ட போர்வையில் நீட்டிக்கப்பட்ட உற்பத்தி" என்று நீங்கள் சொல்வதை என்பதை எப்படிப் புரிந்துகொள்வது என்று தெளிவாகத் தெரியவில்லை. அத்தகைய உற்பத்தி, அதாவது நீட்டிக்கப்பட்ட உற்பத்தி இயற்கையில் நடப்பதில்லை என்று சொல்லப்பட வேண்டும்.

உலகச் சந்தை பிளவுபட்ட பின்னர், உலகின் வளங்களை முக்கிய முதலாளித்துவ நாடுகள் (அய்க்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ்) சுரண்டும் பரப்பு குறுகிப் போகத் தொடங்கிவிட்டது; முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் சுழற்சி தன்மை – உற்பத்தியின் விரிவாக்கம் மற்றும் குறுகிப் போவது - தொடர்ந்து செயல்பட வேண்டும். இருப்பினும், இந்த நாடுகளில் உற்பத்தியின் அளவு குறையும் என்பதால், இந்த நாடுகளில் உற்பத்தியின் விரிவாக்கம் குறுகிய அடிப்படையில் தொடரும்.

*ஏழாவது கேள்வி*

உலக முதலாளித்துவ கட்டமைப்பின் பொதுவான நெருக்கடி, முதலாம் உலகப் போர் காலகட்டத்தில், குறிப்பாக, சோவியத் யூனியன் முதலாளித்துவ கட்டமைப்பிலிருந்து வெளியேறியதால் துவங்கியது. பொதுவான நெருக்கடியின் முதல் கட்டம் அது. இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில், குறிப்பாக அய்ரோப்பிய மற்றும் ஆசிய மக்களின் ஜனநாயகங்கள் முதலாளித்துவ அமைப்பிலிருந்து விலகிய பிறகு, பொதுவான நெருக்கடியின் இரண்டாம் கட்டம் உருவானது. முதல் உலகப் போரின் காலத்தில் உருவான முதல் நெருக்கடியையும், இரண்டாம் உலகப் போரின் காலத்தில் உருவான முதல் நெருக்கடியையும், தனித்தனியான, தொடர்பில்லாத, சுயாதீனமான நெருக்கடிகளாக கருதக்கூடாது; உலக முதலாளித்துவ கட்டமைப்பின் பொதுவான நெருக்கடியின் வளர்ச்சியின் கட்டங்களாக அவை கருதப்பட வேண்டும்.

உலக முதலாளித்துவத்தின் பொதுவான நெருக்கடி வெறும் அரசியல் நெருக்கடியா அல்லது அல்லது வெறும் பொருளாதார நெருக்கடியா? இதுவும் இல்லை; அதுவும் இல்லை. இது ஒரு பொதுவான, அதாவது, உலக முதலாளித்துவ கட்டமைப்பின் அனைத்தும் தழுவிய நெருக்கடி; பொருளாதார தளத்தையும் அரசியல் தளத்தையும் உள்ளடக்கிய நெருக்கடி. உலக முதலாளித்துவப் பொருளாதார கட்டமைப்பு நாளுக்கு நாள் அதிகரித்த அளவில் அழுகிப் போவது ஒரு புறமும், முதலாளித்துவத்திலிருந்து விலகிச் சென்ற சோவியத் ரஷ்யா, சீனா மற்றும் பிற மக்கள் ஜனநாயகங்களின் வளர்ந்து வரும் பொருளாதார வல்லமை மறுபுறமுமாக, இந்த நெருக்கடியின் அடியாழத்தில் உள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஜே.ஸ்டாலின்

ஏப்ரல் 21, 1952

## தோழர் எல்.டி.யரோஷென்கோவின் பிழைகள் தொடர்பாக

நவம்பர் கலந்துரையாடல்களில் விவாதிக்கப்பட்ட பல்வேறு பொருளாதாரப் பிரச்சனைகள் தொடர்பாக, தோழர் எல்.டி.யரோஷென்கோவிடம் இருந்து மார்ச் 20, 1952 தேதியிட்ட கடிதம் ஒன்று, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்)ன் மத்திய கமிட்டியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்களுக்கு, சில நாட்களுக்கு முன்பு வந்தது. கலந்துரையாடலை தொகுத்து முன்வைக்கப்பட்ட அடிப்படை ஆவணங்கள், தோழர் ஸ்டாலினின் 'குறிப்புகள்' ஆகியவற்றில் தோழர் யரோஷென்கோவின் கருத்துக்கள் எவையும் பிரதிபலிக்கவில்லை என்று அவர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். 'சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரம்' பற்றி எழுத அவர் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், ஓராண்டு அல்லது ஒன்றரை ஆண்டுகளில் முடிக்கப்படவிருக்கும் இந்தப் பணியில் அவருக்கு உதவ இரண்டு உதவியாளர்கள் வேண்டும் என்றும் அவர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

தோழர் யரோஷென்கோவின் புகாரும் அவரது முன்வைப்பும் அவற்றின் தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

புகாரில் இருந்து துவங்கலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் பிரதிபலிக்காத தோழர் யரோஷென்கோவின் 'கருத்துக்கள்' என்ன?

### 1. தோழர் யரோஷென்கோவின் முதன்மை பிழை

தோழர் யரோஷென்கோவின் கருத்து பற்றி ஒரு சில சொற்களில் சொல்ல வேண்டும் என்றால், அது மார்க்சியமற்றது என்று சொல்ல வேண்டும்; எனவே அது மிகவும் தவறானது.

சமூகத்தின் வளர்ச்சியில் உற்பத்தி சக்திகளின், உற்பத்தி உறவுகளின் பாத்திரம் தொடர்பான மார்க்சிய நிலைப்பாட்டை அவர் புறக்கணிப்பது அவரது பிரதான பிழையாகும்; அவர் உற்பத்தி உறவுகளின் பாத்திரத்தை அளவுக்கு அதிகமாக குறை மதிப்பீடு செய்வது போலவே, உற்பத்தி சக்திகளின் பாத்திரத்தை அளவுக்கு அதிகமாக மிகை மதிப்பீடு செய்கிறார்; பிறகு, சோசலிசத்தில் உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் ஓர் அங்கம் என்று முடிக்கிறார்.

'வர்க்கப் பகை முரண்பாடுகள்' நிலவும்போது, 'உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு எதிராக' உற்பத்தி உறவுகள் செயல்படும்போது, உற்பத்தி உறவுகளுக்கு ஒரு குறிப்பிட்ட பாத்திரம் உண்டு என்று ஒப்புக்கொள்ள தோழர் யரோஷென்கோ தயாராக இருக்கிறார். ஆனால் அதனை ஒரு எதிர்மறை பாத்திரமாக, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை மட்டுப்படுத்தும் ஒரு காரணியின் பாத்திரமாக, வளர்ச்சிக்கு தடை உருவாக்கும் பாத்திரமாக சுருக்கி நிறுத்துகிறார். உற்பத்தி உறவுகளின் பிற செயல்பாடுகளை, ஆக்கபூர்வமான செயல்பாடுகளை உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை அது மட்டுப்படுத்தும் தோழர் யரோஷென்கோ காணத் தவறுகிறார்.

தோழர் யரோஷென்கோ சொல்வதுபடி, சோசலிச கட்டமைப்பைப் பொறுத்தவரை, 'வர்க்கப் பகை முரண்பாடுகள்' நிலவுவதில்லை; 'உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு எதிராக' உற்பத்தி

உறவுகள் செயல்படுவதில்லை; இங்கு உற்பத்தி உறவுகள், சுதந்திரமான பாத்திரத்தின் அடையாளங்கள் அனைத்தையும் இழந்துவிடுகிறது; வளர்ச்சிக்கான ஒரு காத்திரமான காரணியாக அது செயல்படுவதில்லை; அவை உற்பத்தி சக்திகளால் உள்வாங்கப்பட்டு, அவற்றின் ஓர் அங்கமாகிவிடுகின்றன. 'சோசலிசத்தில் மனிதர்களின் உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் ஒழுங்கமைவின் அங்கமாகிவிடுகின்றன, உற்பத்தி சக்திகளின் ஒழுங்கமைவின் ஒரு வழியாக, ஒரு கூறாக மாறிவிடுகின்றன' என்று தோழர் யரோஷென்கோ சொல்கிறார். (8)

அப்படியானால், 'சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரத்தின்' முக்கியமான கடமை என்ன? தோழர் யரோஷென்கோ சொல்கிறார்: 'எனவே, சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரத்தின் முக்கியமான பிரச்சனை, சோசலிச சமூகத்தில் உள்ள உறுப்பினர்களின் உற்பத்தி உறவுகளை ஆய்வு செய்து கொண்டிருப்பதல்ல, மாறாக, சமூக உற்பத்தியில் உற்பத்தி சக்திகளின் ஒழுங்கமைவின் ஒரு அறிவியல்பூர்வமான தத்துவத்தை, பொருளாதார வளர்ச்சியின் திட்டமிடலுக்கான ஒரு தத்துவத்தை, விவரித்து வளர்த்தெடுப்பதாகும்'. (9)

நமது பொருளாதாரம், பண்ட சுழற்சி, மதிப்பு விதி, இன்ன பிறவற்றில் பல்வேறு வடிவங்களில் சொத்து நிலவுவது போன்ற சோசலிச கட்டமைப்பின் பொருளாதாரப் பிரச்சனைகளில் தோழர் யரோஷென்கோ ஏன் ஆர்வம் காட்டவில்லை என்பதை இது விளக்கிவிடுகிறது. இவற்றை ஆய்வு சார்ந்த சர்ச்சைகளுக்கு வழிவகுக்கும் சிறிய பிரச்சனைகள் என்று தோழர் யரோஷென்கோ கருதுகிறார். 'சோசலிச அரசியல் பொருளாதாரத்தின் ஒரு குறிப்பிட்ட வகையினத்தின் - மதிப்பு, பண்டம், பணம், கடன், இன்ன பிற - பாத்திரம் தொடர்பான சர்ச்சைகள், நம் மத்தியில் ஏற்கனவே இருக்கின்றன; அவை ஆய்வு சார்ந்த இயல்பு கொண்டவை; அவற்றுக்குப் பதிலாக, சமூக உற்பத்தியில் உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வமான ஒழுங்கமைவு பற்றிய ஆரோக்கியமான விவாதங்கள் வர வேண்டும்; அது போன்ற ஓர் ஒழுங்கமைவின் தகுதியை அறிவியல்பூர்வமாக நிகழ்த்திக் காட்டுவது நடக்க வேண்டும்' என்று அவர் அவரது சோசலிச அரசியல் பொருளாதாரத்தில் எளிமையாக அறிவிக்கிறார். (10)

சுருங்கச் சொன்னால், பொருளாதாரப் பிரச்சனைகள் இல்லாத அரசியல் பொருளாதாரம்.

'உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வமான ஓர் ஒழுங்கமைவு' உருவாக்கப்பட்டுவிட்டால் போதுமானது, எந்த குறிப்பிட்ட சிரமமும் இல்லாமல் சோசலிசத்தில் இருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வது நடந்துவிடும் என்று தோழர் யரோஷென்கோ கருதுகிறார். கம்யூனிசம் நோக்கி மாறிச் செல்வதற்கு இதுவே போதுமானது என்று அவர் கருதுகிறார். 'சோசலிசத்தில், கம்யூனிச சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான அடிப்படை போராட்டம், உற்பத்தி சக்திகளை முறையான ஒழுங்குபடுத்துவதற்கான போராட்டமாக, அவற்றை சமூக உற்பத்தியில் அறிவுபூர்வமாக பயன்படுத்துவதற்கான போராட்டமாக சுருங்கிவிட்டது என்று அவர் எளிமையாக குறிப்பிடுகிறார். சமூக உற்பத்தியில் உற்பத்தி சக்திகளின் அதிஉயர்ந்த அறிவியல்பூர்வமான ஒழுங்கமைவே கம்யூனிசம்' என்று தோழர் யரோஷென்கோ பிரகடனம் செய்கிறார். (11)

அப்படியானால், கம்யூனிச கட்டமைப்பின் சாரம், 'உற்பத்தி சக்திகளை அறிவுபூர்வமாக ஒழுங்கமைப்பதில்' துவங்கி, அதிலேயே முடிந்துவிடுவதாகத் தெரிகிறது.

எல்லாவிதமான சமூக கட்டமைப்புகளுக்கும் ஒரே ஒரு அரசியல் பொருளாதாரம் இருக்க முடியாது, இரண்டு அரசியல் பொருளாதாரங்கள் இருக்க வேண்டும்: மனிதர்களின் உற்பத்தி உறவுகளை ஆய்வுப் பொருளாகக் கொண்டிருக்கும் சோசலிசத்துக்கு முந்தைய சமூக

கட்டமைப்புகளுக்கு ஒன்று, உற்பத்தியை, அதாவது, பொருளாதார உறவுகள், ஆனால் உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வமான ஒழுங்கமைவை, ஆய்வுப் பொருளாகக் கொண்டிராத சோசலிச கட்டமைப்புக்கு மற்றொன்று, என்று தோழர் யரோஷென்கோ முடிக்கிறார்.

இதுதான் தோழர் யரோஷென்கோவின் கருத்து.

இந்த கருத்து பற்றி என்ன சொல்லலாம்?

சமூக வரலாற்றில் உற்பத்தி உறவுகளின் பாத்திரம், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு, தடையாக, தளையாக சுருங்கியிருந்தது என்பது உண்மையல்ல. உற்பத்தி உறவுகளின் மட்டுப்படுத்தப்பட்ட பாத்திரம் பற்றி மார்க்சிஸ்டுகள் குறிப்பிடும்போது, எல்லாவிதமான உற்பத்தி உறவுகள் பற்றியும் அவர்கள் குறிப்பிடவில்லை; மாறாக, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு பொருந்திப் போகாத, அவற்றின் வளர்ச்சியை தடுக்கிற, பழைய உற்பத்தி உறவுகள் பற்றி குறிப்பிடுகிறார்கள். பழைய உற்பத்தி உறவுகளுக்கு அக்கம்பக்கமாகவே, புதிய உற்பத்தி உறவுகள் உள்ளன, அவை பழைய உற்பத்தி உறவுகளை விஞ்சிச் செல்கின்றன என்று நமக்குத் தெரியும். அப்படியானால், புதிய உற்பத்தி உறவுகளின் பாத்திரம், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு தடை உருவாக்குவதாக இருக்கிறது என்று சொல்ல முடியுமா? இல்லை. அப்படிச் சொல்ல முடியாது. மாறாக, புதிய உற்பத்தி உறவுகள்தான், தலையாய, தீர்மானிக்கும் சக்தி; அதுதான் உண்மையில், உற்பத்தி சக்திகளின் எதிர்காலத்தை, சக்திவாய்ந்த வளர்ச்சியை தீர்மானிக்கின்றன; அவை இல்லையென்றால், இன்றைய முதலாளித்துவ நாடுகளில் இருப்பதுபோல், உற்பத்தி சக்திகள் தேங்கிப் போய்விடும்.

நமது சோவியத் தொழில்துறையின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி அய்ந்தாண்டு திட்ட காலங்களில் பிரம்மாண்டமான பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், 1917 அக்டோபரில், பழைய, முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்கு பதில், புதிய, சோசலிச உற்பத்தி உறவுகளை கொண்டு வந்திருக்காவிட்டால் இந்த வளர்ச்சி நடந்திருக்காது. நமது நாட்டில், உற்பத்தியில், பொருளாதார உறவுகளில் இந்த புரட்சி நடந்திருக்கவில்லை என்றால், இன்றைய முதலாளித்துவ நாடுகளில் உற்பத்தி சக்திகள் தேங்கிப் போயிருப்பதுபோல், நமது உற்பத்தி சக்திகளும் தேங்கிப் போயிருக்கும்.

விவசாயத்தில் உள்ள நமது உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளில் பிரம்மாண்டமான பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், 1930களில் கிராமப்புறங்களில் இருந்த பழைய, முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்குப் பதிலாக புதிய, கூட்டுத்தன்மையுடனான உற்பத்தி உறவுகளை கொண்டு வராமல் இருந்திருந்தால், இந்த வளர்ச்சி நடந்திருக்காது. உற்பத்தியில் புரட்சி இல்லாமல், இன்றைய முதலாளித்துவ நாடுகளில் உற்பத்தி சக்திகள் தேங்கிப் போயிருப்பதுபோல், நமது விவசாயத்தில் இருந்த உற்பத்தி சக்திகள் தேங்கிப் போயிருக்கும்.

புதிய உற்பத்தி உறவுகள் எப்போதுமே புதிதாக இருந்துவிட முடியாது, இருப்பதில்லை என்பது உண்மைதான். அவை பழையனவாக மாறிவிடுகின்றன; உற்பத்தி சக்திகள் மேலும் வளர்வதற்கு எதிராக செயல்படுகின்றன; உற்பத்தி சக்திகளின் பிரதான மூலவிசையாக இருக்கும் அவற்றின் பாத்திரத்தை இழந்து, அவற்றுக்கு தடையாகிவிடுகின்றன. இங்கு, வழக்கொழிந்துவிட்ட உற்பத்தி உறவுகளின் இடத்தில், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை மேலும் தூண்டுகிற பிரதான மூலவிசையாக செயல்படும் பாத்திரத்தை கொண்ட புதிய உற்பத்தி உறவுகள் உருவாகின்றன.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் பாத்திரத்தில் இருந்து அவற்றை முன்னுக்கு நகர்த்தும் பிரதான மூலவிசையாக செயல்படும் பாத்திரத்துக்கும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு பிரதான மூலவிசையாக செயல்படும் பாத்திரத்தில் இருந்து உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் பாத்திரத்துக்கும் மாறும் உற்பத்தி உறவுகளின் விசித்திரமான மாற்றம், மார்க்சிய பொருளாயத இயங்கியலின் தலையாய கூறுகளை தனக்குள் கொண்டிருக்கிறது. மார்க்சியத்துக்கு புதிதானவருக்குக் கூட இன்று இது தெரியும். ஆனால் தோழர் யரோஷென்கோவுக்கு இது தெரியவில்லை என்று தெரிகிறது.

சோசலிசத்தில், உற்பத்தி, அதாவது பொருளாதார உறவுகள் அவற்றின் பாத்திரத்தை இழந்துவிடுகின்றன, அவை உற்பத்தி சக்திகளால் உள்வாங்கப்பட்டுவிடுகின்றன, சோசலிசத்தில் சமூக உற்பத்தி, உற்பத்தி சக்திகளின் ஒழுங்கமைவாக சுருங்கிவிடுகிறது, என்பவை உண்மையல்ல. சமூகத்தின் உற்பத்தி சக்திகள் (சமூகம் தனக்கு தேவையான பொருட்களை இயற்கையுடன் மோதி அதனிடம் இருந்து எடுத்துக் கொள்ள இயற்கை சக்திகளுடன் சமூகத்துக்கு உள்ள உறவு), உற்பத்தி உறவுகள் (உற்பத்தி இயக்கப் போக்கில் மனிதர்களுக்கு இடையிலான உறவு) என்ற பிரிக்க முடியாத இரண்டு பக்கங்கள் கொண்ட ஓர் உள்ளார்ந்த முழுமையே சமூக உற்பத்தி என்று மார்க்சியம் கருதுகிறது. இவையிரண்டும் பிரிக்க முடியாதபடி ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டவை என்றாலும், இவை சமூக உற்பத்தியின் வெவ்வேறு இரண்டு பக்கங்களே. இவையிரண்டும் சமூக உற்பத்தியின் வெவ்வேறு இரண்டு பக்கங்களாக இருப்பதால், அவை ஒன்றின் மீது ஒன்று தாக்கம் செலுத்துகின்றன. இவற்றில் ஒரு பக்கம் இன்னொரு பக்கத்தால் உள்வாங்கப்பட்டுவிடும், அதன் ஓர் அங்கமாக மாற்றப்பட்டுவிடும் என்று சொல்வது, மார்க்சியத்துக்கு எதிரான கொடிய பாவமாகும்.

மார்க்ஸ் சொல்கிறார்:

"உற்பத்தியில் ஈடுபடும்போது, மனிதர்கள் இயற்கை மீது மட்டுமல்லாமல், ஒருவர் மீது மற்றொருவரும் வினையாற்றுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட விதத்தில் ஒத்துழைப்பதன் மூலம், தங்கள் செயல்பாடுகளை பரஸ்பரம் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலம் மட்டுமே, அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். உற்பத்தி செய்வதற்காக, அவர்கள் ஒருவரோடு ஒருவர் தீர்மானகரமான பிணைப்புக்குள் நுழைகிறார்கள்; இந்த சமூக பிணைப்புகளுக்குள், உறவுகளுக்குள்தான், இயற்கை மீதான அவர்களது வினை, உற்பத்தி, நடக்கிறது". (12)

விளைவாக, சமூக உற்பத்திக்கு இரண்டு பக்கங்கள் உள்ளன; அவை பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருந்தாலும், இரண்டு வெவ்வேறு வகை உறவுகளை பிரதிபலிக்கின்றன; ஒன்று மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவு (உற்பத்தி சக்திகள்); மற்றொன்று உற்பத்தி இயக்கப் போக்கில் மனிதர்களுக்கு இடையிலான உறவு (உற்பத்தி உறவுகள்). சோசலிச கட்டமைப்பாயினும், அல்லது வேறு எந்த கட்டமைப்பாயினும், உற்பத்தியின் இந்த இரண்டு பக்கங்களும் இருந்தால்தான் சமூக உற்பத்தி இருக்கும்.

தோழர் யரோஷென்கோ மார்க்ஸ் சொல்வதை ஒப்புக்கொள்ளவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. இதனால்தான், உற்பத்தியை, பொருளாதார உறவுகளை புறந்தள்ளி, அவற்றில் இருந்து உற்பத்தி சக்திகளை பிரித்து நிறுத்தி, சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரம் என்ற பிரச்சனையை உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வமான ஒழுங்கமைவு என்று சுருக்கி நிறுத்துகிறார்.

எனவே, தோழர் யரோஷென்கோவை நாம் பின்தொடர்ந்தால், மார்க்சிய அரசியல் பொருளாதாரத்துக்குப் பதில், போக்டனோவின் அனைத்தும் தழுவிய அமைப்பு விஞ்ஞானம் போன்ற இயல்பு கொண்ட ஒன்றுதான் நமக்குக் கிடைக்கும்.

உற்பத்தி சக்திகள்தான், உற்பத்தியின் மிகவும் இயங்காற்றல்மிக்க, புரட்சிகரமான சக்திகள் என்ற சரியான கருத்தில் இருந்து துவங்கி, தோழர் யரோஷென்கோ, சோசலிசத்தில் உற்பத்தியின், பொருளாதார உறவுகளின் பாத்திரத்தை மறுக்கும் அளவுக்கு, அந்த கருத்தை ஓர் அபத்தக் கருத்தாக சுருக்கிவிடுகிறார்; முழுமையான துடிப்புள்ள சமூக உற்பத்திக்குப் பதிலாக, புகாரினின் சமூக அமைப்பு தொழில்நுட்பத்தின் இயல்பு கொண்ட தாறுமாறான, குறுக்குமறுக்கான, உற்பத்தித் தொழில்நுட்பம்தான் அவருக்குக் கிடைக்கிறது.

மார்க்ஸ் சொல்கிறார்:

“மனிதர்கள், அவர்களது சமூக உற்பத்தி வாழ்வில், தவிர்க்கமுடியாத, அவர்களுக்கு விருப்பத்துக்கு அப்பாற்பட்ட வரையறுக்கப்பட்ட உறவுக்குள், அவர்களது பொருளாயத உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியில் ஒரு வரையறுக்கப்பட்ட கட்டத்துடன் இசைந்துபோகிற உற்பத்தி உறவுகளுக்குள், நுழைகிறார்கள். இந்த உற்பத்தி உறவுகளின் மொத்தத் தொகுப்புதான் சமூகத்தின் பொருளாதார கட்டமைப்பு; அந்த உண்மையான அடிக்கட்டுமானத்தின் மீதுதான், ஒரு சட்டப்படியான, அரசியல் மேல்கட்டுமானம் எழுகிறது; சமூக உணர்வின் வரையறுக்கப்பட்ட வடிவங்களுடன் அது இசைந்துபோகிறது”. (13)

சோசலிச சமூகம் உள்ளிட்ட ஒவ்வொரு சமூக அமைப்புக்கும், பொருளாதார அடிக்கட்டுமானம் உள்ளது; அது மனிதர்களின் உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்த தொகுப்பால் ஆனது. சோசலிச கட்டமைப்பின் பொருளாதார அடிக்கட்டுமானம் தோழர் யரோஷென்கோ சொல்வதுபடி என்ன ஆகும் என்ற கேள்வி எழுகிறது. தோழர் யரோஷென்கோ சோசலிசத்தில் உற்பத்தி உறவுகளை, கிட்டத்தட்ட தனித்துவிடப்பட்ட ஒரு தளமாக, ஏற்கனவே இல்லாமல் செய்துவிட்டார்; அவற்றில் மிஞ்சியவற்றை உற்பத்தி சக்திகளின் ஒழுங்கமைவில் சேர்த்துவிட்டார். சோசலிச கட்டமைப்பில் அதன் சொந்த பொருளாதார அடிக்கட்டுமானம் இருக்குமா என்று கேள்வி எழுகிறது. சோசலிசத்தில் கிட்டத்தட்ட ஒரு தனித்த கூறாக, உற்பத்தி உறவுகள் மறைந்துவிட்ட பிறகு, சோசலிச கட்டமைப்பில் பொருளாதார அடிக்கட்டுமானம் இல்லாமல்தான் இருக்கும் என்பது தெளிவு.

சுருங்கச் சொன்னால், ஒரு பொருளாதார அடிக்கட்டுமானம் இல்லாத ஒரு சோசலிச கட்டமைப்பு. நகைப்புக்குரிய நிலைதான்.....

பொருளாதார அடிக்கட்டுமானம் இல்லாத ஒரு சமூக அமைப்பு சாத்தியமா? சாத்தியம் என்று தோழர் யரோஷென்கோ நம்புகிறார். ஆனால், இயற்கையில் அதுபோன்ற சமூக அமைப்புகள் இருக்காது என்று மார்க்சியம் நம்புகிறது.

கடைசியாக, உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வமான ஒழுங்கமைவுதான் கம்யூனிசம், உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வமான ஒழுங்கமைவுதான் கம்யூனிச கட்டமைப்பின் துவக்கமும் முடிவும், உற்பத்தி சக்திகளை அறிவுபூர்வமான ஒழுங்கமைப்பது மட்டும் போதுமானது, எந்த குறிப்பிட்ட சிரமமும் இல்லாமல் கம்யூனிசம் நோக்கிய மாற்றம் நடந்துவிடும் என்பவை உண்மை அல்ல. நமது இலக்கியத்தில் கம்யூனிசம் பற்றிய மற்றொரு வரையறை, மற்றொரு சூத்திரம் - லெனினின் சூத்திரம் உள்ளது: "கம்யூனிசம் என்பது சோவியத் ஆட்சி மற்றும் மொத்த நாட்டையும் எந்திரமயமாக்குவது”. (14). லெனினின் சூத்திரம் தோழர் யரோஷென்கோவுக்கு பிடிக்காமல் போகலாம். அந்த சூத்திரத்துக்குப் பதில் அவர் தனது சொந்த சூத்திரத்தை முன்வைக்கலாம்: "சமூக

உற்பத்தியில் உற்பத்தி சக்திகளின் அதிஉயர் அறிவியல்பூர்வ ஒழுங்கமைவுதான் கம்யூனிசம்".

முதலில், தோழர் யரோஷென்கோ பிரதிநிதித்துவப்படுத்தும் உற்பத்தி சக்திகளின் இந்த "அதிஉயர் அறிவியல்பூர்வ" அல்லது "அறிவுபூர்வ" ஒழுங்கமைவு என்னவென்று, அதன் ஸ்தூலமான சுட்டுப்பொருள் என்னவென்று யாருக்கும் தெரியாது. மாநாட்டிலும் விவாதக் குழுக்களிலும் அவர் ஆற்றிய உரைகளில், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்களுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், தோழர் யரோஷென்கோ, இந்த கற்பனையான சூத்திரம் பற்றி மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்; ஆனால், எந்த இடத்திலும், கம்யூனிச கட்டமைப்பின் துவக்கமாகவும் முடிவாகவும் இருக்கப் போகிற இந்த உற்பத்தி சக்திகளின் "அறிவுபூர்வ ஒழுங்கமைவை" எப்படி புரிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு வார்த்தை கூட அவர் சொல்லவில்லை.

இரண்டாவதாக, இரண்டு சூத்திரங்களில் ஒன்றை தேர்ந்தெடுக்க நேர்ந்தால், தோழர் யரோஷென்கோவின் கற்பனைக் கதம்பமான, மார்க்சியமல்லாத, போக்டனோவின் ஆயுதக் கிடங்கில் இருந்து பெறப்பட்ட, போக்டனோவின் "அனைத்தும் தழுவிய அமைப்பு விஞ்ஞானத்தில்" இருந்து பெறப்பட்ட போலி சூத்திரமாக இருக்குமே தவிர, அது லெனினின் சூத்திரமாக இருக்காது; சரியான ஒரே சூத்திரமான லெனினின் சூத்திரம் கைவிடப்பட வேண்டும்.

உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வமான ஒழுங்கமைவை மட்டும் உறுதிப்படுத்தினால் போதுமானது, அதனால் நமக்கு அபரிதமான உற்பத்திப் பொருட்கள் கிடைக்கும், அதன் மூலம் நாம் கம்யூனிசம் நோக்கி சென்றுவிடலாம், "ஒவ்வொருவருக்கும் அவரது உழைப்புக்கேற்ப" என்ற சூத்திரத்தில் இருந்து, "ஒவ்வொருவருக்கும் அவரது தேவைக்கேற்ப" என்ற சூத்திரத்துக்கு கடந்து சென்று விடலாம் என்று தோழர் யரோஷென்கோ கருதுகிறார். இது மிகப்பெரிய தவறு; சோசலிசத்தின் பொருளாதார வளர்ச்சி விதிகள் பற்றிய புரிதல் சற்றும் இல்லை என்பதை இது காட்டுகிறது. சோசலிசத்தில் இருந்து கம்யூனிசம் நோக்கி மாறிச் செல்வதற்கான நிபந்தனைகள் பற்றிய தோழர் யரோஷென்கோவின் கருத்து மிகவும் துவக்க நிலையிலானது; சிறுபிள்ளைத்தனமானது. கூட்டுப் பண்ணை, குழுக்கள், சொத்து, பண்ட சுழற்சி போன்ற பொருளாதார காரணிகள் செயலில் இருந்தால், சமூகத்தின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றும் அளவுக்கான அபரிமிதமான உற்பத்திப் பொருட்களோ, "ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கேற்பஷ என்ற சூத்திரத்தை நோக்கி மாறிச் செல்வதோ இருக்காது என்பதை அவர் புரிந்துகொள்ளவில்லை. "ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைக்கேற்ப" என்ற சூத்திரத்தை நோக்கிச் செல்லும் முன்பு, சமூகத்தின் பொருளாதார மற்றும் கலாச்சார மறுகற்பித்தலின் பல்வேறு கட்டங்களின் ஊடே நாம் செல்ல வேண்டியிருக்கும் என்பதை, அந்தக் கட்டங்களின் ஊடே, சமூகத்தின் பார்வையில், உழைப்பு வாழ்க்கை நடத்துவதற்கான ஒரு வழி என்பதில் இருந்து வாழ்க்கையின் பிரதான தேவையாக மாறும் என்பதை, சமூகத்தின் சொத்து, சமூக இருத்தலின் அடிப்படைக்கான, மீறமுடியாத அடிப்படையாக மாறும் என்பதை தோழர் யரோஷென்கோ புரிந்துகொள்ளவில்லை.

கம்யூனிசம் நோக்கி மாறிச் செல்வது வெறுமனே பிரகடனப்படுத்துவது என்றல்லாமல், உண்மையிலோ மாறிச் செல்ல, குறைந்தது மூன்று பிரதானமான நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

1. முதலில், உற்பத்தி கருவிகளின் உற்பத்தி ஒப்பீட்டளவில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் விரிவாக்குவதுடனான, அனைத்து விதமான சமூக உற்பத்தியையும், இடைவிடாமல்

விரிவுபடுத்துவதுதான் அவசியம்; "உற்பத்தி சக்திகளின் கற்பனையான அறிவுபூர்வ ஒழுங்கமைவு" அல்ல. உற்பத்தி கருவிகளின் உற்பத்தி, அதன் சொந்த நிறுவனங்களுக்கு, தேசப் பொருளாதாரத்தின் பிற அனைத்து துறைகளுக்கும் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு மட்டுமின்றி, அது இல்லாமல், நீட்டிக்கப்பட்ட அளவில் மறுஉற்பத்தியும் சாத்தியமில்லை என்பதால், உற்பத்தி கருவிகளின் உற்பத்தி ஒப்பீட்டளவில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் விரிவாக்குவது அவசியமாகிறது.

2. இரண்டாவதாக, கூட்டுப் பண்ணைகளுக்குச் சாதகமாக, அதன் மூலம் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் சாதகமாக, கூட்டுப் பண்ணை சொத்தை அரசின் சொத்து என்ற நிலைக்கு, படிப்படியாக மாறிச் செல்வதன் மூலம் உயர்த்துவதும், படிப்படியாக மாறிச் செல்வதன் மூலம், பண்ட சுழற்சிக்குப் பதிலாக, உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனை அமைப்பை கொண்டு வந்து, அதன் கீழ் சமூகத்தின் நலன்களில் இருந்து சமூக உற்பத்தியின் மொத்த உற்பத்திப் பொருட்களையும் கட்டுப்படுத்தும் மத்திய அரசு அல்லது ஒரு சமூக பொருளாதார மய்யம் செயல்படுவதும் அவசியமாகிறது.

சோசலிசத்தில் சமூகத்தின் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையில் முரண்பாடு இல்லை என்று தோழர் யரோஷென்கோ சொல்வது தவறாகும். நமது தற்போதைய உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு முழுமையாக பொருந்திப் போகும் ஒரு காலகட்டத்தில் உள்ளன என்பதும் அவை அதிவேகப் பாய்ச்சலில் முன்செல்ல உதவுகின்றன என்பதும் உண்மைதான். ஆனால், நமது உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் முரண்பாடு இல்லை என்று கருதி ஓய்வெடுத்துவிடுவது சரியல்ல. உற்பத்தி சக்திகள் வளரும்போது, உற்பத்தி உறவுகள் பின்தங்கும், இனியும் பின்தங்கும் என்பதைக் காணும்போது, சில முரண்பாடுகள் இருக்கின்றன; இனியும் இருக்கும். வழிநடத்தும் அமைப்புகள் சரியான கொள்கைகளை வகுக்கும்போது, இந்த முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாக மாறாது; அதனால், சமூகத்தின் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கு இடையில் மோதல் ஏற்படும் அளவுக்கு நிலைமைகள் செல்ல வாய்ப்பில்லை. தோழர் யரோஷென்கோ சொல்வது போன்ற ஒரு தவறான கொள்கையை கடைபிடித்தால், நிலைமை வேறுவிதமாக இருக்கும். அப்படிச் செய்தால், மோதலை தவிர்க்க முடியாமல் போகும்; நமது உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு கடுமையான தடையாக மாறியிருக்கும்.

எனவே, துவக்க நிலையில் உள்ள முரண்பாடுகளை கண்டுணர்ந்து, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு உற்பத்தி உறவுகளை மாற்றியமைப்பதன் மூலம், அவற்றுக்கு தீர்வு காண்பது, வழிநடத்தும் அமைப்புகளின் கடமையாகும். அனைத்துக்கும் மேலாக, இது, குழுக்கள், அல்லது கூட்டுப் பண்ணைகள், சொத்து மற்றும் பண்ட சுழற்சி போன்ற பொருளாதார காரணிகள் தொடர்பானது. இப்போது, சோசலிச பொருளாதாரத்தை முன்னகர்த்த நாம் இந்தக் கூறுகளை வெற்றிகரமாக பயன்படுத்தி வருகிறோம்; அவை நமது சமூகத்துக்கு மறுக்க முடியாத ஆதாயமாக இருக்கின்றன. உடனடி எதிர்காலத்திலும் அவை பயன் தருபவையாக இருக்கும் என்பதையும் மறுக்க முடியாது. ஆனால், அதே நேரம், இந்தக் கூறுகள், நமது உற்பத்தி சக்திகளின் சக்திவாய்ந்த வளர்ச்சியை ஏற்கனவே, தடுக்கத் துவங்கிவிட்டன என்பதை காணத் தவறுவதும் மன்னிக்க முடியாத பார்வையின்மையாகிவிடும். ஏனென்றால், ஒட்டுமொத்த தேசப் பொருளாதாரம், குறிப்பாக, விவசாயம் தொடர்பான அரசின் திட்டங்களை முழுமையாக விரிவுபடுத்துவதில் அவை தடைகளை உருவாக்குகின்றன. காலம் செல்லச் செல்ல, இந்தக் கூறுகள், நமது நாட்டின் உற்பத்தி சக்திகளின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் என்பதில் அய்யம் இல்லை. எனவே, கூட்டுப் பண்ணை சொத்தை, படிப்படியாக, அரசின் சொத்தாக மாற்றி,

பண்ட சுழற்சிக்குப் பதில், படிப்படியாக, உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனையை கொண்டு வந்து, இந்த முரண்பாடுகளைக் களைவது கடமையாகிறது.

3. மூன்றாவதாக, சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும், சமூக வளர்ச்சியின் செயலூக்கமிக்க முகவர்களாக மாறுவதற்குத் தேவையான கல்வியை பெறும் நிலையில் இருப்பதற்கான, தங்கள் தொழிலை/பணியை சுதந்திரமாக தாங்களே தேர்வு செய்யும் நிலையில் இருப்பதற்கான, வேலைப் பிரிவினை நிலவுவதால், வாழ்க்கை முழுவதும் ஒரே தொழிலில்/பணியில் கட்டுண்டு கிடக்காமல் இருப்பதற்கான, உடல் மற்றும் உளரீதியான அனைத்தும் தழுவிய வளர்ச்சி பெறுவதற்கான சமூகத்தின் கலாச்சார முன்னேற்றத்தை உறுதி செய்வது அவசியமாகும்.

இதற்கு என்ன தேவை?

உழைப்பின் தற்போதைய தகுதிநிலையில், நீடிக்கத்தக்க மாற்றங்கள் இல்லாமல், சமூகத்தின் உறுப்பினர்களின் கலாச்சார தரத்தில் அது போன்ற ஒரு நீடிக்கத்தக்க மாற்றத்தை உருவாக்க முடியும் என்று கருதுவது தவறாகிவிடும். இதற்கு முதலில், வேலை நாளை ஆறு மணி நேரமாக, அதன் பிறகு அய்ந்து மணி நேரமாகக் குறைப்பது அவசியம். சமூகத்தின் உறுப்பினர்கள், அனைத்தும் தழுவிய கல்வி பெறுவதற்குத் தேவையான நேரம் கிடைக்க இது அவசியமாகும். மேலும், வாழ்நாள் முழுக்க ஒரே தொழிலில்/பணியில் கட்டுண்டு கிடக்காமல், தொழிலை/பணியை சுதந்திரமாக தேர்ந்தெடுக்க ஏதுவாக சமூகத்தின் உறுப்பினர்களை மாற்ற, அனைத்தும் தழுவிய கட்டாய பல்தொழில்நுட்ப கல்வியை புகுத்துவது அவசியமாகும். அதேபோல, வீட்டு வசதி நிலைமைகள் தீவிரமாக மேம்படுத்தப்படுவதும், கூலியை, ஊதியத்தை நேரடியாக உயர்த்துவதன் மூலமும், நுகர்வுப் பொருட்களின் விலையை மேலும் திட்டமிட்ட விதத்தில் குறைப்பதன் மூலமும் தொழிலாளர்களின், ஊழியர்களின் உண்மை ஊதியம் குறைந்தபட்சம் இரண்டு மடங்காக்கப்படுவதும் அவசியம்.

இவையே, கம்யூனிசம் நோக்கி மாறிச் செல்லும் வழியை உருவாக்கத் தேவையான அடிப்படை நிபந்தனைகள் ஆகும்.

இந்த துவக்கக் கட்ட நிலைமைகள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டப் பின்னர் மட்டுமே, சமூக உறுப்பினர்கள் பார்வையில் உழைப்பு, "ஒரு தொல்லையாக இல்லாமல் வாழ்க்கையின் பிரதான தேவையாக" (மார்க்ஸ்) (15), "உழைப்பு சுமையாக இருப்பதற்குப் பதில் மகிழ்வானதாக" (எங்கல்ஸ்) (16) மாறும், சமூகத்தின் இருத்தலுக்கு சமூக சொத்து புனிதமானதாக, மீறுமுடியாததாக சமூக உறுப்பினர் அனைவராலும் கருதப்படும் என்று நம்ப முடியும்.

இந்த துவக்கக் கட்ட நிலைமைகள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டப் பின்னர் மட்டுமே, "ஒவ்வொருவரும் அவரது சக்திக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரது உழைப்புக்கேற்ப" என்ற சோசலிச சூத்திரத்தில் இருந்து, "ஒவ்வொருவரும் அவரது சக்திக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரது தேவைக்கேற்ப" என்ற கம்யூனிச சூத்திரத்துக்கு மாறிச் செல்வது சாத்தியமாகும்.

இது, சோசலிசப் பொருளாதாரம் என்ற ஒரு வடிவத்திலான பொருளாதாரத்தில் இருந்து, கம்யூனிசப் பொருளாதாரம் என்ற உயர்ந்த வடிவத்திலான பொருளாதாரத்துக்கு அடிப்படையில் மாறிச் செல்வதாகும்.

தோழர் யரோஷென்கோ கற்பனை செய்வதுபோல், சோசலிசத்தில் இருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வது எளிமையான ஒரு விசயமல்ல.

ஆழமான பொருளாதார மாற்றங்களை கோருகிற இந்த உள்ளிணைவான, பல்வடிவ இயக்கப்போக்கை, தோழர் யரோஷென்கோ சொல்வதுபோல், "உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வமான ஒழுங்கமைவு" என்று சுருக்கிச் சொல்ல முயற்சி செய்வது மார்க்சியத்தின் இடத்தில் போக்டனோவிசத்தை பொருத்துவதாகும்.

## 2. தோழர் யரோஷென்கோவின் பிற தவறுகள்

1. அரசியல் பொருளாதாரத்தின் இயல்பு பற்றி, பரப்பெல்லை பற்றி, தோழர் யரோஷென்கோ தனது தவறான கருத்தில் இருந்து தவறான முடிவுகளுக்கு வருகிறார்.

ஒவ்வொரு சமூகக் கட்டமைப்பும் அதன் தனிப்பட்ட பொருளாதார விதிகளைக் கொண்டுள்ளது என்பதன் அடிப்படையில், எல்லாவிதமான சமூக கட்டமைப்புகளுக்கும் ஒரே அரசியல் பொருளாதாரம் தேவை என்பதை தோழர் யரோஷென்கோ மறுக்கிறார். ஆனால், அவர் இந்த விசயத்தில் எங்கல்ஸ், லெனின் போன்ற மார்க்சிஸ்டுகளிடம் இருந்து மாறுபட்டு, முற்றிலுமாக தவறிழைக்கிறார்.

"பல்வேறு மனித சமூகங்களும் உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையில் ஈடுபட்டு, அதன் அடிப்படையில், தங்கள் உற்பத்திப் பொருட்களை விநியோகித்த நிலைமைகள் மற்றும் வடிவங்களின் விஞ்ஞானமே அரசியல் பொருளாதாரம்" என்று எங்கல்ஸ் சொல்கிறார். (17). எனவே அரசியல் பொருளாதாரம், ஏதோ ஒரு சமூக கட்டமைப்பின் பொருளாதார வளர்ச்சி விதிகளை ஆய்வு செய்வதல்ல; அது பல்வேறு சமூகக் கட்டமைப்புகளின் பொருளாதார வளர்ச்சி விதிகளை ஆய்வு செய்வதாகும்.

எங்கல்ஸ் சொல்வதில் லெனின் முழுமையான உடன்பாடு கொண்டிருந்தார். மாறிச் செல்லும் கட்டத்தின் பொருளாதாரம் என்ற புகாரினின் கட்டுரை பற்றிய தனது விமர்சன குறிப்புகளில், புகாரின், அரசியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லையை பண்ட உற்பத்தியுடன், அனைத்துக்கும் மேல் முதலாளித்துவ பண்ட உற்பத்தியுடன் சுருக்குவது தவறு என்று, அப்படிச் செய்வதன் மூலம் புகாரின், "எங்கல்சிடம் இருந்து ஓர் அடி பின்னே சென்றுவிடுகிறார்" (18) என்று லெனின் சொல்கிறார்.

"மானுட சமூக வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில், சமூக உற்பத்தி மற்றும் பொருண்மை மதிப்புகளின் விநியோகம் ஆகியவற்றின் விதிகளை ஆய்வு செய்வதே அரசியல் பொருளாதாரம்" என்று, அரசியல் பொருளாதாரத்தின் வரையறை பற்றி நகல் பாடப் புத்தகத்தில் சொல்லியிருப்பது, இதனுடன் முழுமையாகப் பொருந்துகிறது.

இது புரிந்துகொள்ளக் கூடியதே. பல்வேறு சமூகக் கட்டமைப்புகளும், அவற்றின் பொருளாதார வளர்ச்சியில், அவற்றின் சொந்த தனிப்பட்ட பொருளாதார விதிகளால் மட்டுமல்லாது, எல்லா விதமான சமூகக் கட்டமைப்புகளுக்கும் பொதுவான பொருளாதார விதிகளாலும் முறைப்படுத்தப்படுகின்றன; ஒரே உள்ளார்ந்த ஒன்றிணைந்த சமூக உற்பத்தியாக உற்பத்தி சக்திகளும் உற்பத்தி உறவுகளும் ஒன்றிணைந்திருக்கின்றன என்ற விதி, எல்லா விதமான சமூக கட்டமைப்புகளின் வளர்ச்சியின் இயக்கப்போக்கிலும் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான உறவை கட்டுப்படுத்தும் விதி ஆகியவை சில உதாரணங்கள். எனவே, எல்லா விதமான சமூக கட்டமைப்புகளுக்கும் தமது

சொந்த தனிப்பட்ட பொருளாதார விதிகளால் பிரிந்திருப்பது மட்டுமல்லாமல், பொதுவான பொருளாதார விதிகளால் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுள்ளன.

எங்கல்ஸ் சொல்வது சரியானதே:

முதலாளித்துவ பொருளாதாரம் பற்றிய இந்த விமர்சனக் குறிப்பை முழுமையாக எடுத்துச் சொல்ல, முதலாளித்துவ உற்பத்தி, பரிவர்த்தனை மற்றும் விநியோகம் ஆகியவற்றின் வடிவங்களுடனான பரிச்சயம் மட்டும் போதாது. வளர்ச்சி குறைந்த நாடுகளில், அதற்கு முந்தைய வடிவங்கள், அல்லது, அதன் அக்கம்பக்கமாக இன்னமும் நிலவுகிற வடிவங்கள், அவற்றின் பிரதான இயல்புகளையாவது பரிசீலனை செய்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். (19)

இந்த விசயத்தில் தோழர் யரோஷென்கோ, புகாரினுடன் இசைந்து போகிறார்.

மேலும், "மதிப்பு, பண்டம், பணம், கடன், இன்ன பிற போன்ற அரசியல் பொருளாதார வகையினங்களின் இடத்தில், உற்பத்தி சக்திகளை சமூக உற்பத்தியில் அறிவுபூர்வமாக ஒழுங்கமைப்பது பற்றிய ஆரோக்கியமான விவாதங்கள் இருக்கும்", விளைவாக, இந்த அரசியல் பொருளாதாரத்தின் ஆய்வுப் பொருள், சோசலிசத்தின் உற்பத்தி உறவுகளாக இருக்காது, மாறாக, "உற்பத்தி சக்திகளின் ஒழுங்கமைவு பற்றிய, பொருளாதார திட்டமிடல் பற்றிய, ஓர் அறிவியல் தத்துவத்தை விளக்குவதும் வளர்த்தெடுப்பதும்தான்", சோசலிசத்தில் உற்பத்தி உறவுகள் அவற்றின் சுதந்திரமான முக்கியத்துவத்தை இழந்து உற்பத்தி சக்திகளால், அவற்றின் ஒரு பகுதியாக உள்வாங்கப்பட்டுவிடுகின்றன என்று தோழர் யரோஷென்கோ தனது சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரத்தில் அறிவிக்கிறார்.

எந்த பிற்போக்கு மார்க்சிஸ்டும் இது வரை இப்படி ஒரு கேடான பிதற்றலை தனக்குத் தானே சேர்த்துக் கொண்டதில்லை என்று சொல்ல வேண்டும். பொருளாதார, உற்பத்தி பிரச்சனைகள் இல்லாத ஒரு சோசலிச அரசியல் பொருளாதாரத்தை கற்பனை செய்து பாருங்கள். அது போன்ற ஓர் அரசியல் பொருளாதாரம் எந்தப் படைப்பிலாவது இருக்க முடியுமா? சோசலிச அரசியல் பொருளாதாரத்தில், பொருளாதாரப் பிரச்சனைகளுக்குப் பதிலாக, உற்பத்தி சக்திகளை ஒழுங்கமைப்பது இடம் பெற்றால், என்ன விளைவு ஏற்படும்? சோசலிச அரசியல் பொருளாதாரத்தை ஒழித்துவிடுவதுதான் அதன் விளைவாக இருக்கும். இதைத்தான் தோழர் யரோஷென்கோ செய்கிறார் - அவர் சோசலிச அரசியல் பொருளாதாரத்தை ஒழித்துவிடுகிறார். இந்த விசயத்தில் அவரது நிலைப்பாடு புகாரினின் நிலைப்பாட்டுடன் முழுவதுமாக இசைந்து நகைப்பாகி விடுகிறது. முதலாளித்துவத்தை ஒழிக்கும்போது, அரசியல் பொருளாதாரமும் ஒழிக்கப்பட்டுவிடும் என்று புகாரின் சொல்கிறார். தோழர் யரோஷென்கோ இப்படிச் சொல்லவில்லை; ஆனால், அதைத்தான் செய்கிறார்; அவர் சோசலிச அரசியல் பொருளாதாரத்தை ஒழித்துவிடுகிறார். புகாரின் சொல்வதுடன் தனக்கு முழுமையான உடன்பாடு இல்லை என்று பாசாங்கு செய்கிறார்; ஆனால், அது ஒரு மலிவான தந்திரமே ஆகும். உண்மையில் அவர் புகாரின் போதித்ததை, லெனின் எதற்கு எதிராகப் பேசினாரோ, அதையே செய்கிறார். தோழர் யரோஷென்கோ புகாரினின் அடியொற்றிச் செல்கிறார்.

மேலும், தோழர் யரோஷென்கோ, சோசலிச அரசியல் பொருளாதாரப் பிரச்சனைகளை உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வ ஒழுங்கமைவு தொடர்பான, பொருளாதார திட்டமிடல் தொடர்பான பிரச்சனைகளாக சுருக்கிவிடுகிறார். ஆனால் அவர் மிகப்பெரிய தவறிழைக்கிறார். உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வ ஒழுங்கமைவு, பொருளாதார திட்டமிடல் ஆகியவை, அரசியல் பொருளாதாரப் பிரச்சனைகள் அல்ல; அவை வழிகாட்டும் தலைமை அமைப்புகளின் பொருளாதாரக் கொள்கை தொடர்பான பிரச்சனைகள் ஆகும்.

அவை இரண்டும் இரண்டு வெவ்வேறு அதிகாரத் தளங்கள்; அவற்றை குழப்பிக் கொள்ளக் கூடாது. தோழர் யரோஷென்கோ இந்த இரண்டு வெவ்வேறு விசயங்களை குழப்பி, அவற்றை பெருங்குழப்பமாக்கிவிடுகிறார். மனிதர்களிடையேயான உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி விதிகளை அரசியல் பொருளாதாரம் ஆய்வு செய்கிறது. இதில் இருந்து பொருளாதாரக் கொள்கை நடைமுறை முடிவுகள் எடுக்கிறது; அவற்றுக்கு ஸ்தூலமான வடிவம் தருகிறது; அதன் அடிப்படையில் அதன் அன்றாடப் பணிகளை கட்டமைக்கிறது. பொருளாதாரக் கொள்கை தொடர்பான பிரச்சனைகளை அரசியல் பொருளாதாரத்தின் மீது திணிப்பது, அதை ஓர் அறிவியல் என்ற விதத்தில் கொன்றுவிடுவதாகும்.

உற்பத்தி, பொருளாதாரம், மனிதர்களுக்கு இடையிலான உறவுகள்தான் அரசியல் பொருளாதாரத்தின் இயங்கெல்லை. இது, அ) உற்பத்திக் கருவிகளின் உடைமை வடிவங்கள், ஆ) அந்த வடிவங்களில் இருந்து உருவாகிய, உற்பத்தியில் பல்வேறு சமூகக் குழுக்களின் நிலைத்தகுதியும், அவர்களுக்கு இடையிலான உறவுகளும் அல்லது மார்க்ஸ் சொல்வதுபோல், "அவர்கள் தங்கள் செயல்பாடுகளை பரிவர்த்தனை செய்துகொள்வது", (20) இ) உற்பத்திப் பொருட்கள் விநியோகிக்கப்படும் வடிவங்கள் - இது முழுமையாக அவர்களால் தீர்மானிக்கப்படுகிறது - ஆகியவற்றை உள்ளடக்கியது. இவை அனைத்தும் சேர்ந்ததுதான் அரசியல் பொருளாதாரத்தின் இயங்கெல்லையாகும்.

இந்த வரையறையில் "பரிவர்த்தனை" என்ற சொல் இல்லை. எங்கல்ஸ் முன்வைக்கிற வரையறையில் இந்த சொல் உள்ளது. "பரிவர்த்தனை" என்ற சொல்லை எங்கல்ஸ் பயன்படுத்தும்போது பண்ட பரிவர்த்தனை பற்றி மட்டும் அவர் குறிப்பிடவில்லை என்றாலும், "பரிவர்த்தனை" என்ற சொல் பொதுவாக பண்ட பரிவர்த்தனை என்று புரிந்துகொள்ளப்படுகிறது; பண்ட பரிவர்த்தனை, எல்லாவிதமான சமூகக் கட்டமைப்புகளின் குறிப்பியல்பாக இல்லை; மாறாக, சில சமூகக் கட்டமைப்புகளின் குறிப்பியல்பாக இருக்கிறது; எனவே, இது தவறான புரிதலுக்கு இட்டுச் செல்கிறது என்பதால், அந்த வரையறையில் "பரிவர்த்தனை" என்ற சொல் தவிர்க்கப்பட்டுள்ளது. ஆயினும், மேலே சொல்லப்பட்டுள்ள வரையறையில், "பரிவர்த்தனை" என்ற சொல்லை, எங்கல்ஸ் சொல்லியருப்பதுபோல், ஓர் உட்கூறு என்ற பொருளில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதைக் காணவுள்ளோம். எனவே, அரசியல் பொருளாதாரத்தின் இயங்கெல்லை பற்றிய இந்த வரையறை எங்கல்ஸ் முன்வைக்கிற வரையறையுடன் முழுவதுமாக ஒத்திருக்கிறது.

2. ஒரு குறிப்பிட்ட சமூகக் கட்டமைப்பின் அடிப்படை பொருளாதார விதி பற்றி பேசும்போது, அந்த குறிப்பிட்ட சமூகக் கட்டமைப்பு, பல்வேறு அடிப்படை பொருளாதார விதிகளைக் கொண்டிருக்க முடியாது என்று அனுமானிக்கப்படுகிறது; அதனால்தான் அது அடிப்படை விதி. இல்லையென்றால், ஒவ்வொரு சமூகக் கட்டமைப்பும் பல்வேறு அடிப்படை பொருளாதார விதிகளைக் கொண்டிருக்கும்; இது அடிப்படை விதி என்று கருத்துக்கே முரணானதாக இருக்கும். ஆனால், தோழர் யரோஷென்கோவுக்கு, இந்தக் கருத்தில் உடன்பாடு இல்லை. சோசலிசத்துக்கு, ஒன்றல்ல, பல்வேறு அடிப்படை பொருளாதார விதிகள் இருப்பது சாத்தியம் என்று அவர் கருதுகிறார். இதை நம்ப முடியவில்லை; ஆனால், இதுதான் உண்மை. மாநாட்டு விவாதங்களில் அவர் இவ்வாறு சொல்கிறார்:

"சமூக உற்பத்தி மற்றும் மறுஉற்பத்தியில் விளைந்த பொருளாயத நிதிகளின், பரிமாணங்களும் தொடர்புறவுகளும், சமூக உற்பத்தியிலும் அதன் எதிர்கால பெருக்கத்திலும் அடங்கியுள்ள, இருக்கிற உழைப்புச் சக்தியால் தீர்மானிக்கப்படுகின்றன. சோசலிச சமூகத்தின் அடிப்படை பொருளாதார விதி இதுதான்; இதுதான், சோசலிச சமூக உற்பத்தியின், மறுஉற்பத்தியின் கட்டமைப்பை தீர்மானிக்கிறது".

இது சோசலிசத்தின் ஓர் அடிப்படை பொருளாதார விதி.

இதே உரையில் தோழர் யரோஷென்கோ அறிவிக்கிறார்:

"உழைக்கும் சக்தி கொண்ட மக்கள் அனைவரையும் சமூக உற்பத்தியில் ஈடுபடுத்தி உற்பத்தி நடத்த, போதுமான அளவு உற்பத்தி கருவிகள் கொண்டிருப்பதன் மூலம், சோசலிச சமூகத்தில் துறை 1, துறை 2 ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புறவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. இதுவே சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதி; அதே நேரம் இதையே நமது அரசியல் சாசனமும் கோருகிறது; இது, சோவியத் குடிமக்கள் கொண்டிருக்கிற வேலைவாய்ப்புக்கான உரிமையில் இருந்து உருவாகிறது".

இது சோசலிசத்தின் இரண்டாவது அடிப்படை பொருளாதார விதி என்று  சொல்லலாம்.

கடைசியாக, தோழர் யரோஷென்கோ, அரசியல் தலைமைக் குழுவுக்கு எழுதிய கடிதத்தில் அறிவிக்கிறார்:

"ஆக, சோசலிச அடிப்படை பொருளாதார விதியின் சாரமான இயல்புகளும் நிபந்தனைகளும் கிட்டத்தட்ட பின்வருமாறு வகுக்கப்படலாம் என்று எனக்குப் படுகிறது: சமூக வாழ்வின் பொருளாயத மற்றும் கலாச்சார நிபந்தனைகளின் உற்பத்தியை தொடர்ச்சியாக விரிவாக்குவது மற்றும் முழுநிறைவாக்குவது".

இங்கு, சோசலிச பொருளாதாரத்தின் மூன்றாவது அடிப்படை விதி நமக்குச் சொல்லப்படுகிறது.

இந்த அனைத்து விதிகளும் சோசலிச அடிப்படை பொருளாதார விதிகளா? அவற்றில் ஒன்றுதான் சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதியா? ஒன்று மட்டும்தான் என்றால், அது எது? அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்களுக்கு தோழர் யரோஷென்கோ கடைசியாக எழுதிய கடிதத்தில் இந்தக் கேள்விகளுக்கு பதில் ஏதும் சொல்லவில்லை. அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தில் சோசலிச அடிப்படை பொருளாதார விதியை வடிவமைத்துக் கொண்டிருந்தபோது, மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த மாநாட்டு விவாதங்களில் பேசும்போது, சோசலிச பொருளாதாரத்துக்கு இரண்டு அடிப்படை விதிகளை ஏற்கனவே வகுத்திருந்தார் என்பதை அவர் "மறந்துவிட்டார்" என்று அனுமானிக்க வேண்டியிருக்கிறது; இந்த நம்பகமற்ற சூழ்ச்சியை யாரும் கவனிக்கவில்லை என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது தெளிவாகத் தெரிகிறது. ஆனால், அவர் தப்புக்கணக்கு போட்டுவிட்டார் என்பதை நாம் இப்போது பார்க்கிறோம்.

சோசலிசத்தின் அடிப்படை  பொருளாதார விதிகளாக தோழர் யரோஷென்கோ வகுத்திருந்த முதல் இரண்டு விதிகள் காலாவதியாகிவிட்டன என்று கொண்டால், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தில் அவர் வகுத்திருந்த அந்த மூன்றாவது விதியை, இப்போது முதல், சோசலிசத்தின் அடிப்படை  பொருளாதார விதியாக அவர் கருதுவார். கடிதத்துக்கு வருவோம்.

சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதி பற்றி தோழர் ஸ்டாலின் தனது "குறிப்புகளில்" முன்வைத்துள்ள வரையறையை தோழர் யரோஷென்கோ ஒப்புக்கொள்ளவில்லை என்று அவர் தனது கடிதத்தில் சொல்கிறார்:

"ஒட்டுமொத்த சமூகத்தின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்வது என்பது இந்த வரையறையின் பிரதான அம்சமாகும். தேவைகளை பூர்த்தி செய்வது என்ற பிரதான

நோக்கத்தை எட்டுகிற வழியாகத்தான் உற்பத்தி இங்கு முன்வைக்கப்படுகிறது. சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதியாக நீங்கள் வகுத்துள்ள இது போன்ற ஒரு வரையறை, உற்பத்தியை முதன்மைப்படுத்தவில்லை, நுகர்வை முதன்மைப்படுத்துகிறது என்ற அனுமானத்துக்கு வர காரணங்களை அமைத்துக் கொடுக்கிறது".

பிரச்சனையின் சாரத்தை புரிந்துகொள்ள தோழர் யரோஷென்கோ முழுவதும் தவறிவிட்டார் என்று, நுகர்வை முதன்மைப்படுத்துவதா, உற்பத்தியை முதன்மைப்படுத்துவதா என்ற கேள்விக்கு இந்தப் பிரச்சனையில் சம்பந்தம் இல்லை என்பதையும் அவர் காணத் தவறுகிறார் என்று தெளிவாகத் தெரிகிறது. ஒரு சமூக இயக்கப்போக்குக்கு பதில் மற்றொரு சமூக இயக்கப்போக்கை முதன்மைப்படுத்துவது என்று பேசும்போது, அந்த இரண்டு இயக்கப்போக்குகளும் கிட்டத்தட்ட ஒரே இயல்பு கொண்டவை என்று வழக்கமாக அனுமானிக்கப்படுகிறது. நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியை விட உற்பத்தி கருவிகளின் உற்பத்தி முதன்மையானது என்று ஒருவர் சொல்லலாம்; ஏனென்றால், இரண்டிலும் உற்பத்தி நடக்கிறது; எனவே அவை இரண்டும் கிட்டத்தட்ட ஒரே இயல்பு கொண்டவை. ஆனால், உற்பத்தியும் நுகர்வும் முழுவதும் இரண்டு வெவ்வேறு தளங்கள் என்பதால், அவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டவை என்றாலும், இரண்டும் வெவ்வேறு தளங்கள் என்பதால், நுகர்வை விட உற்பத்தியை முதன்மைப்படுத்துவது, அல்லது உற்பத்தியை விட நுகர்வை முதன்மைப்படுத்துவது என்று ஒருவர் பேச முடியாது; அப்படி பேசுவது தவறாகும். நுகர்வை முதன்மைப்படுத்துவதா, உற்பத்தியை முதன்மைப்படுத்துவதா என்பது பற்றி நாம் இங்கு பேசவில்லை, சோசலிசத்தில் சமூகம், சமூக உற்பத்தி என்ன இலக்கை நிர்ணயிக்கிறது, என்ன நோக்கத்துக்கு சமூக உற்பத்தியை கீழ்ப்படுத்துகிறது என்பது பற்றி பேசுகிறோம் என்பதை புரிந்துகொள்ள தோழர் யரோஷென்கோ தவறுகிறார். எனவே, "சோசலிச சமூக வாழ்வின் அடிப்படை, மற்றெல்லா சமூகங்களின் வாழ்வின் அடிப்படை போலவே, உற்பத்தியேயாகும்ஷ என்று தோழர் யரோஷென்கோ சொல்லும்போது, அது (விவாதிக்கப்படும் பொருளோடு - மொ.ர்) தொடர்பில்லாமல் இருக்கிறது. மனிதர்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்காக உற்பத்தி செய்வதில்லை, மாறாக, தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக உற்பத்தி செய்கிறார்கள் என்பதை தோழர் யரோஷென்கோ மறந்துவிடுகிறார். சமூகத் தேவைகளை பூர்த்தி செய்வதில் இருந்து விலகி நிற்கும் உற்பத்தி, உலர்ந்து மடிந்து போய்விடும் என்பதை அவர் மறந்துவிடுகிறார்.

சோசலிச அல்லது முதலாளித்துவ உற்பத்தியின் இலக்கு, முதலாளித்துவ அல்லது சோசலிச உற்பத்தி என்ன நோக்கத்துக்காக கீழ்ப்படுத்தப்படுகிறது என்று பொதுவாக நாம் பேச முடியுமா? பேச முடியும், பேச வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

மார்க்ஸ் சொல்கிறார்:

"முதலாளித்துவ உற்பத்தியின் நேரடி நோக்கம் பண்ட உற்பத்தி அல்ல, மாறாக, உபரி மதிப்பு உற்பத்தி, அல்லது, அதன் மேம்படுத்தப்பட்ட வடிவத்திலான லாபம்; பண்டம் அல்ல, மாறாக, உபரி பண்டம். இந்த நோக்குநிலையில் இருந்து, மூலதனத்துக்கு லாபம் அல்லது உபரி பண்டத்தை உருவாக்காவிட்டால் உழைப்பு உற்பத்தித் திறன் கொண்டதல்ல. தொழிலாளி அதை உருவாக்காவிட்டால், அவரது உழைப்பு உற்பத்தித் திறன் கொண்டதல்ல. விளைவாக, உழைப்பின் மூலமாகவோ, அல்லது, அதனுடன் தொடர்புடையதாகவோ, ஒட்டுமொத்த உபரி உழைப்பு அதிகரிக்கும் வரைதான், செலுத்தப்பட்ட உற்பத்தித் திறன் மிக்க ஒட்டுமொத்த உழைப்பு பற்றி மூலதனம் ஆர்வம் காட்டும். அந்த அளவுக்கு மட்டும்தான் அவசியமான உழைப்பு நேரம் என்பது அவசியம். இந்த விளைவை அது உருவாக்கவில்லை என்றால், அந்த அளவு, மிதமிஞ்சியது; அதை தொடரக் கூடாது.

முதலாளித்துவ உற்பத்தியின் நிலையான நோக்கம், குறைந்தபட்ச மூலதனத்தைக் கொண்டு, அதிகபட்ச உபரி மதிப்பை அல்லது உபரி பண்டத்தை உற்பத்தி செய்வதே. தொழிலாளியிடம் அதிகப்படியாக வேலை வாங்கியும் இந்த விளைவை எட்ட முடியவில்லை என்றால், ஆகக் குறைந்த செலவில் - உழைப்புச் சக்தியையும் செலவுகளையும் சிக்கனப்படுத்தி -, அந்த குறிப்பிட்ட பண்டத்தை, உற்பத்தி செய்ய முனைவது மூலதனத்தின் இயல்புப் போக்காகும்.

இந்த கருத்துருவில், முதலாளித்துவ உற்பத்தியில், தொழிலாளர்களே, அவர்கள் நிஜத்தில் என்னவோ, அப்படியேதான் இருக்கிறார்கள் - வெறும் உற்பத்திச் சாதனங்களாக. அவர்களே இலக்காகவோ, உற்பத்தியின் இலக்காகவோ அவர்கள் இருப்பதில்லை". (21)

முதலாளித்துவ உற்பத்தியின் இலக்கை மிகச் சரியாக வரையறுப்பதோடு, சோசலிச உற்பத்தியின் அடிப்படை இலக்கை, பிரதான நோக்கத்தை அடையாளப்படுத்திக் காட்டுவதால், மார்க்ஸ் சொல்லும் இந்தக் கருத்துகள், குறிப்பிடத்தக்கவை.

எனவே, முதலாளித்துவ உற்பத்தியின் நோக்கம் லாபம் உருவாக்குவது. நுகர்வைப் பொறுத்தவரை, லாபத்தை உறுதி செய்யும் வரைதான், முதலாளித்துவத்துக்கு அது தேவை. இதற்கப்பால், முதலாளித்துவத்தில் நுகர்வுக்குப் பொருளே கிடையாது. அதன் பார்வைப் பரப்பில் இருந்து மனிதரும் அவரது தேவைகளும் மறைந்துவிடுகின்றன.

சோசலிச உற்பத்தியின் இலக்கு என்ன? சோசலிசத்தில் எந்த பிரதான நோக்கத்துக்கு சமூக உற்பத்தி கீழ்ப்படுத்தப்பட வேண்டும்?

சோசலிச உற்பத்தியின் இலக்கு லாபம் அல்ல. அதன் இலக்கு மனிதரும் அவரது தேவைகளும்தான்; அதாவது மனிதரது பொருளாயத மற்றும் கலாச்சார தேவைகள்தான். தோழர் ஸ்டாலினின் "குறிப்புகளில்" சொல்லப்பட்டுள்ளபடி, "ஒட்டுமொத்த சமூகத்தின், தொடர்ந்து அதிகரித்துவரும், பொருளாயத மற்றும் கலாச்சாரத் தேவைகள் அதிகபட்சமாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதுதான்" சோசலிச உற்பத்தியின் இலக்கு. (22)

இங்கு, உற்பத்தியை விட நுகர்வை "முதன்மைப்படுத்துவது" என்பதை எதிர்கொள்வதாக என்று தோழர் யரோஷென்கோ கருதுகிறார். இது ஒரு தவறான அச்சம். உண்மையில் இங்கு நாம் எதிர்கொள்வது நுகர்வை முதன்மைப்படுத்தும் பிரச்சனை அல்ல; மாறாக, ஒட்டுமொத்த சமூகத்தின், தொடர்ந்து அதிகரித்துவரும், பொருளாயத மற்றும் கலாச்சாரத் தேவைகள் அதிகபட்சமாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் பிரதான நோக்கத்துக்கு சோசலிச உற்பத்தியை கீழ்ப்படுத்துவது என்ற பிரச்சனையைத்தான் நாம் எதிர்கொள்கிறோம்.

விளைவாக, ஒட்டுமொத்த சமூகத்தின், தொடர்ந்து அதிகரித்துவரும், பொருளாயத மற்றும் கலாச்சாரத் தேவைகள் அதிகபட்சமாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதுதான் சோசலிச உற்பத்தியின் இலக்கு; மேலும் மேலும் உயர்ந்த தொழில்நுட்பங்களின் அடிப்படையில் சோசலிச உற்பத்தியை தொடர்ந்து விரிவுபடுத்துவதும் முழுநிறைவடையச் செய்வதும்தான், இந்த இலக்கைச் சென்றடையும் வழி.

இதுதான், சோசலிச பொருளாதாரத்தின் அடிப்படை விதி.

உற்பத்தியை விட நுகர்வை "முதன்மைப்படுத்துவது" என்று அவர் சொல்வதை தக்கவைத்துக் கொள்ள, "சமூகத்தின் பொருளாயத, கலாச்சார நிலைமைகளின் உற்பத்தியை தொடர்ச்சியாக விரிவாக்குவது, முழுநிறைவடையச் செய்வதில்", "சோசலிச

பொருளாதாரத்தின் அடிப்படை விதி" அடங்கியுள்ளது என்று தோழர் யரோஷென்கோ சொல்கிறார். இது முற்றிலும் தவறு. தோழர் ஸ்டாலினின் "குறிப்புகளில்" வகுக்கப்பட்டுள்ள கொள்கையை, தோழர் யரோஷென்கோ முழுவதுமாக திரித்துச் சொல்கிறார்; அதன் திறத்தை குறைக்கிறார். அவரைப் பொறுத்தவரை, உற்பத்தி ஒரு வழியாக இல்லாமல், ஓர் இலக்காக மாறிவிடுகிறது; சமூகத்தின், தொடர்ந்து அதிகரித்துவரும், பொருளாயத மற்றும் கலாச்சாரத் தேவைகள் அதிகபட்சமாக நிறைவேற்றப்படுவது, கைவிடப்படுகிறது. உற்பத்தியின் விரிவாக்கம், உற்பத்தியின் விரிவாக்கத்துக்காகவே நடக்கிறது; உற்பத்தியே இலக்காகிவிடுகிறது; மனிதரும் அவரது தேவைகளும் தோழர் யரோஷென்கோவின் பார்வைப் பரப்பில் இருந்து மறைந்துவிடுகின்றன.

எனவே, சோசலிச உற்பத்தியின் இலக்காக மனிதர் இல்லாதபோது, தோழர் யரோஷென்கோவின் "கருத்துருவில்" இருந்து மார்க்சியத்தில் எஞ்சியிருப்பது அனைத்தும் மறைந்துவிடுவதில் வியப்பேதும் இல்லை.

எனவே, தோழர் யரோஷென்கோ, நுகர்வை விட உற்பத்தியை "முதன்மைப்படுத்துவது" நோக்கி அல்லாமல், மார்க்சிய கருத்தியலை விட முதலாளித்துவ கருத்தியலை "முதன்மைப்படுத்துவது" போன்ற ஒன்றில்தான் போய்ச் சேர்கிறார்.

3. மறுஉற்பத்தி பற்றிய மார்க்சின் தத்துவமே கேள்வியாகிறது

மறுஉற்பத்தி பற்றிய மார்க்சிய தத்துவம் முதலாளித்துவ மறுஉற்பத்தி தத்துவமே என்றும், அதில் மற்ற சமூகக் கட்டமைப்புகளுக்கு, குறிப்பாக, சோசலிச சமூகக் கட்டமைப்புக்கு, பொருந்துவதாக எதுவும் இல்லை என்றும் தோழர் யரோஷென்கோ சொல்கிறார்:

"முதலாளித்துவ பொருளாதாரம் பற்றி மார்க்ஸ் விரிவாகச் சொன்ன, மறுஉற்பத்தி பற்றிய மார்க்சின் திட்ட வரையறையை, சோசலிச சமூகக் கட்டமைப்புக்கு நீட்டிப்பது, மார்க்சின் தத்துவத்தை வறட்டுத்தனமாக புரிந்துகொள்வதன் விளைவாகும்; இது அவரது தத்துவத்துக்கு எதிரானதாகும்". (23)

அவர் மேலும் சொல்கிறார்:

"மறுஉற்பத்தி பற்றிய மார்க்சின் திட்ட வரையறை, சோசலிச சமூகப் பொருளாதார விதிகளுடன் பொருந்திப் போகவில்லை; அது சோசலிச மறுஉற்பத்தி பற்றிய ஆய்வுக்கு அடிப்படையாக இருக்க முடியாது". (24)

உற்பத்தி கருவிகளின் உற்பத்தி (துறை 1), நுகர்வு சாதனங்களின் உற்பத்தி (துறை 2) ஆகியவற்றுக்கிடையே ஒரு நிச்சயமான இணைப்பை நிறுவும் சாதாரண மறுஉற்பத்தி பற்றிய மார்க்சின் தத்துவம் பற்றி தோழர் யரோஷென்கோ சொல்கிறார்:

"சோசலிச சமூகத்தில் துறை 1க்கும் துறை 2க்கும் இடையிலான உறவு, துறை 1ன் வி+எம் (மாறுகின்ற மூலதனம் + உபரி மதிப்பு) மற்றும் துறை 2ன் சி (நிலையான மூலதனம்) தொடர்பான மார்க்சின் சூத்திரத்தால் நிர்ணயிக்கப்படவில்லை. (25) சோசலிச நிலைமைகளில், துறை 1 மற்றும் துறை 2க்கு இடையில் அதுபோன்ற ஒரு இணைப்பு இருக்கக் கூடாது". (26)

அவர் மேலும் சொல்கிறார்:

"மார்க்சின் தத்துவம் முதலாளித்துவ பொருளாதாரம் மற்றும் அதன் விதிகள் பற்றியது என்பதால், துறை 1 மற்றும் துறை 2க்கு இடையிலான உறவு பற்றி மார்க்ஸ் வகுத்துச் சொன்னது, நமது சோசலிச நிலைமைகளுக்குப் பொருந்தாது". (27)

மறுஉற்பத்தி பற்றிய மார்க்சின் தத்துவத்தை தோழர் யரோஷென்கோ இப்படித்தான் கொத்திக் குதறுகிறார்.

முதலாளித்துவ உற்பத்தி முறை விதிகள் தொடர்பான ஆய்வின் விளைவுதான் மறுஉற்பத்தி பற்றிய மார்க்ஸ் தத்துவம் என்பதும், அது முதலாளித்துவ உற்பத்தி முறையின் குறிப்பான இயல்பை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதும், முதலாளித்துவ பண்ட மதிப்பு உறவுகளின் வடிவத்தில் உள்ளது என்பதும் உண்மைதான். இது வேறுவிதமாக இருக்க முடியாது. ஆனால், மார்க்சின் மறுஉற்பத்தி தத்துவம் முதலாளித்துவ சமூகக் கட்டமைப்புக்கு மட்டும் பொருந்துவது அல்ல; அதை அதன் வடிவத்தில் மட்டும் பார்த்து, அதன் அடிப்படைகளை, அதன் சாரமான பொருளை, காணத் தவறுபவர்களுக்கு, இந்தத் தத்துவம் பற்றி எந்தப் புரிதலும் இருக்காது. இந்த விசயத்தில் தோழர் யரோஷென்கோவுக்கு ஏதாவது புரிதல் இருக்குமானால், மறுஉற்பத்தி பற்றிய மார்க்சின் திட்ட வரையறை, முதலாளித்துவ உற்பத்தி முறையின் குறிப்பான இயல்புகளை பிரதிபலிப்பதில் துவங்கி, அதிலேயே முடிந்து விடுவதில்லை என்பதும், அதேநேரம், எல்லாவிதமான சமூகக் கட்டமைப்புகளுக்கும் பொருந்துகிற, குறிப்பாக, மிகவும் குறிப்பாக, சோசலிச சமூகக் கட்டமைப்புக்கு பொருந்துகிற, மறுஉற்பத்தி தொடர்பான அனைத்துவிதமான அடிப்படை கோட்பாடுகளை கொண்டுள்ளதும், தெளிவாகத் தெரிவதை, அவர் புரிந்து கொண்டிருப்பார். மறுஉற்பத்தி பற்றிய மார்க்சின் தத்துவத்தின் அதுபோன்ற அடிப்படை கோட்பாடுகளான, உற்பத்தி கருவிகளின் உற்பத்தி மற்றும் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி என்பதாக சமூக உற்பத்தி பிரிந்துள்ளது; மறுஉற்பத்தியில் உற்பத்தி கருவிகளின் உற்பத்தி நீட்டிக்கப்பட்ட அளவில் ஒப்பீட்டுரீதியில் பெரிய அளவில் அதிகரிப்பது; துறை 1 மற்றும் துறை 2க்கும் இடையிலான உறவு; உபரி பண்டம் மட்டுமே மூலதனக் குவிப்புக்கான ஒரே ஆதாரம்; சமூக நிதிகளை உருவாக்குவது, அவற்றை ஒதுக்குவது; நீட்டிக்கப்பட்ட அளவில் நடக்கும் மறுஉற்பத்திக்கு மூலதனக் குவிப்பு மட்டுமே ஒரே ஆதாரம் - மறுஉற்பத்தி பற்றிய மார்க்சிய தத்துவத்தின் அடிப்படை கோட்பாடுகளான இவை அனைத்தும், ஒரே நேரத்தில், முதலாளித்துவ கட்டமைப்புக்கு மட்டும் பொருந்துகிற கோட்பாடுகள் அல்ல, அவை இல்லாமல் சோசலிச சமூகத்தின் திட்டமிடலும் தேசப் பொருளாதாரமும் இருக்க முடியாது. மறுஉற்பத்திக்கான மார்க்சின் "திட்டவரையறைகள்ஷெ தொடர்பாக அகந்தையுடன் சத்தமிடும் தோழர் யரோஷென்கோவே, சோசலிச மறுஉற்பத்தி தொடர்பான பிரச்சனைகள் மீதான விவாதத்தில், இந்த "திட்டவரையறைகளைத்தான்ஷெ அடிக்கடி உதவிக்கு அழைத்துக் கொள்கிறார் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது.

லெனினும் மார்க்சும் இந்த விசயத்தை எப்படி அணுகினார்கள்?

புகாரினின் மாறிச் செல்லும் கட்டத்தின் பொருளாதாரம் பற்றிய லெனினின் விமர்சனக் குறிப்புகள் பற்றி அனைவருக்கும் தெரியும். இந்தக் குறிப்புகளில், துறை 1க்கும் 2க்கும் இடையிலான உறவு பற்றிய மார்க்சின் சூத்திரத்தை, சோசலிசத்துக்கும், "தூய கம்யூனிசத்துக்கும்", அதாவது கம்யூனிசத்தின் இரண்டாவது கட்டத்துக்கும் அது பொருந்தும் என்பதை லெனின் அங்கீகரிக்கிறார் என்பது நமக்குத் தெரியும்; தோழர் யரோஷென்கோ இதற்கெதிராகத்தான் கருத்து தெரிவிக்கிறார்.

முதலாளித்துவ உற்பத்தி விதிகளை கண்டறிவதில் இருந்து விலகிச் செல்வதை மார்க்ஸ் விரும்பவில்லை என்பதை, மறு உற்பத்தி தொடர்பான தனது திட்ட வரையறையை, தனது

மூலதனம் நூலில் அவர் சோசலிசத்துக்கு பொருத்தவில்லை என்பதை, நாம் அறிவோம். ஆயினும் மூலதனம், இரண்டாவது தொகுதியின் இருபதாவது அத்தியாயத்தில், துறை 1ன் உற்பத்திப் பொருட்களை அந்தத் துறைக்குள்ளேயே பரிவர்த்தனை செய்வது பற்றி பகுப்பாய்வு செய்கிற, "துறை 1ன் நிலையான மூலதனம்" என்ற பிரிவில், போகிற போக்கில், சோசலிசத்தில் இந்தத் துறைக்குள் பொருட்களின் பரிவர்த்தனை, முதலாளித்துவ உற்பத்தி முறையில் இருக்கும் அதே முறைப்பாட்டுடன் முன்நகரும் என்று மார்க்ஸ் சொல்கிறார். அவர் சொல்கிறார்:

"பொருளுற்பத்தி முதலாளித்துவ முறையில் அல்லாமல், சோசலிச முறைக்கு மாற்றப்பட்டாலும் கூட, மறுஉற்பத்தியின் பொருட்டு, துறை 1ன் இந்த உற்பத்தி பொருட்கள், உற்பத்திச் சாதனங்களாக, இத்துறையின் பல்வேறு கிளைகளுக்கும் முறைப்படி மறுவிநியோகம் செய்யப்படும். ஒரு பகுதி, அது உற்பத்திப் பொருளாய் வெளிவந்த, அதே தொழில் கிளையிலேயே இருக்க, மற்றொரு பகுதி, பிற கிளைகளுக்குப் பெயர்ந்து செல்லும். இவ்விதம், இந்தத் துறையின் பற்பல தொழிற்கிளைகளுக்கு இடையே உற்பத்திப் பொருட்கள் போவதும் வருவதுமான ஓயாத ஓட்டம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும்". (28)

ஆக, முதலாளித்துவ உற்பத்தி முறையின் விதிகள் பற்றிதான் மார்க்ஸ் ஆய்வு செய்தார் என்றாலும், மறுஉற்பத்தி பற்றிய தனது தத்துவம் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு மட்டுமே பொருந்தும் என்று மார்க்ஸ் சொல்லவில்லை. மாறாக, மறுஉற்பத்தி பற்றிய அவரது தத்துவம், சோசலிச உற்பத்தி முறைக்கும் பொருந்தும் என்று சொன்னதையே நாம் காண்கிறோம்.

கோதா திட்டம் மீதான விமர்சனத்தில், சோசலிசப் பொருளாதாரம் பற்றியும், கம்யூனிசம் நோக்கி மாறிச் செல்லும் கட்டம் பற்றியும் பகுப்பாய்வு செய்யும்போது, கம்யூனிச கட்டமைப்புக்கு அவசியமானவை என்று கருதி, மறுஉற்பத்தி பற்றிய தனது தத்துவத்தின் அடிப்படை கோட்பாடுகளில் இருந்து மார்க்ஸ் துவங்குகிறார் என்பதை குறிப்பிட வேண்டும்.

டூரிங்குக்கு மறுப்பு நூலில், எங்கல்ஸ், டூரிங்கின் "சோசலிசவாத கட்டமைப்பு" பற்றி விமர்சனம் செய்யும்போதும், சோசலிச கட்டமைப்பின் பொருளாதாரம் பற்றி விவாதிக்கும்போதும், அவர், கம்யூனிச கட்டமைப்புக்கு அவசியமானவை என்று கருதி, மறுஉற்பத்தி பற்றிய மார்க்சின் தத்துவத்தின் அடிப்படை கோட்பாடுகளில் இருந்து துவங்குகிறார் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

இப்படித்தான் உண்மைகள் இருக்கின்றன.

இங்கும், மறுஉற்பத்தி பற்றிய பிரச்சனையில், தோழர் யரோஷென்கோ, மார்க்சின் "திட்ட வரையறைகள்" பற்றிய அவரது ஏளனமான அணுகுமுறை இருந்தபோதும், மீண்டும் குட்டையில் விழுந்துவிட்டார் என்று தெரிகிறது.

4. "சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரம்" தலைப்பை தொகுக்கும் பணியை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற முன்வைப்புடன் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்களுக்கு தோழர் யரோஷென்கோ எழுதிய தனது கடிதத்தை முடிக்கிறார். அவர் எழுதியுள்ளார்: "சோசலிச அரசியல் பொருளாதார விஞ்ஞானத்தின் இயங்கெல்லையின் வரையறை பற்றி மாநாட்டிலும் செயல்பாட்டுக் குழுவிலும், இந்தக் கடிதத்திலும் நான் சொல்லியிருப்பதன் அடிப்படையில், மார்க்சிய இயங்கியல் முறையை பயன்படுத்தி, இரண்டு உதவியாளர்கள் உதவியுடன், ஓராண்டில், அல்லது அதிகபட்சம் ஒன்றரை ஆண்டு காலத்தில், சோசலிச அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகளுக்கு தத்துவார்த்தத் தீர்வுகளை, அதாவது, சோசலிச அரசியல் பொருளாதாரத்தின் மார்க்சிய

லெனினிய ஸ்டாலினிய தத்துவத்தை, கம்யூனிசத்துக்கான மக்கள் போராட்டத்துக்கு ஒரு திறன்மிக்க ஆயுதமாக இந்த அறிவியலை மாற்றக் கூடிய ஒரு தத்துவத்தை, முன்வைத்துவிட முடியும்".

நமது சில எழுத்தாளர்களின் பாணியில் சொல்வதென்றால், "வேறு விதத்தில் சொன்னாலும்", தன்னடக்கம் விசயம் மட்டும் தோழர் யரோஷென்கோவின் தோல்வியல்ல என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், தோழர் யரோஷென்கோ சோசலிச அரசியல் பொருளாதாரத்தை, வழிநடத்தும் அமைப்புகளின் பொருளாதாரக் கொள்கைகளுடன் குழப்புகிறார். சோசலிச அரசியல் பொருளாதாரத்தின் இயங்கெல்லை - உற்பத்தி சக்திகளின் அறிவுபூர்வ ஒழுங்கமைவு, பொருளாதாரத் திட்டமிடல், சமூக நிதிகளை உருவாக்குதல், இன்ன பிற, -என அவர் கருதுவது, வழிநடத்தும் அமைப்புகளின் பொருளாதாரக் கொள்கையின் இயங்கெல்லை; அது சோசலிச அரசியல் பொருளாதாரத்தின் இயங்கெல்லை அல்ல.

தோழர் யரோஷென்கோவிடம் கடுமையான பிழைகளும் மார்க்சியமற்ற "கருத்தும்ஷை இருக்கும்போது, அப்படி ஒரு பொறுப்பை அவரிடம் ஒப்படைக்க யாரும் முன்வரமாட்டார்கள் என்ற யதார்த்தம் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை.

முடிவுகள்

1) விவாதங்களை நெறிப்படுத்துபவர்கள் பற்றி தோழர் யரோஷென்கோ எழுப்பியுள்ள புகார் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல; ஏனென்றால், அவர்கள் மார்க்சிஸ்டுகள் என்பதால், ஆவணங்களை தொகுக்கும்போது தோழர் யரோஷென்கோவின் மார்க்சியமற்ற "கருத்தை", அவர்களால் பிரதிபலிக்க முடியவில்லை.

2) சோசலிச அரசியல் பொருளாதாரம் பற்றி எழுத அனுமதிக்கப்பட வேண்டும் என்ற தோழர் யரோஷென்கோ வேண்டுகோளை பெரிதாக எடுத்துக் கொள்ள முடியாது; ஏனென்றால் அதில் கிளெஸ்டகோவிசத்தின் வாடை வீசுகிறது. (29)

ஜே.ஸ்டாலின்

மே 22, 1952

# தோழர்கள் ஏ.வி.சனினா, வி.ஜி.வென்சர் ஆகியோருக்கு பதில்

உங்கள் கடிதங்கள் கிடைத்தன. நமது நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகள் பற்றி நீங்கள் ஆழமாக, தீவிரமாக, ஆய்வு செய்திருப்பதை அந்தக் கடிதங்களில் இருந்து அறிய முடிகிறது. அந்தக் கடிதங்களில் பல சரியான கருத்துருக்கள், சுவாரசியமான வாதங்கள் உள்ளன. ஆனால் இவை தவிர, சில தீவிரமான தத்துவார்த்தப் பிழைகள் உள்ளன. இந்தப் பிழைகள் பற்றித்தான் நான் இந்த பதிலில் எழுத முனைகிறேன்.

## 1. சோசலிச பொருளாதார விதிகளின் இயல்பு

'பொருளுற்பத்தியில் ஈடுபடுகிற சோவியத் குடிமக்களின் உணர்வுபூர்வமான நடவடிக்கைகளால்தான் சோசலிச பொருளாதார விதிகள் உருவாகின்றன' என்று தோழர்கள் சனினாவும் வென்சரும் சொல்கின்றனர். இந்தக் கருத்து முற்றிலும் தவறானது.

மனிதரின் விருப்பம், உணர்வு ஆகியவற்றுக்கு அப்பால், சுதந்திரமாக, நமக்கு வெளியில் பொருளாதார வளர்ச்சியின் விதிகள் புறநிலையாக உள்ளனவா? இந்தக் கேள்விக்கு மார்க்சியம் ஆம் என்று பதிலளிக்கிறது. மனிதரின் மனதில், நமக்கு வெளியே இருக்கும் புறநிலை விதிகளின் பிரதிபலிப்பே, சோசலிசத்தின் அரசியல் பொருளாதார விதிகள் என்று மார்க்சியம் கருதுகிறது. ஆனால் தோழர்கள் சனினாவும் வெஞ்சரும் முன்வைக்கிற கருத்துரு இந்தக் கேள்விக்கு எதிர்மறையாக பதிலளிக்கிறது. சோசலிசத்தில் பொருளாதார வளர்ச்சியின் விதிகள் சமூகத்தின் வழிநடத்தும் அமைப்புகளால் 'உருவாக்கப்படுகின்றன' 'மாற்றியமைக்கப்படுகின்றன' என்ற தவறான தத்துவத்தை தோழர்கள் முன்வைக்கிறார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர்கள் மார்க்சியத்தில் இருந்து வெளியேறி, அகநிலை இலட்சியவாதத்தின் நிலைப்பாட்டை எடுக்கிறார்கள்.

நிச்சயமாக, மனிதர் இந்த புறநிலை விதிகளைக் கண்டுபிடித்து, அவற்றைத் தெரிந்து கொள்ளலாம்; அவற்றைச் சார்ந்து, சமூகத்தின் நலன்களுக்காக அவற்றைப் பயன்படுத்தலாம். ஆனால் அவர்களால் அவற்றை 'உருவாக்க' முடியாது, 'மாற்றியமைக்கவும்' முடியாது. சோசலிசத்தில் பொருளாதாரச் செயல்பாட்டின் புறநிலை விதிகள் இருப்பதை மறுக்கும், பொருளாதார விதிகளை 'உருவாக்கும்', 'மாற்றியமைக்கும்' சாத்தியத்தை முன்வைக்கும் இந்தத் தவறான கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதாக வைத்துக் கொள்வோம். அது நம்மை எங்கே அழைத்துச் செல்லும்? இது நம்மை பெருங்குழப்பத்துக்கும் நிச்சயமின்மைக்கும் இட்டுச் செல்லும்; நாம் வேறு வழியின்றி நிச்சயமின்மையை சார்ந்திருக்க நேரும்; நிச்சயமின்மையின் இந்த பெருங்குழப்பத்தில் நமது வழிகளை புரிந்து கொள்ளும், கண்டறியும் சாத்தியக்கூறுகளை நாம் இழக்க நேரும்.

இதன் விளைவு என்னவென்றால், அரசியல் பொருளாதாரம் ஓர் அறிவியல் என்பதை நாம் அழிக்க நேரும்; ஏனென்றால், புறநிலை விதிகளின் இருப்பை அங்கீகரிக்காவிட்டால், அங்கீகரித்து ஆராயாவிட்டால், விஞ்ஞானம் இருக்க முடியாது; வளர முடியாது. அறிவியலை அழிப்பதன் மூலம், நாட்டின் பொருளாதார வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை முன்கூட்டியே அறியும் சாத்தியப்பாட்டை, வேறுவிதமாகக் கூறினால், மிகவும் துவக்கநிலை பொருளாதாரத் தலைமையைக்கூட வழங்கும் சாத்தியப்பாட்டை நாம் இழக்க நேரிடும்.

இறுதியில், பொருளாதார வளர்ச்சியின் விதிகளை 'அழிக்க', புறநிலைச் விதிகள் பற்றிய புரிதல் இல்லாமல், அல்லது அவற்றை கணக்கில் கொள்ளாமல் புதிய விதிகளை 'உருவாக்க' தயாராக இருக்கும் 'பொருளாதார' சாகசக்காரர்களின் தயவில் நாம் இருக்க நேரிடும்.

இந்தப் பிரச்சனையில் மார்க்சிய நிலைப்பாடு பற்றி டூரிங்கிற்கு மறுப்பு நூலில் எங்கெல்ஸ் சொல்லியிருப்பதை அனைவரும் நன்கு அறிவோம்:

'செயல்பாட்டில் உள்ள சமூக சக்திகள், நாம் அவற்றைப் புரிந்து கொள்ளாத வரை, அவற்றை கணக்கில் கொள்ளாத வரை, இயற்கை சக்திகள் போலவே, கண்மூடித்தனமாக, வலுக்கட்டாயமாக, அழிவுகரமாக செயல்படுகின்றன. ஆனால் நாம் அவற்றைப் புரிந்துகொண்டவுடன், அவற்றின் செயல்பாட்டை, அவற்றின் திசைவழியை, அவற்றின் விளைவுகளை புரிந்து கொண்டவுடன், அவற்றை மேலும் மேலும் நம் விருப்பத்திற்கு கட்டுப்படுத்துவதும், அவற்றின் மூலம் நம் சொந்த நோக்கங்களை அடைவதும் நம் கையில்தான் உள்ளது. இன்றைய சர்வ வல்லமை கொண்ட உற்பத்தி சக்திகளைப் பொறுத்தவரை இதுவே பொருத்தமானது. இந்த உற்பத்தி சக்திகளின் இயல்பை, தன்மையைப் புரிந்து கொள்ள நாம் பிடிவாதமாக மறுத்துக் கொண்டிருக்கும் வரை - இந்த புரிதல் முதலாளித்துவ உற்பத்தி முறையின் அதை பாதுகாப்பவர்களின் உள்ளார்ந்த நம்பிக்கைக்கு எதிரானது - நாம் விரிவாக எடுத்துச் சொல்லியிருப்பதுபோல், இந்த சக்திகள் நாம் இருக்கும்போதும், நமக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கும்; அவை நம் மீது ஆதிக்கம் செலுத்தும். ஆனால், அவற்றின் இயல்பைப் புரிந்து கொண்டால், ஒன்றுபட்டு உழைக்கும் உற்பத்தியாளர்களின் கைகளில், எசமான பிசாசுகளாக இருக்கும் அவற்றை ஆர்வமுள்ள வேலைக்காரர்களாக மாற்ற முடியும். வித்தியாசம் என்னவென்றால், புயலில் உருவாகும் மின்னலில் உள்ள மின்சாரத்தின் அழிவு சக்திக்கும், தந்தி மற்றும் மின்னழுத்த கம்பியில் கட்டுப்பாட்டில் உள்ள மின்சாரத்திற்கும் இடையே இருப்பதுதான்; மனிதனுக்கான சேவையில் உள்ள நெருப்புக்கும், பெருநெருப்புக்கும் உள்ள வேறுபாடுதான். கடைசியாக, இன்றைய உற்பத்தி சக்திகளின் இந்த உண்மையான இயல்பை அங்கீகரித்து, உற்பத்தியின் சமூக அராஜகம், சமூகத்தின், ஒவ்வொரு தனிமனிதரின் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட ஒரு நிச்சயமான திட்டத்தின் அடிப்படையிலான சமூக ஒழுங்குமுறைக்கு இட்டுச் செல்கிறது. பண்டம் முதலில் அதன் உற்பத்தியாளரையும், பின்னர் அதை ஒதுக்கீடு செய்பவரையும் அடிமைப்படுத்தும் முதலாளித்துவ அபகரிப்பு முறையின் இடத்தில், நவீன உற்பத்தி முறைகளின் இயல்பின் அடிப்படையிலான பண்ட ஒதுக்கீடு முறை உருவாகிறது; ஒருபுறம், உற்பத்தியை பராமரிப்பது மற்றும் நீட்டிப்பதற்கான வழியாக நேரடி சமூக ஒதுக்கீடு - மறுபுறம், பிழைத்திருத்தல் மற்றும் அனுபவித்தலுக்கான வழியாக நேரடி தனிமனித ஒதுக்கீடு'. (30)

## 2. கூட்டுப் பண்ணை சொத்தை பொதுச் சொத்தின் நிலைக்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகள்

கூட்டுப் பண்ணை சொத்து, பொதுச் சொத்து அல்ல; அதை பொது ('தேசிய') சொத்து நிலைக்கு உயர்த்தத் தேவையான நடவடிக்கைகள் என்ன?

கடந்த காலத்தில் முதலாளித்துவச் சொத்து விஷயத்தில் செய்தது போல் கூட்டுப் பண்ணைச் சொத்தை தேசியமயமாக்குவது, அதை பொதுச் சொத்தாக பிரகடனப்படுத்த போதுமானது என்று சில தோழர்கள் நினைக்கிறார்கள். அத்தகைய நடைமுறை முற்றிலும் தவறானது; ஏற்றுக்கொள்ள முடியாதது. கூட்டுப் பண்ணை சொத்து சோசலிச சொத்து;

முதலாளித்துவச் சொத்தைப் போல அதை கையாள முடியாது. கூட்டுப் பண்ணை சொத்து என்பது பொதுச் சொத்து அல்ல என்பது உண்மைதான்; அதனால், அது சோசலிச சொத்து அல்ல என்றாகிவிடாது.

தனிநபர்களின் அல்லது தனிநபர்கள் கொண்ட குழுக்களின் சொத்துக்களை அரசின் சொத்தாக மாற்ற, தேசியமயமாக்குவது மட்டுமே, ஒரே ஆகச் சிறந்த வடிவம் என்று இந்தத் தோழர்கள் நம்புகிறார்கள். அது உண்மை அல்ல. டூரிங்குக்கு மறுப்பு நூலில் ஏங்கெல்ஸ் மிகச் சரியாக குறிப்பிடுவதுபோல், தனிச் சொத்தை அரசுத் சொத்தாக மாற்றுவதில் தேசியமயமாக்கம் ஒரே வழியோ, அல்லது ஆகச்சிறந்த வழியோ அல்ல; மாறாக தேசியமயமாக்கம் அதன் துவக்க கட்ட வடிவமே. சந்தேகத்திற்கு இடமின்றி, அரசு நிலவும் வரை, அரசு சொத்தாக மாற்றுவது தேசியமயமாக்கலின் மிக இயல்பான ஆரம்ப வடிவமாகும். ஆனால் அரசு என்றென்றும் இருக்கப் போவதில்லை. உலகின் பெரும்பாலான நாடுகளில் சோசலிசத்தின் செயல்பாட்டுத் தளம் விரிவடையும்போது, அரசு அழிந்துவிடும்; அதன் தொடர்ச்சியாக, தனிநபர்களின் அல்லது தனிநபர்கள் கொண்ட குழுக்களின் சொத்தை அரசு சொத்தாக மாற்றுவது பொருளற்றதாகிவிடும். அரசு அழிந்து போயிருக்கும்; ஆனால் சமூகம் இருக்கும். எனவே, அரசு பொதுச் சொத்தின் வாரிசாக இருக்காது; ஏனெனில் அரசே இருக்காது. அது அழிந்து போயிருக்கும்; ஆனால் சமூகமே, ஒரு மய்ய, வழிநடத்தும் பொருளாதார அமைப்பின் வடிவத்தில் இருக்கும்.

அப்படியிருக்க, கூட்டுப் பண்ணை சொத்துக்களை பொதுச் சொத்தின் நிலைக்கு உயர்த்த என்ன செய்ய வேண்டும்?

கூட்டுப் பண்ணை சொத்துக்களை பொதுச் சொத்தாக மாற்ற, பிரதானமான வழிமுறையாக, இயந்திரங்களில், டிராக்டர் நிலையங்களில் குவிந்துள்ள உற்பத்திக் கருவிகளை, கூட்டுப் பண்ணைகளுக்கு அவர்களது சொத்தாக விற்றுவிடுவதன் மூலம், விவசாயத்தில் முதலீடு செய்வதில் இருந்து அரசை விடுவித்து, இயந்திரங்களின், டிராக்டர் நிலையங்களின் பராமரிப்புக்கும் மேம்பாட்டிற்கும் கூட்டுப் பண்ணைகளையே பொறுப்பாக்க வேண்டும் என்று தோழர்கள் சனினாவும் மற்றும் வென்சரும் சொல்கின்றனர். அவர்கள் பின்வருமாறு சொல்கின்றனர்:

'விவசாய உற்பத்தித் தேவைகளுக்கான முதலீடுகளின் பெரும்பகுதி அரசின் பொறுப்பாக இருக்கும்போது, கூட்டுப் பண்ணை முதலீடுகள் முக்கியமாக கூட்டுப் பண்ணை கிராமத்தின் கலாச்சாரத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நம்புவது தவறானது. கூட்டுப் பண்ணைகள் இந்த முதலீடுகளை முழுவதுமாக செய்து கொள்ளும் திறன் கொண்டவையாக இருக்கும்போது, அரசை இந்தச் சுமையில் இருந்து விடுவிப்பது இன்னும் சரியாக இருக்கும் அல்லவா? அரசு தனது நிதியை முதலீடு செய்ய, நாட்டில் ஏராளமான நுகர்வுப் பொருட்களை உருவாக்க, ஏராளமான நிறுவனங்கள் உள்ளன'.

அவர்கள் தங்கள் முன்மொழிவுக்கு ஆதரவாக பல வாதங்களை முன்வைக்கின்றனர்.

முதலில். கூட்டுப் பண்ணைகளுக்குக் கூட உற்பத்திச் சாதனங்கள் விற்கப்படுவதில்லை என்று ஸ்டாலின் சொல்லியிருப்பதைக் குறிப்பிட்டு, ஸ்டாலினின் இந்தக் கூற்று பற்றி அவர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர்; அரசு, கூட்டுப் பண்ணைகளுக்கு கோடரி, அரிவாள், சிறிய மின்மோட்டார்கள் போன்ற சிறிய உற்பத்திச் சாதனங்களை விற்கிறது. கூட்டுப் பண்ணைகளுக்கு அத்தகைய உற்பத்தி சாதனங்களை அரசு விற்க முடியும் என்றால், இயந்திரங்கள், டிராக்டர் நிலையங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான பெரிய எந்திரங்கள் போன்ற பிற உற்பத்தி சாதனங்களையும் விற்கலாம் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம். விவசாய சட்ட விதிகள்படி, அரசியலமைப்பு விதிகள்படி, அரசு, கூட்டுப் பண்ணைகளுக்கு சிறிய கருவிகளை விற்கிறது; ஆனால் சிறிய கருவிகளையும் இயந்திரம் மற்றும் டிராக்டர் நிலையங்களை உற்பத்தி செய்யும் எந்திரங்கள் போன்ற அடிப்படை விவசாய உற்பத்தி சக்திகளையும், உதாரணமாக, விவசாயத்தில் மிகவும் அடிப்படையான உற்பத்தி சக்தியான நிலத்தையும் ஒரே விதமாக வகைப்படுத்த முடியுமா? நிச்சயமாக அப்படிச் செய்ய முடியாது. கூட்டுப் பண்ணை உற்பத்தி நிகழ்வை சிறிய கருவிகள் எந்த விதத்திலும் தீர்மானிக்காது; அதேசமயம் இயந்திரங்கள் மற்றும் டிராக்டர் நிலையங்களை உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், நிலம் போன்ற உற்பத்தி சக்திகள், நமது தற்போதைய நிலைமைகளில் விவசாயத்தின் நிகழ்வுகளை முழுவதுமாக தீர்மானிக்கின்றன.

உற்பத்திச் சாதனங்கள் கூட்டுப் பண்ணைகளுக்கு விற்கப்படுவதில்லை என்று ஸ்டாலின் சொன்னபோது, அவர் சிறிய கருவிகள் பற்றி குறிப்பிடவில்லை, மாறாக விவசாய உற்பத்திக்கான அடிப்படை உற்பத்தி சக்திகளான, எந்திரங்கள் மற்றும் ட்ராக்டர் நிலையங்களுக்கான எந்திரங்கள் மற்றும் நிலம் ஆகியவை பற்றி குறிப்பிடுகிறார் என்பதை புரிந்துகொள்வது சிரமமல்ல. 'உற்பத்தி சக்திகள்' என்ற வார்த்தைகளை வைத்து விளையாடி, குழப்பத்தில் மாட்டிக் கொள்கிறார்கள் என்பதை கவனிக்காமல், அவர்கள் இரண்டு வெவ்வேறு விஷயங்களை குழப்புகிறார்கள்.

இரண்டாவதாக, வெகுமக்கள் கூட்டுப் பண்ணை இயக்கத்தின் துவக்க காலமான 1929ன் இறுதியிலும், 1930 துவக்கத்திலும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்)ன் மத்திய கமிட்டியும், இயந்திரம் மற்றும் டிராக்டர் நிலையங்களின் விலையை கூட்டுப் பண்ணைகள் மூன்றாண்டுகளில் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவற்றை கூட்டுப் பண்ணைகளின் சொத்துக்களாக மாற்றுவதற்கு இசைவாக இருந்தது என்பதை தோழர்கள் சனினாவும் வென்சரும் சுட்டிக் காட்டுகிறார்கள். அந்த நேரத்தில் கூட்டுப் பண்ணைகள் 'வறுமையில் இருந்ததால்' இதனால் விளைவு ஏதும் இல்லை என்றாலும், இப்போது கூட்டுப் பண்ணைகள் செழிப்புற்றுவிட்டதால், கூட்டுப் பண்ணைகளுக்கு இயந்திரம் மற்றும் டிராக்டர் நிலையங்களை விற்பது என்ற அந்தக் கொள்கைக்கு திரும்புவது நல்லது என்று அவர்கள் கருதுகின்றனர்.

இதுவும் ஏற்றுக்கொள்ள முடியாத வாதமே. இயந்திரம் மற்றும் டிராக்டர் நிலையங்களை கூட்டுப் பண்ணைகளுக்கு விற்க, 1930ன் முற்பகுதியில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்)ன் மத்திய கமிட்டி முடிவு செய்தது. கூட்டுப் பண்ணை தொழிலாளர் குழுவின் பரிந்துரையின் பேரில், ஒரு பரிசோதனையாக, ஒரு முயற்சியாக, அதை விரைவில் மறுபரிசீலனை செய்வதற்கான யோசனையுடன் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் முதல் சோதனையே இந்த முடிவின் பொருத்தமற்ற தன்மையை நிகழ்த்திக் காட்டியது; சில மாதங்களுக்குப் பிறகு, அதாவது 1930ன் இறுதியில், அது ரத்து செய்யப்பட்டது.

கூட்டுப் பண்ணை இயக்கத்தின் பரவலாக்கமும், கூட்டுப் பண்ணைகளை கட்டியெழுப்புவதில் காணப்பட்ட வளர்ச்சியும், விவசாய உற்பத்தியின் அடிப்படை உற்பத்தி சக்திகள் அரசின் கைகளில், எந்திரம் மற்றும் ட்ராக்டர் நிலையங்களின் கைகளில் இருப்பதே கூட்டுப் பண்ணை உற்பத்தியின் அதிஉயர் விரிவாக்கத்தை உறுதி செய்வதற்கான ஒரே வழி என்பதை கூட்டுப் பண்ணை விவசாயிகளையும் தலைமை தாங்குகிற ஊழியர்களையும் ஒப்புக்கொள்ள வைத்தன.

தானியம், பருத்தி, ஆளி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு போன்றவற்றின் உற்பத்தி அதிகரித்து, விவசாய உற்பத்தியில் நமது நாட்டில் காணப்படுகிற பிரம்மாண்டமான பாய்ச்சலால் நாம் அனைவரும் மனநிறைவு பெற்றுள்ளோம். இந்த அதிகரித்த உற்பத்தியின் ஆதாரம் என்ன? நவீன தொழில்நுட்ப உபகரணங்கள், உற்பத்தியின் அனைத்து கிளைகளிலும் செயல்படும் ஏராளமான நவீன இயந்திரங்கள் அதிகரித்ததே இதன் ஆதாரம். இது பொதுவாக இயந்திரங்கள் பற்றிய பிரச்சனை அல்ல; இயந்திரங்கள் இயக்கமற்று இருக்க முடியாது; அதை எல்லா நேரத்திலும் கச்சிதமானதாக வைத்திருக்க வேண்டும்; பழைய இயந்திரங்கள் அகற்றப்பட்டு புதிய எந்திரங்கள் அந்த இடத்தில் மாற்றப்பட வேண்டும்; புதிய எந்திரங்களின் இடத்தில் மேலும் புதிய எந்திரங்கள் வர வேண்டும். இது இல்லாமல், நமது சோசலிச விவசாயத்தின் முன்னோக்கிய அணிவகுப்பு சாத்தியமில்லை; இது இல்லாமல், மிகப்பெரிய அறுவடைகள், அபரிதமான விவசாய விளைபொருட்கள் இருக்க முடியாது. ஆனால், ஆயிரக்கணக்கான சக்கர டிராக்டர்களை அகற்றி, அவற்றுக்குப் பதில் மேலும் திறன்மிக்க டிராக்டர்கள் கொண்டு வர, தொழில் பயிர்களை அறுவடை செய்வதில், பல்லாயிரக்கணக்கான காலாவதியான அறுவடை இயந்திரங்களுக்குப் பதில் புதிய அறுவடை எந்திரங்களை கொண்டு வர, புதிய எந்திரங்களை உருவாக்க என்ன செய்ய வேண்டும்? இதற்கு கோடிகோடியாய் ரூபிள் தேவைப்படும்; ஆறு அல்லது எட்டு ஆண்டுகள் கழித்துதான் இதுவும் திரும்ப வரும். நமது கூட்டுப் பண்ணைகளின் வருமானம் கோடிக்கணக்கில் இருந்தாலும், அத்தகைய செலவினத்தைத் தாங்கும் திறன் அவற்றுக்கு உள்ளதா? இல்லை; அவற்றுக்கு அந்தத் திறன் இல்லை; ஏனெனில் ஆறு அல்லது எட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் திரும்ப எடுக்க முடியும் என்பதால் கோடிகோடியாய் ரூபிளை செலவு செய்யும் நிலையில் அவை இல்லை. இத்தகைய செலவினங்களை அரசால் மட்டுமே ஏற்க முடியும்; ஏனென்றால், அது மட்டுமே, பழைய இயந்திரங்களை அகற்றி, அவற்றைப் புதியதாக மாற்றுவதால் ஏற்படும் இழப்பை ஏற்கும் நிலையில் உள்ளது; ஏனென்றால், ஆறு அல்லது எட்டு வருடங்களுக்குப் பிறகுதான் அந்த நிதி திரும்பும் என்பதால், அரசு மட்டுமே, இத்தகைய நஷ்டங்களைத் தாங்கும் நிலையில் உள்ளது.

இயந்திரம் மற்றும் டிராக்டர் நிலையங்களை கூட்டுப் பண்ணைகளுக்கு அவர்களின் சொத்தாக விற்பதன் விளைவு என்னவாக இருக்கும்? கூட்டுப் பண்ணைகளை பெரும் நஷ்டத்தில் தள்ளி அவற்றை அழித்துவிடுவது, விவசாயத்தில் இயந்திரமயமாக்கலை பின்னுக்குத் தள்ளுவது, மற்றும் கூட்டுப் பண்ணை உற்பத்தியின் வளர்ச்சியை மட்டுப்படுத்துவது ஆகியவையே அதன் விளைவாக இருக்கும்.

எனவே முடிவாகச் சொல்வதென்றால், இயந்திரம் மற்றும் டிராக்டர் நிலையங்களை கூட்டுப் பண்ணைகளுக்கு அவற்றின் சொத்தாக விற்க வேண்டும் என்று முன்வைப்பதன் மூலம், தோழர்கள் சனினாவும் வென்சரும் பழைய பின்தங்கிய நிலைக்குத் திரும்புவதற்கான ஒரு பின்னோக்கிய அடியை பரிந்துரைக்கின்றனர்; வரலாற்றின் சக்கரத்தை பின்னோக்கித் திருப்ப முயற்சிக்கின்றனர்.

தோழர்கள் சனினா மற்றும் வென்சரின் முன்மொழிவை ஏற்றுக்கொண்டு, அடிப்படை உற்பத்தி சக்திகளான இயந்திரம் மற்றும் டிராக்டர் நிலையங்களை கூட்டுப் பண்ணைகளுக்கு அவர்களின் சொத்தாக விற்கத் துவங்குவதாக வைத்துக் கொள்வோம். விளைவு என்னவாக இருக்கும்?

முதலில், இதன் விளைவாக, கூட்டுப் பண்ணைகள் அடிப்படை உற்பத்தி சக்திகளின் உரிமையாளர்களாக மாறும்; அதாவது, நம் நாட்டில் வேறு எந்தத் தொழிலும் இல்லாத விதத்தில், அவற்றின் அந்தஸ்து விதிவிலக்கான ஒன்றாக இருக்கும்; ஏனெனில், தேசியமயமாக்கப்பட்ட நிறுவனங்களுக்குக் கூட அவற்றின் உற்பத்தி சக்திகள்

சொந்தமானவை அல்ல என்பது நமக்குத் தெரியும். ஆக, கூட்டுப் பண்ணைகளின் இந்த விதிவிலக்கான அந்தஸ்தை, எந்த முன்னேற்றத்தின் அடிப்படையில், எந்த வளர்ச்சியின் அடிப்படையில், எப்படி நியாயப்படுத்துவது? அத்தகைய ஓர் அந்தஸ்து, கூட்டுப் பண்ணை சொத்துக்களை பொதுச் சொத்தின் நிலைக்கு உயர்த்த உதவும், நமது சமூகம் சோசலிசத்திலிருந்து கம்யூனிசம் நோக்கி மாறிச் செல்வதை விரைவுபடுத்தும் என்று சொல்ல முடியுமா? அத்தகைய ஓர் அந்தஸ்து, கூட்டுப் பண்ணை சொத்துக்கும் பொதுச் சொத்துக்கும் இடையே ஆழமான இடைவெளியை உருவாக்கக் கூடும், நம்மை கம்யூனிசத்திற்கு நெருக்கமாகக் கொண்டு செல்லாது, மாறாக, நம்மை அதிலிருந்து வெகுதூரம் தள்ளிவிடும் என்று சொல்வது உண்மையாக இருக்குமல்லவா?

இரண்டாவதாக, இதன் விளைவு, பண்ட சுழற்சியின் செயல்பாட்டுத் தளத்தின் விரிவாக்கமாக இருக்கும்; ஏனெனில் விவசாய உற்பத்திக்கான மிகப்பெரிய அளவிலான கருவிகள் அதன் வளையத்தில் வரும். தோழர்கள் சனினாவும் வென்சரும் என்ன நினைக்கிறார்கள்? கம்யூனிசத்தை நோக்கி நாம் முன்செல்வதை முன்னகர்த்த, பண்ட சுழற்சி விரிவாக்கம் கணக்கில் கொள்ளப்பட்டதா? அப்படிச் செய்தால், கம்யூனிசம் நோக்கிய நமது முன்னேற்றம் அதனால் மட்டுப்பட்டுவிடும் என்று சொல்வது உண்மையாக இருக்குமல்லவா?

சோசலிசத்தில் பண்ட சுழற்சியின் பாத்திரத்தை, முக்கியத்துவத்தை தோழர்கள் சனினாவும் வென்சரும் புரிந்து கொள்ளவில்லை என்பதில் அவர்களது அடிப்படை பிழை உள்ளது; சோசலிசத்தில் இருந்து கம்யூனிசம் நோக்கி மாறிச் செல்வதுடன், பண்ட சுழற்சி பொருந்தாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சோசலிசத்தில் இருந்து கம்யூனிசம் நோக்கி மாறிச் செல்வது பண்ட சுழற்சி நிலவும்போதும் சாத்தியம் என்றும், பண்ட சுழற்சி இதற்கு தடையாக இருக்க முடியாது என்றும் அவர்கள் கருதுகிறார்கள் என்று தெரிகிறது. மார்க்சியத்தை போதுமான அளவு பற்றிக் கொள்ளாததில் இருந்து அவர்களது ஆழமான பிழை எழுகிறது.

பண்ட சுழற்சியின் நிலைமைகளுக்குள் செயல்படும் டூரிங்கின் 'பொருளாதார கம்யூனை' விமர்சித்து, ஏங்கெல்ஸ் தனது 'டூரிங்குக்கு மறுப்பு' நூலில், பண்ட சுழற்சி நிலவுவது, 'பொருளாதார கம்யூன்கள்' என்று அழைக்கப்படுவனவற்றை முதலாளித்துவத்தின் மறு உருவாக்கத்தை நோக்கி தவிர்க்க முடியாமல் இட்டுச் சென்றே தீரும் என்பதை ஏற்றுக்கொள்ளும்விதம் காட்டுகிறார். தோழர்கள் சனினாவும் வென்சரும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அது அவர்களுக்குத்தான் கேடு. ஆனால், சோசலிசத்திலிருந்து கம்யூனிசம் நோக்கி மாறிச் செல்வதும், தேவைக்கேற்ப உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கும் கம்யூனிசக் கொள்கையும் எல்லாவிதமான பண்டப் பரிவர்த்தனையையும் தவிர்த்துவிடுகிறது, எனவே, உற்பத்திப் பொருட்கள் பண்டங்களாக மாற்றப்படுவதைத் தவிர்த்துவிடுகிறது, அத்துடன், அவை மதிப்பாக மாற்றப்படுவதையும் தவிர்த்துவிடுகிறது என்ற மார்க்சிய கண்ணோட்டத்தை மார்க்சிஸ்டுகளாகிய நாம் கடைபிடிக்கிறோம்.

தோழர்கள் சனினா மற்றும் வென்சர் ஆகியோரின் முன்வைப்புகள், வாதங்கள் பற்றி இவ்வளவுதான்.

ஆனால், கூட்டுப் பண்ணை சொத்துக்களை பொதுச் சொத்தின் நிலைக்கு உயர்த்த என்ன செய்ய வேண்டும்?

கூட்டுப் பண்ணை ஓர் அசாதாரண வகையான நிறுவனமாகும். இது நிலத்தில் இயங்குகிறது; நீண்ட காலமாக பொதுவில் உள்ள நிலத்தில் விவசாயம் செய்கிறது; நிலம் கூட்டுப் பண்ணையின் சொத்து அல்ல. விளைவாக, கூட்டுப் பண்ணை அது விவசாயம் செய்யும் நிலத்தின் உரிமையாளர் அல்ல.

கூட்டுப் பண்ணை சொத்தின் மூலம் அல்லாது, அரசின் அடிப்படை உற்பத்திச் சாதனங்கள் மூலம் கூட்டுப் பண்ணை செயல்படுகிறது. விளைவாக, கூட்டுப் பண்ணை அதன் அடிப்படை உற்பத்திச் சாதனங்களின் உரிமையாளர் அல்ல.

கூட்டுப் பண்ணை ஒரு கூட்டுறவு நிறுவனமாகும்: இது அதன் உறுப்பினர்களின் உழைப்பைப் பயன்படுத்துகிறது; வேலை நாள் அலகுகளின் அடிப்படையில் அதன் வருமானத்தை அதன் உறுப்பினர்களிடையே விநியோகிக்கிறது; அதன் விதையை அது சொந்தமாக வைத்திருக்கிறது; இது ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட்டு உற்பத்திக்கு செல்கிறது.

அப்படியானால், கூட்டுப் பண்ணைக்கு சொந்தமாக என்ன இருக்கிறது? அது, தன் சொந்த விருப்பத்தின் பேரில், சுதந்திரமாக விற்பனை செய்யும் கூட்டுப் பண்ணை சொத்து எங்கே? தானியங்கள், இறைச்சி, வெண்ணெய், காய்கறிகள், பருத்தி, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, ஆளி போன்ற கூட்டுப் பண்ணையின் உற்பத்திப் பொருட்கள்தான், கூட்டுப் பண்ணையின் சொத்து. கட்டிடங்கள், தனிப்பட்ட முறையில் அவர்கள் வைத்திருக்கும் ஆடு, மாடு, கோழி, கூட்டுப் பண்ணை விவசாயிகளின் வீட்டு மனைகள் ஆகியவை இங்கு கணக்கில் கொள்ளப்படவில்லை. உற்பத்திப் பொருட்களின் கணிசமான பகுதி, கூட்டுப் பண்ணை உற்பத்தியின் உபரி, சந்தைக்குச் சென்று, பண்ட சுழற்சி கட்டமைப்பில் சேர்க்கப்படுகிறது. மிகச் சரியாக, இந்தச் சூழல்தான், கூட்டுப் பண்ணை சொத்துக்களை, பொதுச் சொத்தின் நிலைக்கு உயர்த்தப்படுவதைத் தடுக்கிறது. எனவே மிகச் சரியாக, இந்தப் புள்ளியில் இருந்துதான் கூட்டுப் பண்ணை சொத்துக்களை பொதுச் சொத்தின் நிலைக்கு உயர்த்தும் பணியை எதிர்கொள்ள வேண்டும்.

கூட்டுப் பண்ணைச் சொத்தை பொதுச் சொத்தின் நிலைக்கு உயர்த்துவதற்கு, கூட்டுப் பண்ணை உற்பத்தியின் உபரி, பண்ட சுழற்சியில் இருந்து விலக்கப்பட்டு, அரசு, தொழில் மற்றும் கூட்டுப் பண்ணைகளுக்கு இடையேயான உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனையில் சேர்க்கப்பட வேண்டும். அதுதான் விசயம்.

உற்பத்திப் பொருள் பரிவர்த்தனைக்கான மேம்பட்ட கட்டமைப்பு நம்மிடம் இன்னும் இல்லை. ஆனால் அதுபோன்ற ஒரு கட்டமைப்பின் அடிப்படைக் கூறுகள் விவசாயப் பொருட்களை 'வணிகமயப்படுத்தும்' வடிவத்தில் உள்ளன. ஏற்கனவே நீண்ட காலமாக, பருத்தி விவசாயம், ஆளி விவசாயம், கிழங்கு விவசாயம் மற்றும் பிற கூட்டுப் பண்ணைகளின் உற்பத்திப் பொருட்கள் 'வணிகத்தில்' உள்ளன. அவை முழுமையாக 'வணிகமாக' இல்லை என்பதும், ஓரளவு மட்டுமே வணிகமயப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் ஆயினும், அவை 'விற்பனை செய்யப்படுகின்றன' என்பதும் உண்மைதான். 'வணிகம்' என்பது மகிழ்ச்சியான சொல் இல்லை என்றால், 'உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனை' என்று சொல்லலாம். உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனையின் இந்த அடிப்படைக் கூறுகளை, விவசாயத்தின் அனைத்து கிளைகளுக்கும் விரிவுபடுத்துவதும், அவற்றை ஒரு பரந்த கட்டமைப்பாக வளர்ôத்தெடுப்பதும்தான் கடமையாகும். இந்தக் கட்டமைப்பில் கூட்டுப் பண்ணைகள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு பணம் மட்டுமின்றி, முக்கியமாக அவர்களுக்குத் தேவையான உற்பத்திப் பொருட்களையும் பெறுவார்கள். அத்தகைய கட்டமைப்புக்கு, நகரங்கள், கிராமங்களுக்கு ஒதுக்கும் பொருட்கள் பெரிய அளவில்

அதிகரிக்கப்பட வேண்டும்; எனவே எந்த அவசரமும் இல்லாமல், நகரங்களின் உற்பத்திப் பொருட்கள் பன்மடங்கு பெருகும்போது, இந்த கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஆனால், படிப்படியாக, பண்ட சுழற்சியின் செயல்பாட்டுத் தளத்தை சுருக்கி, உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனையின் செயல்பாட்டுத் தளத்தை விரிவுபடுத்தி, தடையின்றி, தயக்கமின்றி இந்த கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் .

அத்தகைய கட்டமைப்பு, பண்ட சுழற்சியின் செயல்பாட்டுத் தளத்தை சுருக்கி, சோசலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்வதற்கு உதவியானதாக இருக்கும். மேலும், கூட்டுப் பண்ணைகளின் அடிப்படைச் சொத்தை, கூட்டுப் பண்ணைகளின் உற்பத்திப் பொருட்களை, தேசிய திட்டமிடலின் பொதுவான அமைப்புக்குள் கொண்டு வருவதை இது சாத்தியமாக்கும்.

நமது இன்றைய சூழ்நிலையில், கூட்டுப் பண்ணை சொத்துக்களை பொதுச் சொத்தின் அளவிற்கு உயர்த்துவதற்கான யதார்த்தமான, விளைவுமிக்க வழிமுறையாக அது இருக்கும்.

அத்தகைய கட்டமைப்பு கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு சாதகமாக இருக்குமா? சந்தேகத்திற்கு இடமின்றி சாதகமாக இருக்கும். ஏனெனில், பண்ட சுழற்சியில் இருந்ததை விடக் கூடுதல் உற்பத்திப் பொருட்கள், அரசிடம் இருந்து, மேலும் குறைந்த விலையில், கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு கிடைக்கும். அரசாங்கத்துடன் உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனை ('வணிகமயப்படுத்துதல்') ஒப்பந்தங்கள் கொண்ட கூட்டுப் பண்ணைகள், அத்தகைய ஒப்பந்தங்கள் இல்லாத கூட்டுப் பண்ணைகளை விட, ஒப்பற்ற கூடுதல் ஆதாயங்கள் பெறுகின்றன என்பது அனைவருக்கும் தெரியும். நாட்டிலுள்ள அனைத்து கூட்டுப் பண்ணைகளுக்கும் உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனை முறையை விரிவுபடுத்தினால், இந்த ஆதாயங்கள் நமது கூட்டுப் பண்ணை விவசாயிகள் அனைவருக்கும் கிடைக்கும்.

ஜெ.ஸ்டாலின் செப்டம்பர் 28, 1952

## குறிப்புகள்

1. ஃபிரடெரிக் ஏங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, ஆங்கிலப் பதிப்பு. ஃபாரீன் லேங்வேஜஸ் பப்ளிஷிங் ஹவுஸ், மாஸ்கோ, 1954. பக். 158.

2. அதே நூல். பக். 392 - 393.

3. அதே நூல். பக். 392.

4. அதே நூல். பக். 412.

5. வி.அய்.லெனின், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம், ஆங்கிலப் பதிப்பு. ஃபாரீன் லேங்வேஜஸ் பிரஸ், பீகிங், 1969. பக். 151.

6. இந்த புத்தகத்தின் "சோசலிசத்தில் பொருளாதார விதிகளின் இயல்பு" தலைப்பில் பத்தி 16.

7. கார்ல் மார்க்ஸ், மூலதனம், ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 1. அத்தியாயம் 5. பிரிவு 1.

8. மத்தியக் குழுவின் அரசியல் தலைமைக் குழுவுக்கு தோழர் யரோஷென்கோ எழுதிய கடிதம்.

9. மாநாட்டு விவாதங்களில் தோழர் யரோஷென்கோவின் பேச்சு.

10. விவாத செயற்குழுவில் தோழர் யரோஷென்கோவின் பேச்சு.

11. மாநாட்டு விவாதங்களில் தோழர் யரோஷென்கோவின் பேச்சு.

12. கார்ல் மார்க்ஸ், 'கூலி உழைப்பும் மூலதனமும்', கார்ல் மார்க்ஸ் மற்றும் ஃபிரடெரிக் ஏங்கல்ஸின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், ஆங்கிலப் பதிப்பு., எஃப்எல்பிஎச், மாஸ்கோ, 1951. தொகுதி. 1, பக். 83.

13. கார்ல் மார்க்ஸ், 'அரசியல் பொருளாதாரம் மீதான விமர்சனத்திற்கான பங்களிப்புக்கு எழுதப்பட்ட முன்னுரை', கார்ல் மார்க்ஸ் மற்றும் ஃபிரடெரிக் ஏங்கெல்ஸின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், ஆங்கிலப் பதிப்பு, எஃப்எல்பிஎச், மாஸ்கோ, 1951, தொகுதி. 1, பக். 328-29.

14. வி.ஐ. லெனின், 'நமது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிலைப்பாடு மற்றும் கட்சியின் கடமைகள்', சேகரிக்கப்பட்ட படைப்புகள், ரஷ்ய பதிப்பு., தொகுதி. 31.

15. கார்ல் மார்க்ஸ், 'கோதா திட்டத்தின் மீதான விமர்சனம்', கார்ல் மார்க்ஸ் மற்றும் ஃபிரடெரிக் ஏங்கெல்ஸின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், ஆங்கிலப் பதிப்பு, எஃப்எல்பிஎச், மாஸ்கோ, 1951, தொகுதி. 2, பக்கம்.23.

16. ஃபிரடெரிக் ஏங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, ஆங்கிலப் பதிப்பு. ஃபாரீன் லேங்வேஜஸ் பப்ளிஷிங் ஹவுஸ், மாஸ்கோ, 1954. பக். 408

17. அதே நூல், பக். 208.

18. வி.அய்.லெனின், புகாரினின் 'மாறிச் செல்லும் கட்டத்தின் பொருளாதாரம்' பற்றிய விமர்சனக் கருத்துகள், ரஷ்ய பதிப்பு.

19. ஃபிரடெரிக் ஏங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, ஆங்கிலப் பதிப்பு. ஃபாரீன் லேங்வேஜஸ் பப்ளிஷிங் ஹவுஸ், மாஸ்கோ, 1954. பக். 209.

20. கார்ல் மார்க்ஸ், 'கூலி உழைப்பும் மூலதனமும்', கார்ல் மார்க்ஸ் மற்றும் ஃபிரடெரிக் ஏங்கல்ஸின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், ஆங்கிலப் பதிப்பு., எஃப்எல்பிஎச், மாஸ்கோ, 1951, தொகுதி 1, பக். 83.
21. கார்ல் மார்க்ஸ், 'உபரி மதிப்பு கோட்பாடு', கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரடெரிக் ஏங்கெல்ஸ் படைப்புகள், ஜெர்மன் பதிப்பு., தொகுதி 26, பகுதி 2, அத்தியாயம் 18.
22. இந்தப் புத்தகத்தின் "நவீன முதலாளித்துவத்தின் நவீன சோசலிசத்தின் அடிப்படை பொருளாதார விதிகள்" தலைப்பில் பத்தி 14.
23. மாநாட்டு விவாதங்களில் தோழர் யரோஷென்கோவின் பேச்சு.
24. மாநாட்டு விவாதங்களில் தோழர் யரோஷென்கோவின் பேச்சு.
25. V மாறுகிற மூலதனத்தையும், M உபரி மதிப்பையும், C நிலையான மூலதனத்தையும் குறிக்கிறது. சூத்திரத்திற்கு, கார்ல் மார்க்ஸ், மூலதனம், ஆங்கிலப் பதிப்பு, தொகுதி. 2, அத்தியாயம் 20.
26. மாநாட்டு விவாதங்களில் தோழர் யரோஷென்கோ பேச்சு.
27. மத்தியக் குழுவின் அரசியல் தலைமைக் குழுவுக்கு தோழர் யரோஷென்கோ எழுதிய கடிதம்.
28. கார்ல் மார்க்ஸ், மூலதனம், ஆங்கிலப் பதிப்பு, தொகுதி. 2, அத்தியாயம் 20, பிரிவு 6.
29. நிகோலாய் கோகோலின் தி இன்ஸ்பெக்டர் ஜெனரல் நாடகத்தின், மய்ய பாத்திரமான மோசடிக்காரரான, தற்பெருமை பேசுபவரான க்ளெஸ்டகோவ்.
30. ஃபிரடெரிக் ஏங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, ஆங்கிலப் பதிப்பு. ஃபாரீன் லேங்வேஜஸ் பப்ளிஷிங் ஹவுஸ், மாஸ்கோ, 1954. பக். 387-388.